TEACHER'S CARE PUBLICATION
38/23, Vaigundaperumal Koil Street,Kancheepuram- 631502
Mobile : 95665 35080, 9786269980 Land Line : 044-2723 5080

# 2025-2026

# PG TRB

## G.O No. 219 New Syllabus

# தமிழ்



## அலகு-1
## மொழி வரலாறு

*Your Success is Our Goal...*

- திராவிட மொழிகள்
- தமிழ்மொழியின் தொன்மை
- தமிழ்மொழியின் தனித்தன்மை
- தமிழின் கிளைமொழிகள்
- தமிழும் உலகச் செம்மொழிகளும்
- புதைபொருள் ஆய்வு
- பண்பாட்டுப் பரவல்

tcaexamguide
Teacher's Care Academy
www.tcaexamguide.com
tcaexamguide@gmail.com

# தமிழ்

## மொழி வரலாறு

# PG TRB (2025-2026)

## அலகு - 1

## FIRST EDITION

**TEACHER'S CARE PUBLICATION**

**38/23, Vaigundaperumal Koil Street,Kancheepuram- 631502**

**Mobile : 95665 35080, 9786269980 Land Line : 044-2723 5080**

**Branch Office : 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy (76399 67359)**

**Branch Office: Advaitha Ashram Road, New Bus Stand, Salem (93602 68118)**

| உள்ளடக்கம் | ப.எ. |
|---|---|
| **1.1. திராவிட மொழிகள்** | **1** |
| 1.1.1. ஒப்பியல் ஆய்வின் தொடக்கநிலை | 1 |
| 1.1.2. திராவிடம் | 4 |
| 1.1.3. திராவிட மொழிகளின் சிறப்பியல்புகள் | 10 |
| 1.1.4. தென் திராவிட மொழிகள்: | 115 |
| 1.1.5. தென் திராவிட மொழிகளின் சிறப்பியல்புகள் | 18 |
| 1.1.5.1. தென் திராவிட மொழிகளில் தமிழ் | |
| 1.1.5.2. மலையாளம்: | |
| 1.1.5.3. கன்னட மொழி: | |
| 1.1.5.4. இருளா மொழி: | |
| 1.1.5.5. கொடகு மொழி: | |
| 1.1.5.6. கோடா மொழி: | |
| 1.1.5.7. தோடா மொழி: | |
| 1.1.5.8. படகா மொழி: | |
| 1.1.5.9. துளு மொழி: | |
| 1.1.6. வட திராவிட மொழிகள்: | 32 |
| 1.1.6.1. குருக் | |
| 1.1.6.2. மால்டோ | |
| 1.1.6.3. பிராகுயி | |
| 1.1.7. நடுத் திராவிட மொழிகள்: | 36 |
| 1.1.7.1. தெலுங்கு மொழி: | |
| 1.1.7.2. கோண்டி மொழி: | |
| 1.1.7.3. கோண்டா மொழி: | |
| 1.1.7.4. குயி மொழி; | |
| 1.1.7.5. குவி மொழி: | |
| 1.1.7.6. பெங்கோ மொழி: | |
| 1.1.7.7. மண்டா மொழி: | |
| 1.1.7.8. கொலாமி மொழி: | |
| 1.1.7.9. நாய்க்கி மொழி: | |
| 1.1.7.10. பர்ஜி மொழி: | |
| 1.1.8. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்: | 44 |
| 1.1.9. பயிற்சி வினாக்கள் | 50 |

| | |
|---|---|
| **1.2. தமிழ் மொழியின் தொன்மை** | **51** |
| 1.2.1. தமிழின் தோற்றம் | 51 |
| 1.2.2. வடமொழியும் தமிழ் மொழியும் | 52 |
| 1.2.3. தமிழின் தொன்மை | 52 |
| 1.2.4. தொன்மைச்சான்றுகள் | 56 |
| 1.2.5. வடமொழிச்சான்றுகள் | 57 |
| 1.2.6. தமிழ்நாடு | 58 |
| 1.2.7. கல்வெட்டுச் சான்று | 58 |
| 1.2.8. தமிழ்மொழி | 58 |
| 1.2.9. அயல்நாட்டுத் தொடர்பு | 59 |
| 1.2.10. வணிக உறவு | 59 |
| 1.2.11. தமிழின் வளர்ச்சி | 60 |
| 1.2.12. தமிழ் வட்டெழுத்து | 60 |
| 1.2.13. தமிழ்க் கிரந்தம் உதயம் | 61 |
| 1.2.14. தமிழ் இலக்கியங்கள் | 62 |
| 1.2.15. தமிழ் மொழியின் நான்கு நிலைகள் | 62 |
| 1.2.16. தமிழ் மொழியின் வரலாறு | 63 |
| 1.2.17. எழுத்துச்சீர்திருத்தம் | 65 |
| 1.2.18. தமிழின் சிறப்புகள் | 65 |
| 1.2.18.1. பக்தி | |
| 1.2.18.2. இலக்கணச்சிறப்பு | |
| 1.2.18.3. எழுத்து, சொல், வடிவம் | |
| 1.2.18.4. தமிழ் பேசும் நாடுகள் | |
| 1.2.18.5. வழக்கு மற்றும் இலக்கண இலக்கியம் | |
| 1.2.19. தமிழின் பெருமை | 68 |
| 1.2.20. தமிழின் சிறப்பு | 68 |
| 1.2.21. குகைக் கல்வெட்டுக்கள் | 69 |
| 1.2.22. நாணயங்கள் | 70 |
| 1.2.23. தமிழ் மொழியின் தனித்தன்மை | 72 |
| 1.2.24. பயிற்சி வினாக்கள் | 74 |
| **1.3. தமிழ்மொழியின் தனித்தன்மை** | **74** |
| 1.3.1. வடமொழியும் தமிழும் | 74 |

| | |
|---|---|
| 1.3.2. தமிழ் மொழிக்கு உரிய சிறப்பு எழுத்துக்கள் | 75 |
| 1.3.3. அறிஞர்களின் சில கருத்துக்கள் | 77 |
| 1.3.3.1. கமில் சுவலபில் | |
| 1.3.3.2. டேவிட் டபிள்யு மெகால்பின் | |
| 1.3.3.3. வையாபுரிப்பிள்ளை | |
| 1.3.3.4. பொற்கோ | |
| 1.3.3.5. மொழிஞாயிறு பாவாணர் | |
| 1.3.4. சொல்வளம் மிகுந்த தமிழ் | 79 |
| 1.3.4.1. இலையின் நிலை | |
| 1.3.4.2. மலர் என்பதன் பலநிலை | |
| 1.3.4.3. ஓரெழுத்து ஒரு மொழி | |
| 1.3.5. திராவிடமொழிகளின் பொதுப்பண்புகள் | 81 |
| 1.3.5.1. குறில், நெடில் வேறுபாடு | |
| 1.3.5.2. பால்பாகுபாடு | |
| 1.3.5.3. வினைச்சொற்கள் | |
| 1.3.6. தமிழின் தனித்தன்மைகள் | 83 |
| 1.3.7. சில திராவிடமொழிகளின் பழமையான இலக்கிய இலக்கணங்கள் | 84 |
| 1.3.8. திணைக்கோட்பாடு | 84 |
| 1.3.9. பாவியற் கோட்பாடுகள் | 84 |
| 1.3.10. யாப்பியற்கோட்பாடு | 85 |
| 1.3.11. மொழிக் கோட்பாடுகள் | 85 |
| 1.3.12. இலக்கியச் சிறப்பியல்கள் | 85 |
| 1.3.13. பல்துறைப்பெட்டகம் | 86 |
| 1.3.14. உரிமை அரங்கம் | 86 |
| 1.3.15. வரலாற்றுக் களஞ்சியம் | 86 |
| 1.3.16. பண்பாட்டுக் கருவூலம் | 86 |
| 1.3.17. செவ்வியலின் சின்னம் | 87 |
| 1.3.18. மரபின் தூண் | 87 |
| 1.3.19. மொழித்திறன் | 87 |
| 1.3.20. நாடகச்சோலை | 87 |
| 1.3.21. சமுதாய உணர்வு | 88 |
| 1.3.22. பொதுமை நெறி | 88 |

| | |
|---|---|
| 1.3.23. குறும்பாடல்கள் | 88 |
| 1.3.24. பயன்சார்ந்த இயற்கை | 88 |
| 1.3.25. அறிவியல் பேழை | 89 |
| 1.3.26. அழியாத் தன்மை | 89 |
| 1.3.27. உவமைப்பூங்கா | 89 |
| 1.3.28. இந்திய வரலாற்றில் தனித்து நிற்கும் தமிழ்ப்பண்பாட்டு மரபு மூலங்கள் | 89 |
| 1.3.28.1. பக்தியியக்கம் | |
| 1.3.28.2. தத்துவம் | |
| 1.3.28.3. பிறமொழிகளுக்குத் தாயாதல் | |
| 1.3.28.4. பிறமொழிகளின் துணையின்றித் தனித்து இயங்கும் ஆற்றல் | |
| 1.3.28.5. தான் தோன்றிய மண்ணுக்கே உரிய இலக்கியங்களைப் பெற்றிருத்தல் | |
| 1.3.28.6. பன்னாட்டு மொழிகளிலும் சொற்கள் ஊடுருவியிருத்தல் | |
| 1.3.28.7. வேர்ச்சொற்களும் புதுச்சொல்லாக்கமும் | |
| 1.3.28.8. தனக்கே உரிய எழுத்துச் சான்றுகளைப் பெற்றிருத்தல் | |
| 1.3.29. ஞானத்தின் உச்சம்: | 94 |
| 1.3.30. உயிர்-மெய் மொழி: | 94 |
| 1.3.31. வேகமான வளர்ச்சி: | 94 |
| 1.3.32. தமிழ் குறித்து அறிஞர்கள் கருத்து | 94 |
| **1.4. தமிழின் கிளைமொழிகள்** | **95** |
| 1.4.1. மொழியின் தோற்றமும் வளர்ச்சியும் | 96 |
| 1.4.2. பேச்சு மொழியும் எழுத்து மொழியும் | 97 |
| 1.4.3. மொழியியல் | 97 |
| 1.4.4. இலக்கணமும் மொழியியலும் | 97 |
| 1.4.5. தமிழின் இரு வழக்குகள் | 98 |
| 1.4.6. கிளைமொழி | 98 |
| 1.4.7. எல்லைப் புற இருமொழிய ஆய்வு | 98 |
| 1.4.8. மொழி ஆய்வுகளின் வரலாறு | 99 |
| 1.4.9. இந்தியாவில் மொழியியல் ஆய்வு | 99 |
| 1.4.10. கால்டுவெல் | 101 |
| 1.4.11. பரோ, எமினோ | 102 |

| | |
|---|---|
| 1.4.12. கே.வி. சுப்பையா, எல்.வி. இராமசாமி ஐயர் | 103 |
| 1.4.13. கமில் சுவலபில் | 103 |
| 1.4.14. ஜி.எ. கிரியர்சன், பி.எச்.கிருஷ்ணமூர்த்தி | 104 |
| 1.4.15. தெ.பொ.மீ., மு.வ. | 104 |
| 1.4.16. மொழியாய்வில் பல்கலைக்கழகங்களின் பங்கு | 105 |
| 1.4.17. மொழியாய்வில் கிளைமெழி பெறும் இடம் | 105 |
| 1.4.18. மரபிலக்கணங்களில் கிளைமொழி ஆய்வு | 105 |
| 1.4.19. கல்வெட்டுகளும் கிளைமொழிகளும் | 107 |
| 1.4.20. தற்காலக் கிளைமொழிகளின் ஆய்வுநிலை | 107 |
| 1.4.21. எல்லைப்புற இருமொழிய ஆய்வு | 109 |
| 1.4.22. தமிழக வடஎல்லையின் இருமொழிய ஆய்வு | 110 |
| 1.4.23. தமிழக ஆந்திர எல்லையில் வட்டாரக் கிளைமொழி ஆய்வு | 111 |
| 1.4.24. தமிழகத்தில் வட்டாரக் கிளைமொழி | 111 |
| 1.4.25. வட்டாரக் கிளைமொழியும் சமூகக் கிளைமொழியும் | 112 |
| 1.4.26. கிளைமொழியின் அடிப்படையில் வட்டாரப் பாகுபாடு | 113 |
| 1.4.27. வடக்குக் கிளைமொழி | 115 |
| 1.4.28. கிளைமொழியின் மூன்று நிலைகள் | 115 |
| 1.4.29. ஒலிமாற்றம் | 116 |
| 1.4.30. மெய்யொலி மாற்றங்கள் | 122 |
| 1.4.31. சொல் மாற்றம் | 133 |
| 1.4.32. சொற்பொருள் மாற்றம் | 138 |
| 1.4.33. இலக்கண மாற்றம் | 139 |
| 1.4.34. பொதுப் பேச்சுத்தமிழும் கிளைமொழியும் | 145 |
| 1.4.35. கிளைமொழியும் இருமொழியமும் | 145 |
| 1.4.36. தமிழர் - தெலுங்கர் மொழி உறவு | 145 |
| 1.4.37. தமிழில் தெலுங்கு மொழியின் தாக்கம் | 146 |
| 1.4.38. வடக்குக் கிளைமொழி சிதைந்த வடிவமா? | 146 |
| 1.4.39. வடக்குக் கிளைமொழியும் கிளைமொழி | 146 |
| 1.4.40. வட்டாரக் கிளைமொழியும் பண்பாட்டுக் கூறுகளும் | 147 |
| 1.4.41. வடக்குக் கிளைமொழியின் வழக்காறுகள் | 148 |
| 1.4.42. கிளைமொழி ஆய்வும் அகராதி உருவாக்கமும் | 150 |
| 1.4.43. கிளைமொழி அகராதியின் தேவை | 151 |

| | |
|---|---|
| 1.4.44. கிளைமொழி அகராதியின் பயன்கள் | 151 |
| 1.4.45. கிளைமொழி அகராதியாக்கத்தில் காணப்படும் சிக்கல்கள் | 152 |
| 1.4.46. வட்டாரக் கிளைமொழியின் இன்றியமையாமை | 154 |
| 1.4.47. எழுத்து வழக்கிற்குத் தேவையான வட்டார வழக்கு | 154 |
| 1.4.48. சமூகவியல் ஆய்வாளருக்கு ஏற்படும் தேவை | 154 |
| 1.4.49. வெளிநாட்டினருக்கு ஏற்படும் தேவை | 154 |
| 1.4.50. சமூக மொழியியலாளருக்கு ஏற்படும் தேவை | 155 |
| 1.4.51. பல்வேறு துறையினருக்கு ஏற்படும் தேவை | 155 |
| 1.4.52. பொருள் மயக்கத்தைத் தவிர்த்தல் | 155 |
| 1.4.53. கிளைமொழி அகராதிக்கு வளம் தரும் சொற்கள் | 155 |
| 1.4.54. பழமைக் கூறுகளைப் பாதுகாத்தல் | 156 |
| 1.4.55. கிளைமொழி அகராதியின் பயன்கள் | 156 |
| 1.4.56. வடக்குக் கிளைமொழி ஆய்வும் பயனும் | 158 |
| 1.4.57. மொழியின் வகைகள் | 158 |
| **1.5. தமிழும் உலகச்செம்மொழிகளும்** | **165** |
| 1.5.1. மொழி அறிஞர்களின் கருத்துக்கள் | 166 |
| 1.5.2. உலகச் செம்மொழிகள் | 167 |
| 1.5.3. இந்தியச் செம்மொழிகள் | 168 |
| 1.5.4. தமிழ்ச் செம்மொழி வரலாறு | 178 |
| 1.5.5. தமிழும் செவ்வியல்; இலக்கியமும் | 189 |
| j1.5.6. பயிற்சி வினாக்கள் | 191 |
| **1.6. புதை பொருள் ஆய்வு** | **191** |
| 1.6.1. அகழாய்வு வகைகள் | 193 |
| 1.6.2. புதைபொருள் ஆராய்ச்சி | 201 |
| 1.6.3. ஆராய்ச்சிக்குரிய இடங்கள் | 203 |
| 1.6.4. இந்தியாவில் ஆராய்ச்சி | 209 |
| 1.6.5. தமிழகத்தில் நடைபெற்ற முக்கிய அகழாய்வுகள் | 210 |
| 1.6.6. நாணயங்கள் | 218 |
| 1.6.7. தமிழி எழுத்துப் பொறிப்புகள் | 218 |
| 1.6.8. ஆதிச்சநல்லூர் தொல்லியல் களம் | 220 |
| 1.6.9. தமிழ்நாடு அரசு தொல்லியல் தூறை அகழாய்வு மேற்கொண்ட இடங்களின் தொல்லியல் விவரங்கள் | 226 |

| | |
|---|---|
| **1.7. பண்பாட்டுப் பரவல்** | **241** |
| 1.7.1. அத்திரம் பாக்கம் | 242 |
| 1.7.2. குடியம் | 243 |
| 1.7.3. பையம்பள்ளி | 243 |
| 1.7.4. ஆதிச்சநல்லூர் | 244 |
| 1.7.5. அரிக்கமேடு | 244 |
| 1.7.6. கொற்கை | 245 |
| 1.7.7. கரூர் | 247 |
| 1.7.8. உறையூர் | 247 |
| 1.7.9. அழகன்குளம் | 248 |
| 1.7.10. காவிரிப் பூம்பட்டினம் | 248 |
| 1.7.11. காஞ்சிபுரம் | 250 |
| 1.7.12. கங்கைகொண்ட சோழபுரம் | 250 |
| 1.7.13. வல்லம் | 251 |
| 1.7.14. கொடுமணல் | 251 |
| 1.7.15. திருக்காம்புலியூர், அழகரை | 253 |
| 1.7.16. அழகன்குளமும் அயல்நாட்டுத் தொடர்பும் | 253 |
| 1.7.17. ரோமானியத் தொடர்பு | 255 |
| 1.7.18. கிரேக்கத் தொடர்பு | 256 |
| 1.7.19. எகிப்தியத் தொடர்பு | 256 |
| 1.7.20. அரேபியத் தொடர்பு | 256 |
| 1.7.21. இலங்கைத் தொடர்பு | 257 |
| 1.7.22. மௌரியர் தொடர்பு | 257 |
| 1.7.23. திருக்கோயிலூர் | 258 |
| 1.7.24. வரலாற்றில் அல்லூர் | 262 |
| **முக்கிய வினாக்களின் பெட்டகம்** | **268** |



TCA APP DOWNLOAD
செய்து விடைகளை
காணவும்

TCA

## பாடத்திட்டம் (Syllabus)

**மொழி வரலாறு**

**திராவிட மொழிகள், தமிழ்மொழியின் தொன்மை, தமிழ்மொழியின் தனித்தன்மை, தமிழின் கிளைமொழிகள், தமிழும் உலகச் செம்மொழிகளும், புதைபொருள் ஆய்வு, பண்பாட்டுப் பரவல்**

### பார்வை நூல்கள்

1) பழந்தமிழும் கிளை மொழிகளும் - முனைவர் கலைவாணி
2) ஆய்வில் பூத்த மலர்கள் - அ அப்துல் மஜீத்
3) உலக செவ்வியல் மொழிகளின் வரிசையில் தமிழ் - டாக்டர் வா. செ. குழந்தைசாமி
4) தமிழக அகழாய்வுகள் - முனைவர் தா ஸ்ரீ ஸ்ரீதர், முனைவர் சீ. வசந்தி
5) திராவிட மொழிகளின் ஒப்பாய்வு (ஓர் அறிமுகம்) டாக்டர் ஜி. ஜான் சாமுவேல்


**PG TRB TAMIL PREVIOUS YEAR SOLVED QUESTION PAPER**

**2022 (12-02-22 FN) & 2022 (12-02-22 AN)**

**2019 (29-09-2019 FN), 2017 & 2015**

**ஆகியவற்றின் விடைகள் மற்றும் விரிவான விளக்கங்களை புத்தக வடிவில் பெற்றுக் கொள்ள தொடர்புக் கொள்ள வேண்டிய அலைபேசி எண்கள்:**

**95665 35080; 97862 69980;**

**93602 68118; 76399 67359**




**TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM**

**TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER**

**HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL,**
**SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080**
**B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018**
**B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem**
**Trichy : 76399 67359 Salem : 93602 68118**

# PG -TRB TAMIL - UNIT 1

## 1.1. திராவிட மொழிகள்

- திராவிட மொழிகள் பெரும்பாலும் தென்னாசியாவில் பேசப்படும் 86 மொழிகளை உள்ளடக்கிய ஒரு மொழிக் குடும்பமாகும்.
- இம்மொழிகளை 215 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பேசுகின்றனர்.
- இவை தெற்கு, தென்-மத்தி, மத்தி, வடக்கு என நான்கு குழுக்களாகப் பிரிக்கப்படுகின்றன.
- இவற்றில், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகியன இந்திய அரசியலமைப்புச் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- இந்நான்கு மொழிகளும் முறையே தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கருநாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களின் அலுவல் மொழிகளாகத் திகழ்கின்றன.
- தென்னிந்திய மொழிகள்பற்றி ஆராய்ந்து, **'திராவிட அல்லது தென்னிந்திய மொழிக் குடும்பத்தின் ஓர் ஒப்பிலக்கணம்' என்ற நூலை 1856-இல்** எழுதிய இராபர்ட்டு கால்டுவெல். **(PG –TRB – 2005 -2006)**
- இந்த நான்கு மொழிகளுடன், தென்னிந்தியாவிலிருந்த வேறு சில மொழிகளையும் சேர்த்து, அவற்றைச் சுட்டுவதற்காகத் 'திராவிட' என்ற சொல்லை உருவாக்கினார்.
- பின்னர் வந்த ஆய்வாளர்கள், திராவிட மொழிகளைச் சேர்ந்த மேலும் சில மொழிகள், மத்திய இந்தியா, வட இந்தியா, பாகித்தானிலுள்ள பலூச்சித்தான், நேபாளம் ஆகிய இடங்களில் வழங்கி வருவதை எடுத்துக்காட்டினர்.
- திராவிட மொழி சொற்பிறப்பியல் அகராதியை வெளியிட்டவர்கள் **எமனோ, பர்ரோ** ஆகியோர் ஆவர்.(PG –TRB -2019)

### 1.1.1. ஒப்பியல் ஆய்வின் தொடக்கநிலை

- சமஸ்கிருத மொழியை ஆராய்ந்த வில்லியம் ஜோன்ஸ் (William Jones) என்னும் அறிஞர் சமஸ்கிருத மொழியானது ஏனைய ஐரோப்பிய மொழிகளோடு தொடர்புடையது என்பதை முதன் முதலில் விளக்கிக் காட்டினார்.

❖ அவருக்குப் பின்னர் கி.பி. 1816. ஆம் ஆண்டில் பேராசிரியர்கள் பாப் (Bopp), ராஸ்க் (Rask), கிரிம் (Grimm) என்னும் மொழி நூலறிஞர்கள் இத்துறையில் அரிய பல ஆய்வுகளை நடத்திக் கீழ்க்கண்ட முடிவுகளுக்கு வந்தனர்.

❖ (1) வடமொழி (சமஸ்கிருதம்). ஜெர்மன் மொழி போன்ற ஒன்றோடொன்று தொடர்புடைய அனைத்து மொழிகளும் இந்தோ ஐரோப்பிய மொழி (Indo-European Language) என்னும் மூல மொழியிலிருந்து பிரிந்தவை.

❖ (2) இம்மொழிகளைப் பேசிய மக்கள் சமுதாய, பொருளாதார காரணங்களால் உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் பிரிந்து சென்று பரந்தபோது பல்வேறு கிளைமொழிகள் தோன்றி வளரத் தொடங்கின.

❖ (3) இந்நிலையில் இந்தோ-ஐரோப்பிய மொழி.

1. இந்தோ இராணியன் (Indo-Iranian),
2. ஆர்மீனியன் (Armenian),
3. பால்தோஸ்லாவிக் (Balto-slavic).
4 அல்பேனியன் (Albanian),
5. ஹெலனிக் (Hellenic),
6.இத்தாலி (Italic).
7. கெல்டிக் (Celtic) மற்றும்
8. ஜெர்மானிக் (Germanic)

TCA

என்னும் எட்டுப் பிரிவுகளாகப் பிரிந்து வளர்ந்தது. **(PG –TRB -2022)**

❖ இவ்வாறு ஒன்றுக்கொன்று தொடர்புடைய பல மொழிகளுக்கு இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பம் எனப் பெயரிட்டு, இம்மொழிகளை ஒப்பிட்டு ஆராயும் ஆய்வுமுறை ஐரோப்பாவில் தொடங்கியது.

❖ இம்மொழிகளை ஆய்ந்த பேராசிரியர் கிரிம் என்பவர் அவைகளுக்கு இடையே உள்ள ஒலித்தொடர்பு, ஒலிமாற்றம் ஆகியவற்றை சில விதிமுறைகளைக் கொண்டு விளக்கினார்.

❖ இம்மொழிகளை ஆய்ந்த அறிஞர்களுன் பேராசிரியர் ராஸ்க் என்பவர் மொழிகளை வரையறுத்து, இத்தோ-ஐரோப்பிய அவற்றினியல்புகளைத் தெளிவுறுத்தி ஆய்வுக் கட்டுரையை கி.பி. 1819.இல வெளியிட்டார்.

❖ இவர் சமஸ்கிருத மொழியை ஆய்த்தபோது அதனோடு தொடர்பில்லாத பல சொற்கணைப் பிரித்தறிந்து அவற்றை மலபார் மொழிச் சொற்கள்' என்று குறிப்பிட்டார்.

❖ இக்காலந்தொட்டு இத்தகைய மொழிக் குடும்பம் பற்றிய ஆய்வில் பல்வேறு அறிஞர்களும் ஈடுபடத் தொடங்கினர்.

❖ இவர்கள் இந்தியாவில் வழங்கும் மொழியினங்களை ஆரியம், திராவிடம், முண்டா, திபத்தோசினம் என்று பல்வேறு மொழிக் குடும்பங்களாகப் பிரித்து ஆராய முற்பட்டனர்.

## திராவிட மொழி ஆய்வின் தொடக்க நிலை

❖ தென்னித்தியப் பகுதிகளில் பெரும்பாலும் வழங்கப்பட்டுவரும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய 25 மொழிகளைத் திராவிட மொழிகள் என்று அழைக்கின்றோம்.

- ❖ இவற்றுள் பிராகுயி மொழி வட இந்தியாவிலுள்ள பலுச்சிஸ்த்தான் பகுதிகளில் பேசப்பட்டு வருகின்றது.
- ❖ குருக். மால்டோ போன்ற சில மொழிகளும் வட இந்தியப் பகுதிகளில் பேசப்படுகின்றன. திராவிட மொழிக் கல்வியும், இனக்கல்வியும் இன்று பல்கிப்பெருகி வளர்ந்துள்ளது. எனினும் தொடக்கநிலையில் அதன் ஆய்வு தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய ஒரு சில மொழிகளைப் பற்றியதாகவே இருந்தது.
- ❖ கி.பி. 1816-இல் கிழக்கித்தியக் கம்பெனியைச் சார்ந்த பேராசிரியர் **பிரான்சிஸ் எல்லிஸ்** (Francis. Whyte Ellis) என்பவர். பேராசிரியர் A.D. கேம்பல் (A.D. Campbell) என்பவர் எழுதிய தெலுங்கு மொழி இலக்கணம் (A Grammar of the Teloogoo Language) என்னும் நூலுக்கு எழுதிய முன்னுரையில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிகளும் ஒரு தனிக்குடும்பத்தைச் சார்ந்தன என்று கூறி அவற்றிற்கிடையேயுள்ள தொடர்பினைச் சுட்டிக் காட்டினார்.
- ❖ 19-ஆம் நூற்றாண்டில் வடமொழியை ஆராய்ந்த **ராஸ்க்** என்பவர் சமஸ்கிருதச் சொற்களிலிருந்து வேறுபட்ட சொற்கள் சிலவற்றைப் பிரித்து அவை மலபார் மொழிகளுக்குரிய (திராவிட மொழிகள்) சொற்கள் என்று கூறிச் சென்றார்.**(PG –TRB - 2022)**
- ❖ கி.பி. 1844இல் கிறிஸ்தவ லாசர் என்பவர் தென்னிந்தியாவில் ஒரு தனி மொழிக் குடும்பமாகத் திராவிட மொழிக் குடும்பத்தைச் சுட்டிக் காட்டினார்.
- ❖ இக்காலத்தில் சிராம்பூரில் வாழ்ந்த கிறிஸ்தவ மதப் பாதிரியான வில்லியம் கேரி (William Carey) என்பவர் தமிழ்,தெலுங்கு போன்ற மொழிகள் தனிக்குடும்பத்தைச் சார்ந்தன என்றும் அவை வட இந்திய மொழிகளிலிருந்து வேறுபட்டவை என்றும் நிறுவிச் சென்றார்.
- ❖ இதையடுத்து பேராசிரியர் ஸ்டீவன்சன் (Stevenson 1841-44) என்பவர் வட மொழி தவிர்த்த ஏனைய மொழிகளை ஆய்ந்து தென்னிந்திய மொழிகள் தனிக்குடும்பத்தினைச் சார்ந்தன என்றார்.

95665 35080

- ❖ இதற்கு முன்னர் பேராசிரியர் R.E. ராபர்ட்ஸ் (R.E. Roberts -1779) என்பவர் பேச்சுவழக்கில் மட்டுமுள்ள மால்டோ மொழி பற்றி ஆய்ந்து கட்டுரை ஒன்றினை எழுதிச் சென்றார்.
- ❖ தோடா மொழி பற்றி பேராசிரியர் ஸ்மிட் (B. Schmidt- 1837) என்பவரும்,பிராகுயி மொழி பற்றி பேராசிரியர் லீச் (R.Leech- 1838) என்பவரும், பல ஆய்வுகளை மேற்கொண்டனர்.
- ❖ இவர்களைத் தொடர்ந்து தொடக்க நிலையில் கோண்டி மொழி பற்றி வாய்சே (Voysey - 1844) என்பவரும் படகா மொழிபற்றி M. பஹ்லர் (M. Buhler-1849) என்பவரும்,குயி மொழி பற்றி ஜான் பெர்சிவல் (John Percival Frye -1851) என்பவரும் ஆய்ந்தனர்.

- ❖ இந்நிலையில் H.B. ஹாட்ஜன் (H.B. Hodgson) என்பவர் 1848, 1856 ஆகிய ஆண்டுகளில் நடு இந்தியாவிலும், இமயமலைப் பகுதிகளிலும்.
- ❖ தென்னிந்தியப் பகுதிகளிலுமுள்ள பழங்குடி மக்களின் சொற்கள் பலவற்றை எடுத்துக்காட்டி, அவை தென்னிந்தியாவிலுள்ள மொழிகளின் இனத்தவை என்று சுட்டிச் சென்றார்.
- ❖ அதோடு பேராசிரியர் மாக்ஸ்முல்லர் (Max Muller) என்னும் மொழி நூல் பேரறிஞர் தென்னிந்திய மொழிகளை 'நிஷத மொழிகள்' (Nishada Languages) என்று பெயரிட்டு அவை வடமொழியிலிருந்து மாறுபட்டவை என்று சுட்டிக் காட்டினார்.

## 1.1.2. திராவிடம்

- ❖ திராவிடம் என்பதைப் **பதினெண்பாடைகளில் (NTA- JUNE 12)** ஒன்றான **சேர்ந்தன் திவாகரன்** குறிக்கின்றது.
- ❖ திராவிடம் என்னும் சொல்லை **தாயுமானவர்** ஆண்டு உள்ளார்.
- ❖ எனினும் அது மொழியையும் மக்களையும் நாட்டையும் குறிப்பதாக உலகோர் பலர் குறிப்பிட்டுள்ளனர்.
- ❖ பிளைனி **"தார்தே"** என்று குறிப்பிடுவது **திராவிடம்** என்றும் **'துரோபினோ'** என அவர் சுட்டுவது **திராவிட நாடு** என்றும் **பெரிப்ளூஸ் 'டிமிரிகா'** என குறிப்பது **தமிழகம்** என்றும் **தாலமி 'லிமிரிகே'** என குறிப்பது **தமிழகம் என்றும் யுவான்சுவாங் ' திலோபிடு '** என குறிப்பது **திராவிட நாடு** என்றும் கூறுவர். **(NTA- JUNE 12)**
- ❖ திராவிடம் எனும் மொழிக் குடும்பத்திற்கு இப்பெயரை முதன் முதல் ஆங்கிலத்தில் **கால்டுவெல் 1856** பயன்படுத்தினார். **(NTA- JUNE 12)(PG – TRB – 2002-2003)**
- ❖ பின்னர் **குண்டர்ட் 1872** மலையாளத்திலும் **கிட்டல் 1894ல் கன்னடத்திலும் மாக்ஸ் முல்லர் ஜெர்மனிலும்** இச்சொல்லை இப் பொருளில் பயன்படுத்தி இருந்தனர்.
- ❖ திராவிட மொழிகள் வடமொழியிலிருந்து வேறானவை. **(NTA- JUNE 13)**
- ❖ இந்தியாவிற்கு வெளியிலும் வழங்குபவை. **(NTA- JUNE 13)**எல்லிசு கால்டுவெல் முதலானோரால் ஆராயப்பட்டவை.
- ❖ **(NTA- JUNE 13)**சிந்து சமவெளியில் வழங்கிய பொன் மொழியோடு நெருங்கிய தொடர்புடையவை. **(NTA- JUNE 13)**

TCA

### திராவிடம் சொல் பயன்பாடு

- ❖ தென்னிந்தியப் பகுதிகளில் வழங்கப்படும் திராவிட மொழிகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. அவை தனிப்பட்ட பொது இலக்கண அமைப்பைப் பெற்றுள்ளன. வழங்கும் இடத்தால் ஒரு நெருக்கத்தையும் கொண்டுள்ளன.

❖ வேர்ச்சொற்கள் இம்மொழிகளில் பொதுவாகவே உள்ளன. இவை ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை. மேனாட்டறிஞர்கள் மலபார் மொழிகள் என்றும் தமுலிக் என்றும் இம்மொழிகளை வழங்கினர்.

❖ திராவிட சொற்களை **மலபார்மொழி** சொற்கள் என குறிப்பிட்டவர் **ராஸ்க்** என்பவர் ஆவார். **(PG –TRB-2019)** இவற்றுள் பழமையும். திருத்தமும் பெற்ற உயர்தனிச் செம்மொழியாகத் திகழ்வது தமிழ்.

❖ அதன் பெயராலேயே இவற்றைக் குறிப்பதில் தவறு ஏதும் இல்லை. எனினும், தமிழ் என்பது குறிப்பிட்ட ஒரு மொழியின் பெயராக இருப்பதால் திராவிடம் என்ற சொல்லைத் தான் கையாளுவதாகக் கால்டுவெல் கூறுவார்.

❖ திராவிட என்ற வடசொல்லுக்கு Dramida, Dravida, Dra-vida என்று மூன்று வடிவங்கள் உள்ளன. இப்பெயரைத் தமக்கு முன் யார் யார் பயன்படுத்தியுள்ளனர் என்றும் கால்டுவெல் குறிப்பிட்டுள்ளார்.

❖ கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் வடமொழி எழுத்தாளர் குமாரில பட்டர், தென்னிந்திய மொழி இனத்தை. 'ஆந்திர-திராவிட பாஷா' என்று குறித்துள்ளார்.

❖ மனு சுமிருதியில் தென்னிந்திய மக்கள். **'திராவிடர்'** என்ற பொதுப்பெயரால் சுட்டப்பட்டுள்ளனர்.

❖ கி.பி. 1854 இல் வாழ்ந்த பாபு இராசேந்திரலால் என்னும் மொழியியலறிஞர். **'திராவிடி'** என்ற பெயரால் தென்னிந்திய மொழிகளைக் குறிக்கின்றார்.

❖ இரவீந்திரநாத தாகூர் எழுதிய தேசீய கீதத்திலும் **'திராவிட'** என்ற சொல்லைப் பரந்த நிலையிலேயே ஆண்டுள்ளார்.

95665 35080

❖ தென்னிந்திய மொழி இனங்களையும், மக்களையும் சுட்டுவதற்குத் திராவிடம் என்ற பெயரைக் கையாண்டுள்ளமை தெளிவு.

❖ இந்தோ-ஆரிய மொழிகளின் தாக்குரவு திராவிட மொழிகளைப் பொறுத்த வரையில் சொற்களின் நிலையில் தான் பெருமளவிற்குக் காட்சி தருகின்றது.

❖ இன்றைய நிலையில் திராவிட மொழிக் குடும்பம் உலக மொழிக் குடும்பங்கள் வரிசையில் ஆறாவது அல்லது ஏழாவது இடத்தைப் பெறுகின்றது.

❖ இந்தியாவில் வழங்கும் நான்கு மொழிக் குடும்பங்களுள் இது ஒன்றே முழுமையான இந்திய நாட்டு மொழிக் குடும்பமாகக் கருதப்படுகிறது.

## மூலத் திராவிடம் அல்லது தொல் திராவிடம்

❖ திராவிட மொழிகள் அனைத்தும் ஒரு மொழியிலிருந்து தோன்றியவை. எல்லாத் திராவிட மொழிகளுக்கும் மூலமாக இருந்த மொழியை மூலத் திராவிடம் அல்லது தொல் திராவிடம் எனலாம்.

❖ அதிலிருந்தே தமிழ், தெலுங்கு முதலான மொழிகள் தோன்றியிருத்தல் வேண்டும். அந்த மூலமொழி இன்று வழக்கில் இல்லை.

❖ எனினும் அதிலிருந்து தோன்றிய திராவிடச் சொற்களை ஒப்பிட்டு, பல்வேறு விதிகளை உருவாக்கி, தொல்மொழி இன்ன வடிவத்தில்தான் இருந்திருக்க வேண்டும் என்று நிர்ணயித்துள்ளனர். இதை மீட்டுருவாக்கம் என்பர்.

❖ மீட்டுருவாக்கத்தின் மூலம் தொல்திராவிடம் இப்படித்தான் இருந்தது என்று நிர்ணயித்துள்ளனர்.

1) திராவிட இனமொழிகளை ஒருங்கிணைத்துப் பரிசீலித்தல்

2) திராவிட மொழிகளுக்கு இடையிலான பொதுமைக் கூறுகளைக் கண்டறிதல்.

3) மொழிகளின் தனித்தன்மைகளை விளக்குதல்

4) தொல் வடிவத்தைக் காணுதல்

5) தொல் வடிவத்துடன் இனமொழிகளின் கூறுகளை ஒப்பிடுதல்.

TCA

❖ என்று மொழிநூலார் ஆய்கின்றனர். ஆனால் மூலத் திராவிடமொழி என்பது மொழிநூலாரின் ஊகமே தவிர முடிந்த முடிவு அன்று, எமனோ மீட்டுருவாக்கம் மூலம் தொல் திராவிட மொழியின் தன்மைகளை ஆய்ந்துள்ளார்.

**டாக்டர் கால்டுவெல்**

❖ கி.பி. 1856-இல் **திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்வின் தந்தை** என்று போற்றப்படும் டாக்டர் கால்டுவெல் (R. Caldwell) இம் மொழிகளைத் திராவிடம் என்னும் பெயரால் அழைத்தார்.

❖ அவர் இந்திய மொழிகளில் திராவிட மொழிகள் ஒரு தனிக் குடும்பத்தைச் சார்ந்தவை என்றும், அவை இந்தோ-ஐரோப்பிய மொழிகளோடு தொடர்புடையன அல்ல என்றும் நிறுவினார்.

❖ அவர் தென்னிந்தியாவிலுள்ள பண்பட்ட மொழிகளான (Cultivated Languages) தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளோடு சில பண்படாத மொழிகளும் (Uncultivated Languages) திராவிட இனத்தோடு உறவுடையன என விளக்கினார்.

❖ வெளிநாட்டு மொழிகளாகிய சித்திய மொழிகளோடு திராவிட மொழிகள் தொடர்புடையன என்பதையும் நிலைநாட்டித் தம் ஆய்வினை 1856இல் நூலாக வெளியிட்டார்.

❖ டாக்டர் கால்டுவெல்லைப் போன்று பேராசிரியர்கள் **மாக்ஸ்முல்லர், F.O. ஸ்கிரேடர்** (F.O. Schrader) என்பவர்களும் திராவிட மொழிகள் சித்திய மொழிகளோடு உறவுடையன் என்று நிறுவ முயன்றனர்.

❖ டாக்டர் கால்டுவெல் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகிய ஐந்து

மொழிகளையும் பண்பட்ட மொழிகளாகவும் தோடா கோடா, கோண்டு,கூ என்ற நான்கையும் பண்படாத மொழிகளாகவும் கருதினார்.

❖ பிராகுயி. மால்டோ போன்ற மொழிகளைச் சுட்டிச் சென்றாரே தவிர அவற்றைப் பற்றிய சிறப்பாராய்ச்சியிளை அவர் மேற்கொள்ளவில்லை.

❖ 1875-இல் வெளியிட்ட பதிப்பில் முன்னர் திருந்திய மொழிகளாகக் குறிப்பிட்ட ஐந்தோடு கொடகு மொழியினையும், திருந்தாத மொழிகளோடு ராஜ்மகால், ஓராவோன் ஆகிய மொழிகளையும் அவர் இணைத்தார்.**(PG –TRB -2001)**

❖ இரண்டு 'அகர' உயிர்களின் இணைவு 'ஆகாரம்' என்று கூறியவர் **கால்டுவெல்** ஆவர்.**(PG –TRB -2019)**

❖ டாக்டர் கால்டுவெல் ஒப்பிலக்கணம் எழுதிய காலத்தில் இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பம் தவிர்த்த ஏனைய மொழிக் குடும்பங்களில் ஒப்பியல் ஆய்வு அதிக அளவிற்கு வளர்ச்சியடைய வில்லையென **ஜுல்ஸ்பிளாக்** (Jules Bloch) குறிப்பிடுகின்றார்.

❖ டாக்டர் கால்டுவெல் தனது நூலை வெளியிடுவதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்னர்தான் **ஸ்லாவ் (Slav), கெல்டிக்** (Celtic) மொழிகளின் இலக்கணங்கள் வெளியாயின.

❖ **'லைசர்** (Schlicher) என்பவர் எழுதிய **லித்வேனிய மொழியின்** (Lithuanian) இலக்கணமும் சில காலங்களுக்கு முன்னர்தான் வெளியானது.

❖ மேலும் ஒலியியல் ஆய்வு டாக்டர் கால்டுவெல்லின் காலத்தில் அறிவியல் கண்ணோட்டத்தோடு மிகுந்த வளர்ச்சியினைப் பெறவில்லை.

❖ திருந்திய மொழிகள் என்று அவர் குறிப்பிட்ட சில மொழிகளைத் தவிர ஏனைய மொழிகளை ஆய்வதற்குரிய வாய்ப்புக்களும், சான்றுகளும் அவர் காலத்தில் மிகக் குறைவாகவே இருந்தன.

❖ இவ்வாறு ஒப்பியல் ஆய்வும், ஒலியியல் ஆய்வும் மிகப் பின் தங்கிய நிலையிலிருந்த காலத்தில் குறைந்த வசதிகளோடு சிறந்த ஆய்வினை அவர் மேற்கொண்டு தன் ஆய்வுக்காக டாக்டர் பட்டமும் பெற்றுள்ளார்.

TCA

❖ இவருடைய ஆய்வு பெரும்பாலும் தென் திராவிட மொழிகளைப் பற்றியதாக இருப்பதால் இதனைத் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்று பொதுநிலையில் சுட்டுவதை விடத் தென் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்று அழைப்பதே பொருந்தும் என்கிறார் டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்.

**டாக்டர் கால்டுவெல்லுக்கு பின்**

❖ கி.பி. 1866-ஆம் ஆண்டு வியன்னாவில் கூடிய மொழியாராய்ச்சி மாநாடு **டாக்டர் ராபர்ட் N. கஸ்ட்** (Robert N. Cust) என்பவரின் தலைமையில் ஒரு மொழி ஆராய்ச்சிக் குழுவை இந்தியாவிறகு அனுப்பி இந்திய மொழிகளினியல்பை ஆராயவேண்டுமென்று முடிவு செய்தது.

- ❖ இப்பணி பல ஆண்டுகளுக்குப் பின்னர் கி.பி. **1894**இல் தொடங்கியது. இதன் தலைமைப் பொறுப்பைப் பேராசிரியர் **G.A.கிரியாஸன்** (G.A. Grierson)ஏற்றார். 1891-இல் நடைபெற்ற கணக்கெடுப்பு (Census report) இம்மொழி ஆய்வுக் குழுவிறகுப் பெரிதும் துணை செய்தது.
- ❖ இந்திய மொழி பற்றிய இக்கள் ஆய்வில் (Linguistic Survey of India) உதவி புரிந்த டாக்டர் ஸ்டெங் கெனோவின் (Sten Konow) முண்டா மொழிகள்.
- ❖ திராவிட மொழிகள் பற்றிய கருத்துக்கள் 1906இல் வெளியிடப்பட்டபோது திராவிட மொழிகளின் ஒப்பாய்வு புத்துயிர் பெறத் தொடங்கியது.
- ❖ இக்க ஆய்வின் முதற்பகுதியில் தென்னிந்திய மொழிகள் விலக்க பட்ட போதிலும் ஆம் பகுதியில் திராவிட, முண்டா மொழிகள் இடம் பெற்றன. டாக்டர் கால்டுவெல் குறிப்பிட்ட 12 மொழிகளோடு, கொலாமி, நாயக்கி என்னும் இரு மொழிகளையும் இணைத்து கிரியர்னை திராவிட மொழிகள் 14 எனக் குறிப்பிட்டார்.
- ❖ 1913-ஆம் ஆண்டில் குவி மொழியினைப் பற்றிய ஆய்வினை **பிட்ஜெரால்டு** என்பவர் மேற்கொண்டு அம்மொழி திராவிட மொழிக் குடும்பத்தின் ஒரு தனி மொழியே என்ற முடிவுக்கு வந்தார்.
- ❖ **1964-இல பேராசிரியர் ஜூல்ஸ்ப்பினாக் என்பவர் திராவிட மொழிகளின் இலக்கண அமைப்பு'** (Structure Grammaticale des Langues Dravidiennes) **(PG – TRB – 2011 - 2012)** என்னும் நூலைப் பிரெஞ்சு மொழியில் எழுதி வெளியிட்டார்.
- ❖ திராவிட மொழிகள் பற்றிய இவரது கொள்கைகள் பலவற்றைப் பேராசிரியர் பரோ போன்ற அறிஞர்கள் பின்னர் மறுத்துரைத்தனர்.

95665 35080

### திராவிடம்

- ❖ தென்னிந்தியப் பகுதிகளில் வழங்கப்படும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய திராவிட மொழிகள் இலக்கண வகையால் ஒரு தனிப்பட்ட பொது அமைப்பினையும், வழங்குமிடத்தால் ஒரு நெருக்கத்தினையும் கொண்டுள்ளன.
- ❖ மேலும் மொழிக்கு இன்றியமையாத வேர்ச்சொற்கள் (Roots) இம்மொழிகளில் பொதுப் படையாகவே அமைந்துள்ளன.
- ❖ எனவே இம்மொழிகளெல்லாம் ஒரு குடும்பத்தைச் சார்ந்தவை என்பது தெளிவு, இம்மொழிகளை மேல்நாட்டு ஆய்வாளர்கள் 'மலபார் மொழிகள்' என்றும் தமுலிக்' என்றும் வழங்கி வந்தனர்.'
- ❖ தென்னிந்திய மொழிகளில் உயர்தனிச் செம்மொழியாகத் திருத்தம் பெற்றுத் திகழும் தமிழ் மொழியின் பெயராலேயே இவ்வினம் முழுவதையும் சுட்டுவதில் தவறு ஏதும் இல்லை.
- ❖ எனினும் 'தமிழ்' என்பது குறிப்பிட்ட ஒரு மொழியின் பெயராக அமைவதால் பலவேறு மொழிகளைக் கொண்ட இக்குடும்பம் முழுவதையும் சுட்டுவதற்குப் பரந்த நோக்கோடு

பிறிதொரு பெயரை அமைப்பதே சிறப்புடையது என்று கருதித் திராவிடம் என்று பெயரைத் தாம் கையாளுவதாகக் கால்டுவெல் குறிப்பிடுகின்றார்."

❖ திராவிட என்ற வடசொல்லுக்கு மூன்று வடிவங்கள் (Dramida, Dravida, Dravida) உள்ளன.'

❖ முதலில் இச்சொல் தமிழ் மொழி பேசப்பட்ட இடத்தைச் சுட்டுவதற்குப் பயன்பட்டது என்றும், ஆந்திரம், கேரளம் என்னும் சொற்கள், மேற்கூறப்பட்டதற்கு நிகராகத் தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகள் பேசப்பட்ட இடங்களைச் சுட்டப் பயன்பட்டன என்றும் தெரிகின்றது.

❖ இப்பெயரைத் தேர்ந்தெடுப்பதற்குரிய காரணங்களைக் கூறும் டாக்டர் கால்டுவெல் வரலாற்று நிலையில் தனக்கு முன்னர் யார் யார் இப்பெயரினைப் பயன் படுத்தியுள்ளனர் என்பதை விரிவாக ஆராய்கின்றார்.

❖ கி.பி.7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிறந்த வடமொழி எழுத்தாளரான குமரிலபட்டர் என்பவர் தென்னிந்திய மொழியினத்தைக் குறிக்க ஆந்திர-திராவிட பாஷா என்ற தொடரைப் பயன்படுத்தியுள்ளதாகக் கால்டுவெல் குறிப்பிடுகின்றார்.

❖ ஆனால் இத்தொடர் உண்மையிலேயே திராவிட முதலியன (Dravida ādi) என்றிருப்பதாக பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் கூறுகின்றார்.

❖ மனுஸ்மிருதியில் தென்னிந்திய மக்கள் திராவிடர் என்ற பொதுப்பெயரால் சுட்டப் படுவதையும் மேற்கோளாக டாக்டர் கால்டுவெல் காட்டிச் செல்கின்றார்.'

❖ பாகத மொழிகளைத் தொகைப்படுத்திய ஆய்வாளர்களும் தென்னிந்திய மொழியினங்களைத் திராவிடி என்னும் பெயரால் குறிக்கின்றனர்.

❖ பேராசிரியர் J.J. மூர் (J.J. Mur) என்பவர் தமது நூல் ஒன்றில் திராவிடம் ஒரு சிறு பிராகிருதம் (Vibhasha Minor Prakrit) என்று ஒரு வடமொழி ஆய்வாளர் குறிப்பிடுவதைக் காட்டுகின்றார்.

TEACHER'S CARE ACADEMY TCA KANCHIPURAM
95665 35080

❖ S.K. சட்டாஜி என்னும் மொழி நூலறிஞர், இடைக்காலத்தில் பிராமணர்கள். பஞ்ச **திராவிடா என்று திராவிடம்** என்ற சொல்லைப் பரந்த பொருளில் பயன்படுத்தியதைக் குறிப்பிடுகின்றார்.

❖ கி.பி. 1854-இல் வாழ்ந்த பேராசிரியர் பாபு இராஜேந்திரலால் என்னும் இந்திய மொழி நூல் அறிஞரும் '**திராவிடி** என்ற பெயரால் தென்னிந்திய மொழிகளை அழைக்கின்றார். மேலும் இரவீந்திரநாத தாகூர் எழுதிய நாட்டுப்பாடலும் திராவிடம் என்ற சொல் பரந்தநிலையிலேயே ஆளப்படுகின்றது.

❖ இவற்றையெல்லாம் நோக்கும்போது டாக்டர் கால்டுவெல் கருதுவதைப் போன்று பல்வேறு காலத்தில் வாழ்ந்த அறிஞர்கள் தென்னிந்திய மொழியினங்களையும்,

மக்களையும் சுட்டுவதற்குத் திராவிடம் என்ற சொல்லைக் கையாண்டுள்ளஃம் தெளிவு பெறும்.

## 1.1.3. திராவிட மொழிகளின் சிறப்பியல்புகள்

- ❖ உலகம் முழுவதிலும் ஏறத்தாழ நாலாயிரத்திற்கு மேற்பட்ட மொழிகள் பேசப்பட்டு வருகின்றன இம்மொழிகளைப் பல்வேறு குடும்பங்களாகப் பிரித்து ஆராய்கின்ற ஒப்பியலறிஞர்கள் இம்மொழிக் குடும்பங்களில் எட்டுக் குடும்பங்களே தலை சிறந்தன என்பர் இவ்வெட்டுக் குடும்பங்களுள் ஒன்றான திராவிட மொழிக் குடும்பம்.
- ❖ ஏனைய மொழிக குடும்பங்களோடு பல பொதுத் தன்மைகளைப் (Shared features) பகிர்ந்து கொண்டாலும் தளக்கெனச் சில தனித்தன்மைகளைப் பெற்றுத் திகழ்கின்றது.

1. பல்வேறு மொழிகள தனிநிலை மொழிகளாகவும் (Synthetic languages) பகுப்புநிலை மொழிகளாகவும் (Analytical Languages) அமைய திராவிட மொழிகள் ஒட்டுநிலை மொழிகளாக (Agglutinative Languages) அமைகின்றன. ஏனைய மொழிகளில் காலங்காட்டும் உருபுகள் போன்றவை தனித்து நிற்கத் திராவிட மொழிகளில் கால இடைநிலைகள். பால்காட்டும் விகுதிகள் ஆகியன வினையடிகளோடு ஒட்டியே அமைந்து நிற்கின்றன.

எ.கா. வந்தான் → வா+ந் + த் +ஆள்

2. வழக்கில் அதிகமாகப் பயின்று வரும் பொருட்களைக் குறிக்கும் அடிப்படைச் சொற்கள் (Basic Vocabularies) மொழிக்கு மொழி மாறுபட்ட போதிலும் திராவிட மொழிகள் அனைத்திலும் அவை பொதுவாக மாறாமல் ஒன்று போலவே அமைகின்றன.

**எ.கா.**

| | |
|---|---|
| தமிழ் | - கண் (kan) |
| மலையாளம் | - கண்ணு (kannu) |
| தோடா | - கொண் (kon) |
| கொடகு, தெலுங்கு | - seirey (kannu) |
| பர்ஜி | - கெண் (ken) |
| குருக் | - ஃகன் (kkan) |

TEACHER'S CARE ACADEMY TCA KANCHIPURAM
95665 35080

3. எண்ணுப் பெயர்களும் ஏறத்தாழ அனைத்துத் திராவிட மொழிகளிலும் அதிக மாறுதல்களின்றி ஒன்றுபோலவே அமைந்துள்ளன.

**எ.கா.**

மூன்று, மூனு, மூன்னு, மூறு என்பன

4 ஆங்கிலம் போன்ற மொழிகளில் பெரும்பாலான சொற்கள் டிய, திராவிட மொழிகளில் மெய்யெழுத்துக்களைக் கொண்டே முடிய. அதிகமான சொற்கள் உயிரெழுத்துக்களைக்

கொண்டெ முடிகின்றன. மெய்யைக் கொண்டு முடியும் சொற்கள் கூட ஒலித்துணையாக உயிரைப் பெற்று நிற்கின்றன.

**எ.கா.**

நாள் - நாளு

இங்கு ஒளித்துணையாக 'உகர உயிர் வந்து இணையக் காண்கிறோம். மூக்கொலிகனைக் கொண்டு முடியும் சொற்களில், இறுதி மூக்கின மெய் கெட்டு அதன் முன்னர் வரும் உயிரொலி மூக்கொலிச் சாயல் பெற்று நிற்கும் இயல்பினைத் திராவிட மொழிகளில் காணலாம்.

**எ.கா.**

அவன் - அவ

இடையின ஒலிகளைக் கொண்டு முடியும் சில சொற்களில் அவ்வொலிகள் பேச்சு வழக்கில் கெட்டு உயிரீறு பெற்ற சொற்களாக நிற்றலுமுண்டு.

TCA

**எ.கா.**

பந்தல் → பந்த

கந்தல் → கந்த

5. திராவிட மொழிகளின் உயிர் எழுத்துக்களில் குறிலும் நெடிலும் அடிப்படை ஒலியன்களாக உள்ளன. துணை செய்கின்றன. இவை பொருளை வேறுபடுத்தத்

**எ.கா.**

மது

மாது

மேலும் இவை தனித்தனி வரி வடிவத்தையும் பெற்றுள்ளன. ஆனால் ஆங்கிலம் போன்ற மொழிகளில் இவ்வேறுபாடு கிடையாது.

6. திராவிட மொழிகளில் ஒரு சொல் இ, எ என்னும் முன்னுயிர்களைக் கொண்டு தொடங்கினால் பெரும்பாலும் 'ய'கரத்தை மொழி முதலில் உடம்படு மெய்யாகப் (glide) பெறுவதுண்டு.

**எ.கா.**

இலை + இலை

இதனைப் போன்றே பின்னுயிர்களான உ, 9 என்பன 'வகர உடம்படு மெய்யினைப் பெறும்.

**எ.கா.**

உறி - உறி

**உட்பிரிவுகள்**

❖ இம்மொழிகள் ஒன்றோடொன்று கொண்டுள்ள தொடர்புகளை அடிப்படையாகக்

TEACHER'S CARE PUBLICATION
38/23, Vaigundaperumal Koil Street,Kancheepuram- 631502
Mobile : 95665 35080, 9786269980 Land Line : 044-2723 5080

# 2025-2026

# PG TRB

## G.O No. 219 New Syllabus

# தமிழ்



## அலகு-2

## சங்க இலக்கியமும், சங்கம் மருவிய கால இலக்கியமும்

*Your Success is Our Goal...*

- எட்டுத்தொகை , பத்துப்பாட்டு
- பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்
- இவற்றின் காலம் , தொகுப்புமுறை
- பாடுபொருள் , அகநூல்கள்,
- புறநூல்கள் , அகப்புற நூல்கள்
- அற நூல்களின் சிறப்புகள்.

tcaexamguide
Teacher's Care Academy
www.tcaexamguide.com
tcaexamguide@gmail.com

# தமிழ்

## சங்க இலக்கியமும் சங்கம் மருவிய காலமும்

# PG TRB (2025-2026)

## அலகு - 2

## FIRST EDITION

**TEACHER'S CARE PUBLICATION**
38/23, Vaigundaperumal Koil Street,Kancheepuram- 631502
Mobile : 95665 35080, 9786269980 Land Line : 044-2723 5080

Branch Office : 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy (76399 67359)
Branch Office: Advaitha Ashram Road, New Bus Stand, Salem (93602 68118)

## INDEX


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| **2.1** | **எட்டுத்தொகை** | **1** |
| | 2.1.1. நற்றிணை | 2 |
| | வினாக்கள் – 1 | 9 |
| | 2.1.2. குறுந்தொகை | 10 |
| | வினாக்கள் - 2 | 20 |
| | 2.1.3. ஐங்குறுநூறு | 21 |
| | வினாக்கள் – 3 | 28 |
| | 2.1.4. பதிற்றுப்பத்து | 29 |
| | வினாக்கள் – 4 | 40 |
| | 2.1.5. பரிபாடல் | 41 |
| | வினாக்கள் – 5 | 49 |
| | 2.1.6. கலித்தொகை | 50 |
| | வினாக்கள் – 6 | 55 |
| | 2.1.7. அகநானூறு | 56 |
| | வினாக்கள் – 7 | 61 |
| | 2.1.8. புறநானூறு | 62 |
| | வினாக்கள் – 8 | 67 |
| **2.2** | **பத்துப்பாட்டு** | **68** |
| | 2.2.1. திருமுருகாற்றுப்படை | 72 |
| | வினாக்கள் – 9 | 78 |
| | 2.2.2. பொருநராற்றுப்படை | 79 |
| | வினாக்கள் – 10 | 87 |
| | 2.2. 3. சிறுபாண் ஆற்றுப்படை | 89 |
| | வினாக்கள் – 11 | 98 |
| | 2.2.4. பெரும்பாணாற்றுப்படை | 99 |
| | வினாக்கள் - 12 | 107 |
| | 2.2.5. முல்லைப்பாட்டு | 108 |
| | வினாக்கள் - 13 | 120 |

| | | |
|---|---|---|
| | 2.2.6. மதுரைக்காஞ்சி | 120 |
| | வினாக்கள் – 14 | 129 |
| | 2.2.7. நெடுநல்வாடை | 130 |
| | வினாக்கள் – 15 | 145 |
| | 2.2.8. குறிஞ்சிப்பாட்டு | 146 |
| | வினாக்கள் – 16 | 154 |
| | 2.2.9. பட்டினப்பாலை | 155 |
| | வினாக்கள் – 17 | 160 |
| | 2.2.10. மலைபடுகடாம் | 161 |
| | வினாக்கள் – 18 | 181 |
| **2.3** | **பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்** | **181** |
| | 2.3.1. நாலடியார் | 183 |
| | வினாக்கள் – 19 | 189 |
| | 2.3.2. நான்மணிக்கடிகை | 190 |
| | வினாக்கள் – 20 | 192 |
| | **2.3.3. இன்னா நாற்பது** | 192 |
| | வினாக்கள் – 21 | 194 |
| | 2.3.4. இனியவை நாற்பது | 195 |
| | வினாக்கள் – 22 | 197 |
| | 2.3.5. திருக்குறள் | 197 |
| | வினாக்கள் – 23 | 211 |
| | 2.3.6. கார் நாற்பது | 212 |
| | வினாக்கள் – 24 | 214 |
| | 2.3.7. களவழி நாற்பது | 214 |
| | வினாக்கள் – 25 | 217 |
| | 2.3.8. ஐந்திணை ஐம்பது | 217 |
| | வினாக்கள் - 26 | 218 |
| | 2.3.9. ஐந்திணை எழுபது | 219 |
| | வினாக்கள் – 27 | 220 |
| | 2.3.10. திணைமொழி | 221 |

| | | |
|---|---|---|
| | வினாக்கள் – 28 | 223 |
| | 2.3.11. திணைமாலை நூற்றைம்பது | 223 |
| | வினாக்கள் – 29 | 227 |
| | 2.3.12. கைந்நிலை | 227 |
| | வினாக்கள் – 30 | 230 |
| | **2.3.13. திரிகடுகம்** | 231 |
| | வினாக்கள் – 31 | 233 |
| | 2.3.14. ஆசாரக்கோவை | 233 |
| | வினாக்கள் – 32 | 243 |
| | 2.3.15. பழமொழி நானூறு | 244 |
| | வினாக்கள் – 33 | 245 |
| | 2.3.16. சிறுபஞ்சமூலம் | 246 |
| | வினாக்கள் – 34 | 247 |
| | 2.3.17. முதுமொழிக் காஞ்சி | 248 |
| | வினாக்கள் – 35 | 251 |
| | 2.3.18. ஏலாதி | 251 |
| | வினாக்கள் – 36 | 254 |
| **2.4.** | **எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் இவற்றின் காலம்** | **254** |
| | 2.4.2. எட்டுத்தொகை பத்துப்பாட்டு பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் தொகுப்பு முறை | 258 |
| | 2.4.3. எட்டுத்தொகை பத்துப்பாட்டு பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் இவற்றின் பாடுபொருள் | 278 |
| **2.5.** | **அக நூல்கள், புற நூல்கள், அகப்புற நூல்கள், அற நூல்களின் சிறப்புகள்** | **281** |
| | 2.5.1. அக நூல்களின் சிறப்புகள் | 281 |
| | வினாக்கள் - 37 | 317 |
| | 2.5.2. புற நூல்களின் சிறப்புகள் | 317 |
| | வினாக்கள் – 38 | 361 |
| | 2.5.3. அகப்புற நூல்களின் சிறப்புகள் | 362 |

| | | |
|---|---|---|
| | 2.5.4. அற நூல்களின் சிறப்புகள் | 374 |
| | வினாக்கள் - 39 | 405 |
| | மாதிரி வினாக்கள் | 406-420 |


## பாடத்திட்டம் (Syllabus)

**சங்க இலக்கியமும், சங்கம் மருவிய கால இலக்கியமும்**

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், இவற்றின் காலம், தொகுப்புமுறை, பாடுபொருள், அகநூல்கள், புறநூல்கள், அகப்புறநூல்கள், அற நூல்களின் சிறப்புகள்.

### பார்வை நூல்கள்

1 ) **தமிழ் இலக்கிய வரலாறு** மது. ச. விமலானந்தம்

2) **தமிழ் காதல்** - வ.சுப. மாணிக்கனார்

3) **எட்டுத்தொகை நூல்கள்** - கு.வெ. பாலசுப்பிரமணியன்

4) **பத்துப்பாட்டு நூல்கள்** - முனைவர் இரா. மோகன்

5) **தமிழ் இலக்கிய வரலாறு** - முனைவர் கா. கோ. வேங்கட ராமன்


PG TRB TAMIL PREVIOUS YEAR SOLVED QUESTION PAPER

2022, 2019, 2017, 2015 & 2012

**ஆகியவற்றின் விடைகள் மற்றும் விரிவான விளக்கங்களை புத்தக வடிவில் பெற்றுக் கொள்ள தொடர்புக் கொள்ள வேண்டிய அலைபேசி எண்கள்:**

95665 35080; 97862 69980;

93602 68118; 76399 67359



**TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM**

**TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER**

**HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080**

**B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018**

**B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem**

**Trichy : 76399 67359 Salem : 93602 68118**

# PG - TRB TAMIL

## அலகு - 2

### சங்க இலக்கியமும் சங்க மருவிய காலமும்

### 2.1. எட்டுத்தொகை

- எட்டுத்தொகையும் பத்துப்பாட்டுமாகிய தொகுப்பு நூல்களையே சங்க இலக்கியங்கள்என்று கூறுவர் இவற்றை சுருக்கமாக பாட்டும் தொகையும் என்றும் கூறுவர் சங்கஇலக்கியங்களை சான்றோர் செய்யுட்கள் என முதன்முதலில்குறிப்பிட்டவர் பேராசிரியர்.
- பாடல்களை பகுத்து தொகுப்பதற்கு பொருண்மை, அடியளவு, யாப்பு, தொழில், எண்ணிக்கை ஆகியவை அடிப்படையாகக் கொள்ளப்பட்டன.
- அவ்வாறு தொகுக்கப்பட்ட எட்டு தொகையும் பத்துப்பாட்டும் பதினெண்மேற்கணக்கு என்று பெயர்பெறும். கணக்கு என்பது பாட்டு அல்லது நூல் என்றும் மேற்கணக்கு என்பது மிகுந்த அடி எண்ணிக்கை கொண்ட பாட்டு என்றும் பொருள் படும்.
- எட்டுத்தொகையிலும் பத்துப்பாட்டிலும் இடம்பெற்றுள்ள பாடல்கள் 2352 கடவுள் வாழ்த்துக்களையும் சேர்த்து மொத்தம் 2381 அவை 3 அடி முதல் 782 (மதுரைக்காஞ்சி ) அடிவரையால் ஆனது.
- சங்க பாடல்களை எழுதியவருள் 473 பேருக்கு இயற்பெயர் கூறப்பட்டுள்ளது. ஆசிரியர் பெயர் தெரியாத பாடல்களின் எண்ணிக்கை 102. பாடல் இயற்றுயோருள் பெண்பாற்புலவர்கள் 30 பேர், அரசர்கள் 25 பேர்
- எட்டுத்தொகை நூலில் கலித்தொகை பரிபாடல் ஆகிய இரு நூல்கள் தவிர பிற தொகை நூல்கள் ஆசிரியப் பாவால் (அகவற்பா) இயற்றப்பட்டவை ஆகும்.
- எட்டுத்தொகைக்கு **எண் பெருந்தொகை** என்றும் பெயர் . எட்டுத்தொகை நூல்கள் இவை என்பதை கூறும் பழம் பாடல் ஒன்று வழங்குகிறது

**" நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**

**ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல் கற்றறிந்தார்**

**ஏத்தும் கலியொடு அகம்புறம்என்று இத்திறத்த எட்டு தொகை"**

TCA

### எட்டுத்தொகை நூல்கள்

- ❖ நற்றிணை
- ❖ பதிற்றுப்பத்து
- ❖ அகநானூறு
- ❖ குறுந்தொகை
- ❖ பரிபாடல்
- ❖ புறநானூறு
- ❖ ஐங்குறுநூறு
- ❖ கலித்தொகை

### அக நூல்கள்

➢ அகப் பொருள்களை அடிப்படையாகக் கொண்ட நூல்கள் ஐந்து. அவை,

- ❖ நற்றிணை
- ❖ கலித்தொகை
- ❖ குறுந்தொகை
- ❖ அகநானூறு
- ❖ ஐங்குறுநூறு

TEACHER'S CARE ACADEMY TCA KANCHIPURAM
95665 35080

### புற நூல்கள் (PG-TRB-2005-2006)

- ❖ பதிற்றுப்பத்து
- ❖ புறநானூறு

என்பன புறப்பொருள் பற்றி அமைவன

### அக புற நூல்கள்(PG-TRB-2004-2005)

- ❖ பரிபாடல்

## 2.1.1. நற்றிணை

- ❖ நற்றிணை ஆசிரியர் பாவால் எழுதப்பட்ட நூல் அகம் சார்ந்த நூல்.
- ❖ இதில் 400 + 1 பாடல்கள் இடம் பெற்றுள்ளது
- ❖ இந்த நூலை 175 பேர் பாடி இருக்கிறார்கள்.
- ❖ இந்த நூலின் அடி வரையறை 9 முதல் 12 வரை(PG-TRB-2005-2006)
- ❖ நற்றிணையில் 110 ஆம் பாடலும் 379 ஆம் பாடலும் 12 அடிகளுக்கு மேல் உள்ளன.
- ❖ இவை இரண்டும் 13 அடி பாடல்களாக உள்ளன.
- ❖ 234 ஆம் பாடல் முழுமையும் கிடைக்கவில்லை.
- ❖ இந்த நூலை தொகுத்தவர் யார் என்பது தெரியவில்லை.
- ❖ தொகுப்பித்தவர் **பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி. (NET – JAN– 2016)**
- ❖ நற்றிணை நூலுக்கு உரை எழுதியவர் **பின்னத்தூர் நாராயண சுவாமி அய்யர் மற்றும் ஔவை துரைசாமி பிள்ளை.**
- ❖ பதிப்பித்தவர் **பின்னத்தூர் நாராயண சுவாமி ஐயர்** என்பவர் ஆவார்.இதன் வேறு பெயர் '**நற்றிணை 400'.**நல் + திணை =நற்றிணை. திணை என்ற சொல் அகப்பொருள் கூறும் நூல்களுக்கு அமைந்த பெயராகும். திணை என்ற பெயரோடு இந்நூலுக்கு நல் என்னும் அடைமொழியும் சேர்ந்து வழங்குகிறது.

**நற்றிணை பாடிய புலவர்கள்**

- ❖ இந்த நூலை 175 பேர் பாடி இருக்கிறார்கள். பெயர் தெரியாத புலவர்களுக்கு அவர்கள் பாடிய பாடல்களில் அமைந்துள்ள சிறந்த தொடர்களால் பெயர் சூட்டி உள்ளனர். **வண்ணப்புறக்கரந்தனார், மலையனார், தனிமகனார் விழிகட் பேதை பெருங்கண்ணனார், தும்பிசேர் கீரனார், தேய்புரி பழங்கயிற்றினார், (UGC — NET - 2009)**
- ❖ **மடல் பாடிய மாதங்கீரனார்** என தொடர் பெயரால் பெயர் பெற்ற **ஒன்பது** புலவர்கள் இதில் இடம்பெற்றுள்ளனர்.
- ❖ அறிவுடை நம்பி, உக்கிர பெருவழுதி, பாலை பாடிய பெருங்கடுங்கோ போன்ற அரசர்களும் நற்றிணை பாடல்களைப் பாடியுள்ளனர்.
- ❖ அதியமான் அஞ்சி, அழிசி, ஆய் அண்டிரன், உதியன், ஓரி(6), காரி, குட்டுவன், சேந்தன், நன்னன், தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியன் ஆகிய வேந்தர்களும் குறுநில மன்னர்களும் நற்றிணையில் குறிப்பிடப் பெற்றுள்ளனர்.
- ❖ அறவாழ்வு, கொடை, ஆட்சித்திறம், பழக்கவழக்கங்கள் போன்ற சமூக வரலாற்றுச் செய்திகளும் நற்றிணையில் இடம்பெற்றுள்ளன.

**நற்றிணையில் இடம்பெறும் சிறப்பு செய்திகள்**

- ❖ தலைவன் பிரிந்து சென்ற நாளை கணக்கிட தலைவி சுவரில் கோடிட்டு எண்ணுதல் (பாடல் எண் – 324)
- ❖ பல்லி ஒலித்தல் கொண்டு சகுனம் அறிதல் ,மகளிர் தை நீராடி நோன்பு நோற்றல்
- ❖ மகளிர் கால்பந்து விளையாடுதல் போன்ற சிறப்புச் செய்திகள் நற்றிணையில் இடம் பெற்றுள்ளன.
- ❖ குருகு, கிளி, நாரை போன்ற அஃறிணை உயிர்களை தூதுவிடும் பாடல்களும் நற்றிணையில் உள்ளன.
- ❖ கண்ணகியின் வாழ்க்கையோடு ஒத்த திருமா உண்ணியின் வரலாற்றினை,

TCA

**“ஏதிலாளன் கவலை கவற்ற**

**ஒருமுலை இழந்த திருமா உண்ணி “**

❖ என்று மதுரை மருதன் இள நாகனார் பாடிய பாடல் கண்ணகியின் வாழ்க்கை வரலாற்றை கூறுகிறது.

- ❖ சகடம் என்ற சொல்லில் ச எழுத்தினை முதலில் கொண்டு அமைந்த அரிய சங்க சொல் அமைந்த நூல் நற்றிணை.

**“கணநிறை கிளர்க்கும் நெடுநெறி**

**சகடம்மணல் மடுத்து”**

- ❖ என்ற பாடலில் சகரம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- ❖ பகைவரை வென்று அவர் வாய்பல்லை கொண்டு வந்து தம் கோட்டை கதவில் அழுத்தக்கூடிய செய்தியினை பொய்கையார் தன்னுடைய பாலைதிணை பாடலில் பாடியுள்ளார்.

**"----------------------------------- மூவன்**

**முழு வலி முள் எயிறு அழுத்திய கதவின**

**கானல்அம் தொண்டி பொருநன்"** (பாடல் எண் 18)

- ❖ குறவர் மின்மினியை விளக்காகக் கொண்டு மழையின் இயக்கம் அறிவர். இதனை ,

என்ற பெருங்கௌசிகனார் பாடலின் மூலம் அறியலாம்.

TEACHER'S CARE ACADEMY TCA KANCHIPURAM 95665 35080

**"பல் மர உயர்சினை மின்மினி விளக்கத்து,**

**செல் மழை இயக்கம் காணும்**

**நல் மலை நாடன்" "** (பாடல் எண் 44)

- ❖ மகளிர் தம் வாழ்க்கை நிலை அறிய விரிச்சி கேட்பர். அவ்விரிச்சியில் பெற்ற மொழி நன் மொழியாக இருக்கும் பொழுது அம்மொழியை கூறுபவர்களை நீண்ட நாள் வாழ்வாயாக என வாழ்த்துவர். இதனை, என்ற கபிலரின் குறிஞ்சித் திணை பாடலின் மூலமாக அறியலாம்.

**" அமுதம் உண்க நம் அயல் இலாட்டி**

**கிடங்கில் அன்ன இட்டுக் கரை கான்யாற்று" "** (பாடல் எண் 65)

- ❖ பல்லி ஒலிப்பதனை நிமித்தம் கூறுவதாக கருதுவதனை நற்றிணையில் இடம்பெறும் பாடல் மூலமாக அறியலாம். இதனை, என்ற முல்லைத்திணை பாடல் மூலமாக அறியலாம்.

**முன்னியது முடித்தனம் ஆயின் நன்னுதல்**

**வருவம் என்னும் பருவரல் தீர,**

**படும்கொல் வாழி நெடு சுவர் பல்லி"** (பாடல் எண் 169)

- ❖ இதனை, என்ற முல்லைத்திணை பாடல் மூலமாக அறியலாம்.
- ❖ ஆய்அண்டிரன் இரவலர்க்கு யானையை பரிசாக அளித்தான் என்பதனை,

**" இரவலர் வரூஉம் அளவை, அண்டிரன்**

**புரவு எதிர்ந்து தொகுத்த யானை போல"** (பாடல் எண் 237)

- ❖ என்ற காரிக்கண்ணனாரின் பாலைத்திணை பாடலின் மூலமாக அறியலாம்.
- ❖ நற்றிணையில் தலைவன் மடல் ஏறுதல் குறித்து மோசிகீரனார் நெய்தல் திணைப்பாடலில் பாடியுள்ளார். இதனை,

**" மா என மதித்துமடல் ஊர்ந்து ஆங்கு**

**மதில் என மதித்து வெண் தேர் எறி"** (பாடல் எண் 342)

என்ற பாடல் வரிகளின் மூலமாக அறியலாம் .

❖ ஆலமரம் கடவுளோடு இணைந்து பேசப்படுவதை நற்றிணையில் கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனாரின் பாலைத்திணை பாடல் மூலமாக அறியலாம். அதாவது கடவுள் வாழும் ஆலமரம். அங்கு கடவுளுக்கு படைத்து வைத்த பலி உணவை காக்கைகள் வந்து உண்ணும் என்பதன் மூலம் அறியலாம். இதனை,

**" நெடுவீழ் இட்ட கடவுள் ஆலத்து**

**உகு பழி அருந்திய தொகு விரற் காக்கை**

**புன்கண் அந்திக் கிளைவயின் செறிய"** (பாடல் எண் 343)

என்ற பாடல் வரிகளின் மூலம் அறியலாம் .

❖ "நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்" இந்த பாடல் வரி விருந்தோம்பலின் சிறப்பை கூறுகிறது.**(NET –JUNE -2012)**

❖ நீர் எவ்வாறு உலக வாழ்க்கைக்கு இன்றியமையாததோ அவ்வாறே தலைவி உயிருடன் இயங்குவதற்குத் தலைவனது அருள் தோய்ந்த காதல் நெஞ்சம் இன்றியமையாததாகும்.

**"நீரின் றமையா வுலகம் போலத்**

**தம்மின் றமையா நத்தயத் தருனி"**

❖ மேலும், மனைவி இரவில் விருந்தினர் வந்தாலும் மனைவி கணவனுடன் மனமகிழ்ச்சியுடன் வரவேற்று விருந்து படைக்கும் செய்தி,

**''அல்லி லாயினும் விருந்துவரின் உவக்கும்முல்லை சான்ற கற்பின் மெல்லியல்"**

என்னும் பகுதியால் அறியலாகும்.

**"பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க**

**நாகரிகம் வேண்டு பவர்'**

என்னும் குறட்பாவின் கருத்து,

TCA

**"முந்தை விருந்து நட்டோர் கொடுப்பின்**

**நஞ்சும் உண்பர் நனிதா கரிகர்"**

❖ என்ற பாடலில் புலப்படுகிறது.செல்லம் எது? என்பதனை எத்துணை அழகுபட மொழிகிறது ஒரு பாடல். பிறர் நம்மைச் சிறப்பித்துக் கூறும் புகழுரைகளோ விரைந்து செல்லும் சிறப்புமிக்க ஊர்திகளோ செல்வம் அவை அவரவர் செய்த நல்வினையின் இம்மைப் பயன் சான்றோர் செல்வமெனச் செப்புவது தன்னைச் சார்ந்தோர் மனம் புண்படுத்தாத - அவர்கள் துள்பம் கண்டு நெஞ்சம் நெக்குருகும் தன்மையேயாம் என இலக்கணம் வகுக்கும் பாடல்,

**“நெடிய மொழிதலும், கடிய ஊர்தலும்,**

**செல்வம் அன்று, தன் செய்வினைப் பயனே:**

**சான்றோர் செல்வம் என்பது, சேர்ந்தோர்**

**புன்கண் அஞ்சும் பண்பின்**

**மென்கண் செல்வம் செல்வம் என்பதுவே” (210)**

❖ ஓரறிவுயிர்களிடத்தும் உறவு கொள்ளும் -உலகத்துயிர்களிடத்தெல்லாம் அன்பு செலுத்தும் ஒண்மை உணர்த்துகிறது.

❖ தோழி எவ்வளவு கூறியும் தலைவி தலைவன் மேற்கொண்ட சீற்றம் தணிந்திலள். அதனால் மனம் வருந்திய தோழியின் கூற்றாகக் கபிலர் பாடிய பாடல் இது.

**"மாயோன் அன்ன மால்வரைக் கவாஅன்**

**வாலியோன் அன்ன வயங்குவெள் ளருவி**

**அம்மலை கிழவோன் நம்நயந்தென்றும்**

**வருந்தினன் என்பதோர் வாய்ச்சொல் தேறாய்**

**நீயுங் கண்டு நுமரொடும் எண்ணி**

**அறிவறிந்து அளவல் வேண்டும் மறுதரற்கு**

**அரிய வாழி தோழி! பெரியோர்.**

**நாடி நட்பின் அல்லது**

**நட்டு நாடார்தம் ஒட்டியோர் திறத்தே." (32)**

95665 35080

❖ திருமாலைப் போன்ற கரிய மலைத்தொடர் பலதேவளைப் போன்ற வெள்ளருவி! அம் மலைநாடன் நம்மை விரும்பி வருந்துகிறான் என யான் எவ்வளவு கூறியும் நீ என் பேச்சை ஏற்றுக் கொள்ளவில்லை. நீயாகச் சிந்தித்துப்பார். அல்லது உனக்கு மிக வேண்டியவர்களுடன் கலந்து எண்ணிப்பார். அறியவேண்டியதை அறிந்து அவனை ஏற்றுக்கொள்வதே நலம் மறுப்பது தவறு.

❖ பெரியவர்கள் ஆராய்ந்த பின் நட்புக் கொள்வார்களே, தவிர நட்புக் கொண்ட பின் ஆராயமாட்டார்கள். எவ்வளவு நயமாக, நாவன்மை மிக்க தோழி தலைவியை இடித்துக் கூறுகிறாள் என்பதைப் பாட்டினைப் பல முறை படித்து உணர்தல் வேண்டும். திருவள்ளுவர்,

**“நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்**

**வீடில்லை நட்பாள் பவர்க்கு"**(791)

எனக்கூறுவது, இப்பாடலின் இறுதியில் பொருத்தமுற ஆளப்பட்டுள்ளமை சிந்திக்கத்தக்கது.

- ❖ தலைவன் தன் காதலியை அவள் வீட்டுக்கருகிலுள்ள ஒரு புன்னை மரத்தடியில் சந்தித்தான். அவள் "இது நாங்கள் விளையாடுகிற பொழுது மறந்து போட்டுவிட்ட புன்னை விதையிலிருந்து வளர்ந்தது.
- ❖ பிறகு நாங்கள் அதனைப் பாலும் தேனும் பெய்து வளர்த்தோம். அப்போதெல்லாம் எங்கள் தாய் உங்களை விட உங்கள் தங்கையான புன்னை மிக நல்லவள். அவள் அடமே செய்வதில்லை, எனப் பாராட்டுவாள். எனவே என் உடன் பிறப்பனைய இப்புன்னை நிழலில் உங்களுடன் அளவளாவ எனக்குக் கூச்சமாக இருக்கிறது.
- ❖ வேறு இடங்களும் அருகிலுள நாம் அங்கே போய்ப் பேசிக் கொண்டிருப்போம் என்கிறாள். இயற்கையையும் உயிருள்ளதாகக் கருதி நாணும் இந்நுட்பமான உணர்வு நிலையை நாம் சங்கப்பாடல்களில் கண்டு மகிழலாம்.

**"விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி**

**மறந்தனம் துறந்த காழ்முளை அகைய**

**நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப**

**நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகுமென்று**

**அன்னை கூறினள், புன்னையது சிறப்பே**

**அம்ம நாணுதும் நும்மொடு நகையே!..."(172)**

95665 35080

- ❖ தலைவன் பிரிவால் தலைவி உயிர் துறத்தற்கு அஞ்சவில்லை; ஆனால், மறுபிறப்பில் மறந்து விடுவேனோ!' என்று கலங்குகின்றாள்.

**“சாதல் அஞ்சேன் அஞ்சுவன் சாவில்**

**பிறப்புப்பிறி தாகுவது ஆயின்**

**மறக்குவேன் கொல்என் காதலன் எனவே”**

- ➢ தலைவன் பிரிந்த நாளைத் தலைவி சுவரிலே கோடிட்டு எண்ணுவதும், பல்லி காதலர் வரவைக் கூறுவதாக நம்புவதும். காற்பந்து விளையாடுவதும் மகளிர்வாழ்விலேகாண்கிறோம்.
6) **புறப்பொருள் வெண்பாமாலை**, உரை ச.திருஞானசம்பந்தம்.
7) **நம்பியகப்பொருள்**, உரை வ. த. இராமசுப்ரமணியம்.
8) **தண்டியலங்காரம்**, உரை டாக்டர் கு.சுந்தரமூர்த்தி.


TEACHER'S CARE PUBLICATION
HEAD OFFICE : 21/46, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1.
CONTACT : 95665 35080, 97862 69980

BRANCH OFFICES

Branch Office 1 : 14, 1st Floor, 63 KPRS Tower, Thennur High Road, Trichy-620017.
Branch Office 2 : 266-C, Advaitha Ashram Road, (Opp. To New Bus Stand), Salem-636004
Branch Office 3 : 23, North Veliveethi, Pooja Complex, Simmakkal, Madurai- 625001

TRICHY : 76399 67359, SALEM : 9360268118, MADURAI : 96555 37380
Website : www.tcaexamguide.com Mobile App : tcaexamguide

**TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM**

**TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER**

**HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080**

**B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018**

**B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem**

**Trichy: 76399 67359 Salem: 93602 68118**

# PG TRB – TAMIL

## அலகு - 7 (தொகுதி – 1)

**பாடத்திட்டம்**

**ஐந்திலக்கணம் – எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி – பாட்டியல் – புலமை இலக்கணம் – தொல்காப்பியம், நன்னூல், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, நம்பியகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை, தண்டியலங்காரம்.**

## 7.1. தொல்காப்பியம்

### 7.1.1. எழுத்ததிகாரம்

- தொல்காப்பியப் பாயிரம் என்பது தொல்காப்பியத்தின் முன்பகுதியில் 'சிறப்புப் பாயிரம்' எனத் தலைப்பிட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ள பாடல். இதனைப் பாடியவர் பனம்பாரனார்.
- நூலுக்கு முன்னுரையாக அமையும் பகுதி ஒன்றை 13ஆம் நூற்றாண்டில் தோன்றிய நன்னூல் இலக்கணம் பாயிரம் எனக் குறிப்பிடுகிறது. பாயிரம் என்னும் சொல்லே தொல்காப்பியத்திலும், சங்கப்பாடல்களிலும் இல்லை.
- பனம்பாரனார் என்பவர் தொல்காப்பியம் என்னும் நூலைப்பற்றியும், தொல்காப்பியரைப் பற்றியும் எழுதியுள்ள பாடல் ஒன்று தொல்காப்பியத்துக்கு முன் 'சிறப்புப் பாயிரம்' எனத் தலைப்பிட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. **(UGC – NET- JUN 2010)**

**சிறப்புப் பாயிரம்**

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ் கூறு நல்லுலகத்து **(UGC – NET- DEC 2007)**
வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எணணிப்
புலம் தொகுத்தோனே போக்குறு பனுவல்

TCA

நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து
அறங்கறை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட்டு ஆசாற்கு அரிதபத் தெரிந்து
மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த
தொல்காப்பியன் எனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமையோனே

95665 35080

## 7.1.1.1. பாயிரம் தரும் செய்திகள்

- பனம்பாரனார் தொல்காப்பியத்தைப் பற்றிக் குறிப்பிடும் செய்திகள் இவை.
- தமிழ் கூறும் நல்லுலகம் என்பது வடவேங்கடம், தென்குமரி எல்லைகளுக்கு இடையே பரந்திருக்கும் நாடு.
- இங்கு வழங்கிய மொழி, எழுதப்பட்ட செய்யுள், ஆகியவை தொல்காப்பியத்துக்கும், அவரது முன்னோர் நூலுக்கும் முதல்.
- இந்த முதலானது எழுத்து, சொல், பொருள் என முன்னோரால் பகுத்துக் கூறப்பட்டிருந்தது.
- இவை செந்தமிழின் இயற்கை.
- தொல்காப்பியர் செந்தமிழ் வழங்கிய நிலத்தையும் கருத்தில் கொண்டார்.
- முன்னோர் நூல்களைத் தேடிக் கண்டறிந்து அவற்றிலுள்ள செய்திகளை முறைப்படுத்தி எண்ணிப் பார்த்தார்.
- அவற்றைப் புலமாகத் தொகுத்தார்.
- இது போக்கு என்னும் குற்றம் இல்லாத பனுவல்-நூல்
- இதனை நிலந்தரு திருவிற் பாண்டியன் புலவர்-அவையில் அரங்கேற்றினார்.
- அப்போது அதங்கோட்டு ஆசான் என்பவர் எழுப்பிய ஐயங்களைப் போக்கினார். இந்த அதங்கோட்டாசான் அறத்தை மட்டும் அழைத்துப் பேசும் நாவினை உடையவர். நான்கு வேதங்களிலும் முதிர்ந்த அறிவினை உடையவர்.
- தமிழ் (ஆரியத்தோடு) மயங்காத எழுத்து முறைமையை அதங்கோட்டு ஆசானுக்கு எடுத்துக் காட்டினார்.
- தொல்காப்பியர் 'ஐந்திரம்' என்னும் நூல் நிரம்பியிருந்த அறிவினை உடையவர். (ஐந்திரம் என்பது மயன் என்ற எழுத்தியல், ஓவிய,கட்ட்டிடக் கலை நிபுணரால் எழுதப்பட்ட தமிழ் இலக்கண நூல் என்றும் கூறுவர். ஐந்து திறம் ஆகிய ஐந்திணைகள் பற்றி கூறும் நூல் ஐந்திறம் எனப்பட்டது. பாணினியம் எனும் வடமொழி இலக்கணத்தைப் பின்பற்றி தொல்காப்பியம் இயற்றப்பட்டது எனும் கூற்றுக்கு தக்க ஆதாரம் கிடைக்கவில்லை.
- இந்தப் புலநூலால் தன்னைத் தொல்காப்பியன் என நிலைநாட்டிக்கொண்டார்.

- எழுத்ததிகாரம் என்பது ஆறாம் வேற்றுமைத்தொகைமொழி. அஃது எழுத்தினது அதிகாரம் என விரியும். இத்தொகைச்சொல் அன்மொழித் தொகையாய் எழுத்தினது இலக்கணங்களைக் கூறும் படலத்தை உணர்த்தி நின்றது.
- **எழுத்து** என்பது ‘எழுப்புதலுடையது’ என்னும் பொருள் தரும் கருவிப்பெயர். அது இங்குச் செவிப்புலனாகும் ஒலியெழுத்தைச் சுட்டிக், கட்புலனாகும் வரிவடிவத்திற்கும் உரியதாக நிற்றலின் காரணப்பெயர் என்று கூறுவர்.
- சாத்தன் என்பான் ஒருவனின் உடம்பு, உயிரும் உணர்வுமாகத் திகழும் அந்தச் சாத்தனைச் சுட்டி உணர்த்துமாறுபோல, அது வரிவடிவம் பெற்ற நின்று ஒலி உருவை உணர்த்தும் தன்மைத்தாய் இலக்கணக் குறியீடாக அமைந்தது.
- **அதிகாரம்:** மிக்குச்செல்லுதல். அஃதாவது, ஆட்சி கொள்ளுதல். அஃது ஈண்டு எழுத்திலக்கணத்தது ஆட்சி எல்லையைக் குறித்து நிற்றலின் காரணப்பெயராயிற்று.
- ஆசிரியர் இவ்வதிகாரத்துள், இசையானும் ஒலியானும் ஆக்கமுற்றுச் செவிப்புலனாகும் எழுத்துக்களின் பெயர், தொகை, வகை, விரி, முறை, ஒலியளவு, ஒலிமயக்கமாதல், உரு, தன்மை, வடிவுகொள்ளும் முறையாகிய பிறப்பமைதி ஆகியவற்றையும்; அவ்வெழுத்துக்கள் மொழியாதல், மொழிக்கண் நிற்கும் முறைமை, அவை ஈறும்முதலுமாகப் புணரும் இயல்பு, திரிபுறும் மரூஉநிலை ஆகியவற்றையும் அறிவியல்நோக்கொடு ஆராய்ந்து, அம்முடிபுகளை நூன்மரபு முதலாக ஒன்பது இயல்களாகப் பகுத்துணர்த்துகின்றார்.
- எழுத்தானாகும் சொற்களைப் பொருளுணர்த்துதற்கேற்பத் தொடர்களாக்கிச் செய்யுள் (இலக்கியம்) செய்து கோடல் மொழியின் பயனாதலின், அத் தொடர்மொழிகளை ஆக்கிக் கொள்ளும் கருவியாகிய சொற்களையும், அவற்றிற்கு அடிப்படைக் கருவியாகிய எழுத்துக்களையும் ஆராய்தல் முறைமை. ஆதலின், எழுத்திலக்கணம் முதற்கண் வைக்கப்பட்டுள்ளது.

**<u>தொல்காப்பிய எழுத்ததிகார இயல்கள் (UGC – NET- JUN 2009)</u>**

1. நூல் மரபு
2. மொழி மரபு
3. பிறப்பியல்
4. புணரியல்
5. தொகை மரபு
6. உருபியல்
7. உயிர் மயங்கியல்
8. புள்ளி மயங்கியல்
9. குற்றியலுகரப் புணரியல்

## 7.1.1.2. நூன்மரபு

- இசைப்பதும் ஒலிப்பதுமாகிய ஒலி எழுத்துக்களின் மரபுகளை உணர்த்தும் பகுதி என்பது இதன் பொருள். இஃது ஆறாவதன் தொகைமொழி. இத்தொகை, அன்மொழித் தொகையாய், எழுத்தொலிகளைப் பற்றிய இலக்கணம் கூறும் இயலை உணர்த்தி நின்றது.

TCA

- நூல் என்பது நுவல் என்னும் குறைவினையின் நீட்சியாய் ஆக்கம்பெற்றசொல்.
- நூவல் நூல், ஒல் என்னும் குறைச்சொற்கிளவிகளான் ஆக்கம்பெற்றது.

- இதன் பொருள் “நாவால் ஒலிக்கப்பெறுவது” என்பதாகும்.
- நாவால் உந்தப்பெறும் ஒலி என்பது கருத்து. வழக்கின்கண் இச்சொல் ‘சினையிற்கூறும் முதலறிகிளவி’ என்னும் ஆகுபெயரிலக்கணத்தான் நூலினை உணர்த்தலாயிற்று. இதன் இயற்பொருள் ‘ஒலியெழுத்து’ என்பதாகும்.
- மரபு என்பது (மருவு) மருவுதல் என்னும் தொழிற்பெயரின் அடியாகப் பிறந்த குறியீட்டுச் சொல்லாகும். தொன்றுதொட்டு நியதியாக வருதல் என்பது இதன்பொருள்.
- தமிழ்நெறியுணர்ந்த சான்றோரான் தொன்று தொட்டு வழங்கப்பெற்றுவரும் இலக்கணநெறியை உணர்த்தி நின்றது. எனவே, இவ்வியலுள் கூறப்பெறும் எழுத்தொலி மரபுகள் தமிழ்மொழிக்கே உரியவை என்பது புலனாகும்.
- இவ்வியலுள் ஆசிரியர் தமிழ்மொழிக்கென வரைந்துகொள்ளப் பெற்ற எழுத்துக்களின் தொகையும் வகையும் விரியும், அவற்றின் பெயரும் முறையும் இசையளவும் ஒலியளவும், அவற்றின் நீட்சியும் குறுக்கமும் திரிபாகும் மயக்கமும் வரிவடிவுசெய்து கோடற்குரிய குறிப்பும் இசையிடத்து எய்தும் நிலையும்பற்றி, ஆடிநிழலின், அறியக்கூறுகின்றார்.
- தனித்துவரல் மரபினையுடைய எழுத்து எனச் சிறப்பித்துச் சொல்லப் பெறுவன, சார்ந்துவரல் மரபினையுடைய மூன்றுமல்லாமல், அகரமாகிய எழுத்து முதலாக னகரமாகிய எழுத்து ஈறாக உள்ள முப்பஃது என்று கூறுவர் ஆசிரியர்.
- அகரனகரங்கள் அகப்பாட்டெல்லையாக நின்றன. ‘படுவ’ என்னும் பாடமே இந்நூல் நெறிக்கு ஒத்தது.
- சார்ந்துவரல் மரபினையுடைய மூன்றும் உட்பட, எழுத்து முப்பத்துமூன்றாம் என்றவாறு. இதனை ‘‘மூன்று தலையிட்ட முப்பதிற்று எழுத்தின்” என்பதில் நாம் அறிந்து கொள்ளலாம்.

95665 35080

- முதலெழுத்து 30, சார்பெழுத்து 3.
- சார்ந்து வரல் மரபினையுடைய அவைதாம் குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஆய்தம் என்ற முப்பால் ஒலிப்பியல்புடையதும் ஆகிய மூன்றும் சார்பெழுத்துக்களாகும்.

**எழுத்தின் இனம்**

- மரபுவழி அடுக்காகிய தமிழ் நெடுங்கணக்கு, இனப்பாகுபாடுகள், ஒன்றோடொன்று மயங்கும் நிலை முதலானவை இந்த இயலில் கூறப்பட்டுள்ளன.
- உயிரெழுத்துகள் குறில், நெடில் என மாத்திரை நோக்கில் இனப்படுத்தப்பட்டுள்ளன.
- மெய்யெழுத்துகள் வல்லினம், மெல்லினம், இடையினம் எனப் பாகுபடுத்தப்பட்டுள்ளன.
- பொருளைப் புலப்படுத்தும் சுட்டெழுத்துகள், வினாவெழுத்துகள் இடைச்சொல்-எழுத்துகள் சுட்டப்பட்டுள்ளன. மக்கள் ஒருவரைப் பார்த்து ஒருவர் மயங்குவது போல எழுத்துகள் ஒன்றோடொன்று மயங்கும் எழுத்து மயக்கம் மரபியல் கண்ணோட்டத்தில் வகுத்துக் காட்டப்பட்டுள்ளது.

➢ இவை அனைத்தும் தொல்காப்பிய காலத்துக்கு முந்திய மரபுநெறி என்பதை இந்த இயலுக்குச் சூட்டப்பட்டுள்ள 'நூல்-மரபு' என்னும் பெயராலும், 'என்ப' என முன்னோரைச் சுட்டிச் சொல்லும் குறிப்பு இந்த இயலில் மட்டுமே ஆறு இடங்களில் வருவதாலும் அறியலாம்.

**எழுத்துகளின் தொகுப்புக் குறியீட்டுப் பெயர்**

➢ அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ - என்னும் பன்னிரண்டும் உயிரெழுத்து.

➢ க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் - என்னும் பதினெட்டும் மெய்யெழுத்து.

➢ மெய்யெழுத்துகளைப் புள்ளி இட்டு எழுதுவர். ஒலிக்கும்போது புள்ளி இல்லா எழுத்தாக்கிக்கொண்டு ஒலிப்பர்.

➢ குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் ஆகிய மூன்றும் சார்பெழுத்துகள்.

- க, ச, ட, த, ப, ற - ஆறும் வல்லினம்.
- ங, ஞ, ண, ந, ம, ன - ஆறும் மெல்லினம்.
- ய, ர, ல, வ, ழ, ள - ஆறும் இடையினம்.

TEACHER'S CARE ACADEMY TCA KANCHIPURAM
95665 35080

➢ அ, இ, உ மூன்றும் சுட்டெழுத்து. (அவன், இவன், உவன்) (அவன் - கண்ணுக்குத் தெரியாத இடத்தில் இருப்பவன், இவன் - கண் முன் இருப்பவன், உவன் - கண்ணுக்கு எட்டிய தூரத்தில் புலப்படாமல் இருப்பவன்)

➢ ஆ, ஏ, ஓ - மூன்றும் வினா எழுத்து. (அவனா, அவனே, அவனோ செய்தான்) (எவன் என்னும் சொல் தொல்காப்பியர் காலத்தில் ஏன் என்னும் பொருளில் கையாளப்பட்டது.)

### 7.1.1.3. எழுத்துப் பெயர்களின் அகரவரிசை

➢ அளபெடை, ஆய்தம், இடையெழுத்து, உயிரெழுத்து, எழுத்து(முதலெழுத்து), குற்றியலிகரம், குற்றியலுகரம், குற்றெழுத்து, சார்பெழுத்து, சுட்டெழுத்து, நெட்டெழுத்து, மெய்யெழுத்து, மெல்லெழுத்து, வல்லெழுத்து, வினாவெழுத்து

**எழுத்துகளின் உருவம்**

➢ மெய்யெழுத்து புள்ளியிட்டு எழுதப்படும். எ, ஒ ஆகிய இரண்டும் புள்ளி பெறும்.

➢ (வீரமாமுனிவர் எ, ஏ என்றும், ஒ, ஓ என்றும் எழுதும் இக்காலத்தில் பயன்பாட்டுச் சீர்திருத்த வடிவத்தைச் செய்தார்.)

➢ சார்பெழுத்துகளாகிய குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் ஆகிய எழுத்துகளும் புள்ளியிட்டு எழுதப்படும்.

➢ மகரக்குறுக்கம் உள்ளே புள்ளி பெறும். (ம் எழுத்தில் முன்பே புள்ளி உள்ளது. ம் எழுத்தின் அரைமாத்திரை கால்மாத்திரையாகக் குறையும்போது புள்ளியை ம்-க்குள்ளே வைத்தனர்)

➢ புள்ளி இல்லாமல் எழுதப்படும் மெய்யெழுத்து உயிர்மெய் அகர-உயிர் ஏறிய எழுத்தாக மாறிவிடும்.

- ஏனைய உயிரெழுத்துகள் மெய்யெழுத்தோடு இயையும்போது திரிந்த உருவம் பெறும்.

### 7.1.1.4. தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கை

- தமிழ் மொழியில் உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் மெய்யெழுத்துகள் பதினெட்டும் ஒவ்வொன்றுடனும் சேர்ந்து உருவாகும் எழுத்துகள் உயிர்மெய் எழுத்துகள் எனப்படும்.
- உயிர்மெய்யெழுத்துகள் மொத்தம் 12 x 18 = 216 ஆகும்.
- இவற்றுடன் 12 உயிர் எழுத்துகளும், 18 மெய் எழுத்துகளும் ஓர் ஆய்த எழுத்தும் சேர்ந்து மொத்தம் 247 தமிழ் எழுத்துகள் தமிழ் மொழியில் உள்ளன. **(PG TRB 2001) (PG TRB 2005- 2006)**

### 7.1.1.5. எழுத்துகளின் ஒலியளபு (மாத்திரை)

- 'முருகன்' என்று சொல்லிப்பார்ப்போம். இது மூன்றரை மாத்திரைக் கால அளவில் ஒலிக்கப்படுகிறது.
- 'நல்லன்' என்று சொல்லிப்பார்ப்போம். இது மூன்று மாத்திரைக் கால-அளவில் ஒலிக்கப்படுகிது.
- படித்துக்கொண்டிருக்கும்போதே கண்ணிமை நொடிக்கிறது. இந்தச் சொடிப்பு நம் கட்டுப்பாட்டில் இல்லை.
- இப்படிக் கண்ணின் இமை நொடிக்கும் காலத்தை ஓர் 'அளபு' என்று கொண்டு அதனை 'மாத்திரை' என்று குறிப்பிடலாயினர்.
- குறில் எழுத்துக்கு ஒரு மாத்திரை.
- நெடில் எழுத்துக்கு இரண்டு மாத்திரை.
- எந்த எழுத்தும் மூன்று மாத்திரை ஒலிக்காது.

TCA

- எழுத்துக்கு மாத்திரை கூடவேண்டும் என்று கருதினால் கூடவேண்டிய அளபுள்ள எழுத்தைக் கூட்டி எழுதிக்கொள்ளவேண்டும். (உயிரளபெடை, ஒற்றளபெடை)
- மெய்யெழுத்துக்கு அரை மாத்திரை.
- குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் என்னும் சார்பெழுத்துகளுக்கு அரைமாத்திரை. மகரக்குறுக்கத்துக்குக் கால்மாத்திரை.

**உயிர்மெய்**

- உயிர்மெய் எழுத்து ஒலிக்கப்படும்போது மெய்யொலி முதலில் தோன்றி அதன் வழியை உயிரொலி தொடரும்.

**நரம்பின்மறை**

- நரம்பு என்பது யாழ். யாழிசை பற்றிய நூல் நரம்பின்மறை.
- யாழிசைக்கு ஏற்ப இசை பாடும்போது எழுத்தின் மாத்திரை சொல்லப்பட்ட அளபெல்லையை மீறும்.

- உயிரெழுத்துக்கு மட்டுமல்லாமல் ஒற்றெழுத்துகளுக்கும் மாத்திரை நீளும்.
- இப்படி இசை நீடும் என்று புலவர்கள் கூறுவர் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

### 7.1.1.6. மெய்யெழுத்துகளின் உடனிலை மயக்கம் (UGC – NET- july 2018)

- எல்லா மெய்யெழுத்துகளும் எல்லா மெய்யழுத்துகளோடும் இணைந்து நிற்பதில்லை.
- இன்ன மெய்யெழுத்து இன்ன மெய்யெழுத்தோடுதான் இணைந்து நிற்கும், இன்ன மெய்யெழுத்தோடு இணைந்து நிற்காது என்பது இப்பகுதியில் சுட்டப்படுகிறது.
- 'செய்கிறான்' என்னும் சொல்லில் ய், க் ஆகிய இரண்டு மெய்கள் உடனின்று மயங்கியுள்ளன.
- அதே பொலச் 'செய்வான்' என்பதில் ய், வ் ஆகிய இரண்டு மெய்கள் உடனின்று மயங்கியுள்ளன.
- இப்படி இந்த உடனிலை மெய்ம்மயக்கத்தை உணர்ந்துகொள்ள வேண்டும்.

**ட், ற், ல், ள் ஆகிய மெய் முன் க, ச, ப மூன்றும் மயங்கும்.**

- கேட்க, கற்க, செல்க, கொள்க
- கட்சிறார் (கண்ணோட்டம் உள்ள சிறுவர்), கற்சிறார் (கற்கும் சிறுவர்). செல்சிறார், கொள்சிறார்.
- கட்ப, கற்ப, செல்ப, கொள்ப

TCA

**ல், ள் ஆகிய ஆகிய மெயம்முன் ய, வ தோன்றும்.**

- கொல்யானை, வெள்யானை
- கோல்வளை, வெள்வளை

**ங், ஞ், ண், ந், ம், ன் ஆகிய மெய்ம்முன் அதன் இனவெழுத்து மயங்கும்.**

- தெங்கு, மஞ்சு, வண்டு, பந்து, கம்பு, கன்று.

**ண், ன் ஆகிய மெய்ம்முன் க, ச, ஞ, ப, ம, வ, ய ஆகிய ஏழும் மயங்கும்.**

- வெண்கலம், புன்கண்( இரக்கம் - "புன்கணீர் பூசல் தரும்" - திருக்குறள்)
- வெண்சாந்து, புன்செய்
- வெண்ஞான் (வெள்ளி அரைஞான் கயிறு), பொன்ஞான்
- வெண்பனி, பொன்படு நெடுவரை
- வெண்மாலை, பொன்மாலை
- மண்யாது, பொன்யாது
- மண்வலிது, பொன்வலிது

**ஞ், ந், ம், வ் முன்னர் ய நிற்கும்.**

- உரிஞ்யாது (உரிஞ் = தோல்), பொருந்யாது (பொருந் = முதுகு), திரும்யாது(திரும் = திருகாணி), தெவ்யாது(தெவ் = பகை)

**ம், வ மயங்கும்**

- நிலம்வலிது

**ய், ர், ழ் முன்னர் மொழிமுதல் ஒன்பது மெய்யும், ங எழுத்தும் உடனிற்கும்.**

- வேய்கடிது, வேர்கடிது, வீழ்கடிது (வீழ் = விழுது)
- வேய்சிறிது, வேர்சிறிது, வீழ்சிறிது,
- வேய்தீது, வேர்தீது, வீழ்தீது,
- வேய்பெரிது, வேர்பெரிது, வீழ்பெரிது,
- வேய்ஞான்றது, வேர்ஞான்றது, வீழ்ஞான்றது,
- வேய்நீண்டது, வேர்நீண்டது, வீழ்நீண்டது,
- வேய்மாண்டது, வேர்மாண்டது, வீழ்மாண்டது,
- வேய்யாது, வேர்யாது, வீழ்யாது,
- வேய்வலிது, வேர்வலிது, வீழ்வலிது,
- வேய்ஙனம், வேர்ஙனம், வீழ்ஙனம், (ஙனம் = படி - துணைப்பெயர், ஒப்புநோக்குக - இங்ஙனம்)

**ர, ழ**

- ர், ர இணைவதில்லை.
- ழ், ழ இணைவதில்லை.
- ர், ழ இணைவதில்லை.
- ழ், ர இணைவதில்லை.
- தன் மெய்யோடு தான் மயங்கும்

- காக்கை, எங்ஙனம், பச்சை, மஞ்ஞை, பட்டை, பண்ணை, தத்தை, வெந்நோய், அகப்பை, அம்மா, வெய்யர், எல்லி (= கதிரவன்), எவ்வி (பீச்சுகுழல்), கொள்ளி, கொற்றி, கன்னி
- எந்த எழுத்தும் தன்னைச் சுட்டுவதாயின் இணையும்.

## 7.1.2. மொழி மரபு

- மொழி வகைப்பாடு மூன்று வகைப்படும்

### 7.1.2.1. ஓரெழுத்தொருமொழி - இரண்டு மாத்திரையின் மிகாதவை.

- ஆ, பூ, கா, து, நொ போன்று தனியெழுத்து நிலையில் பொருள் தரும் சொற்களை ஓரெழுத்தொருமொழி என்றனர்.
- இவற்றில் 'கா' காட்டைக் குறிக்கும்போது பெயர்ச்சொல்.
- காப்பாற்று என்னும் பொருள் தரும்போது வினைச்சொல்.
- 'உண்கா கொற்றா' என்பதில் உள்ள கா இடைச்சொல்.
- குறில் உயிரெழுத்து ஐந்தில் எதுவும் தனிதொழி ஆகாது.
- (உயிர்மெய் குறிலில் து, நொ இரண்டு எழுத்து தனிமொழி ஆகும்)

TEACHER'S CARE ACADEMY TCA KANCHIPURAM
95665 35080

**ஈரெழுத்தொருமொழி** - இரண்டு மாத்திரையின் மிகாதவை

- மண், மணி
- இரண்டு இறந்து இசைக்கும் தொடர்மொழி - இரண்டு மாத்திரையின் மிக்கவை
- மலர், தேன்

## 7.1.2.2. சார்பெழுத்துகள்

### 7.1.2.2.1. குற்றியலுகரம்

- மொழியில் மாத்திரை குறைந்து ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம் எனப்படும்.

- அவை வல்லின எழுத்தின்மேல் ஏறி ஊர்ந்துவரும்.
- மொழியின் இறுதியில் வரும் - நாகு, வரகு
- மொழியின் இடையில் வரும் - செக்குக்கணை, சுக்குக்கோடு (சுக்குப்பொடி என்னும்போது வரும் 'கு' குற்றியலுகரம் அன்று)

### 7.1.2.2.2. குற்றியலிகரம்

- குற்றியலுகரத்தில் முடியும் சொல்லை அடுத்து 'யா' எழுத்தில் தொடங்கும் சொல் வந்தால் நிலைமொழியில் உள்ள குற்றியலுகரமானது குற்றியலிகரமாக மாறும்.
  - வரகியாது (வரகு+யாது)
  - 'யா' என்னும் உரையசைக்கிளவி முன்
  - கேண்மியா (கேளும்<கேண்ம்+யா)
  - இதில் வியப்பு
  - கதவியாது (கதவு+யாது)
  - பேரியாறு (பெரிய<பேர்+யாறு)

### 7.1.2.2.3. ஆய்தம்

- மொழியிடை ஆய்தம் - எஃகு, கஃசு (தொடி எடையில் நான்கில் ஒருபங்கு - நிறுத்தலளவைப் பெயர்)
- புணரியல் ஆய்தம் - கஃறீது (கல்+தீது), மஃடீது (மண்+தீது)
- உருநோக்கு ஆய்தம் - மண் கஃறென்றது (மண் கல் போல் கெட்டியாயிற்று)
- இசைநாக்கு ஆய்தம் - அருவி கஃறென்றது (அருவி 'கல்' என ஒலித்தது)
- அஃகல் - இது முற்றாய்தம்.

### 7.1.2.2.4. உயிரளபெடை

- பாடலில் இசை குன்றும் மொழியில் இசையைக் கூட்டித் தருவதற்காக ஒத்த குறிலெழுத்து உடனிற்கும். இதற்கு உயிரளபெடை என்று பெயர்.

  ஓஒ இனிதே எமக்கிந்நோய் செதகண்

  தாஅம் இதற்பட் டது. (திரு.1176)
- 'ஐ' எழுத்து 'ஐஇ' என இகரம் பெற்று அளபெடுக்கும்.
- 'ஔ' எழுத்து 'ஔஉ' என உகரம் பெற்று அளபெடுக்கும்.

95665 35080

### 7.1.2.3. மகரக்குறுக்கம்

- போன்ம் - செய்யுள் இறுதிப் போலி இறுதியில் ஈரொற்று.
- போன்ம் - என்பதில் உள்ள 'ம்' தன் அரை மாத்திரையில் குறுகும்.

### 7.1.2.4. ஈரொற்றுப் பெறுதல்

- வேய்க்குறை, வேய்ங்குறை எனப் புணர்ச்சியில் ஈரொற்று பெறும். (சிதை, தலை, புறம் என்பன போன்றவற்றிலும் இரண்டு ஒற்று வரும்)
- வேர்க்குறை, வேர்ங்குறை எனப் புணர்ச்சியில் ஈரொற்று பெறும். (சிதை, தலை, புறம் என்பன போன்றவற்றிலும் இரண்டு ஒற்று வரும்)

- ➢ வீழ்க்குறை, வீழ்ங்குறை எனப் புணர்ச்சியில் ஈரொற்று பெறும். (சிதை, தலை, புறம் என்பன போன்றவற்றிலும் இரண்டு ஒற்று வரும்)

### 7.1.2.5. எழுத்துப்போலி

- ➢ 'ஐ' என்பதை 'அஇ' என்று எழுதுவர்.
- ➢ 'ஔ' என்பதை 'அஉ' என்று எழுதுவர்.

**ஐகாரக் குறுக்கம்**

- ➢ 'ஐ' என்பதை 'அய்' என்று எழுதுவர். இப்படி எழுதுவது எழுத்துப்போலி.
- ➢ 'ஐயர்' என எழுதும்போது 'ஐ' எழுத்துக்கு இரண்டு மாத்திரை.
- ➢ 'அய்யர்' என எழுதும்போது ஒன்றரை மாத்திரை.

TEACHER'S CARE ACADEMY TCA KANCHIPURAM
95665 35080

**ஔகாரக் குறுக்கம்**

- ➢ 'ஔ' என்பதை 'அவ்' என்று எழுதுவர். இப்படி எழுதுவது எழுத்துப்போலி.
- ➢ 'ஔவை' என எழுதும்போது 'ஔ' எழுத்துக்கு இரண்டு மாத்திரை.
- ➢ 'அவ்வை' என எழுதும்போது ஒன்றரை மாத்திரை.

**மகரக்குறுக்கம்**

- ➢ 'போலும்' என்னும் சொல் செய்யுளில் 'போன்ம்' என வரும். இவ்வாறு வரும்போது 'ம்' எழுத்துக்குக் கால்மாத்திரை.

### 7.1.2.6. மகரமாக மயங்காத னகர-இறுதி அஃறிணைப் பெயர்கள்

**மகர னகர மயக்கம்**

- ➢ 1.உகின், 2.செகின், 3.விழன், 4.பயின், 5.அழன், 6.புழன், 7.குயின், 8.கடான், 9.வயான் ஆகியவை அந்த 9 சொற்கள் என்று இளம்பூரணர் எடுத்துக்காட்டுகிறார்.
- ➢ இவற்றில் உகின் என்னும் சொல்லை விட்டுவிட்டு எகின் என்னும் சொல்லைச் சேர்த்துக் நச்சினார்க்கினியர் குறிப்பிடுகிறார்.

### 7.1. 2.6.1. மொழிமுதல் எழுத்துகள்

- ➢ 22 எழுத்துகள் 94 நிலைகளில் மொழியப்படும் சொல்லுக்கு முதலெழுத்தாக வரும். இவற்றை மொழிமுதல் எழுத்துக்கள் எனக் கொள்கிறோம்.
- ➢ 'ச'கரக்கிளவி மொழிமுதல் வராது. என்பது தொல்காப்பிய நூற்பா. **(PG TRB 2001)**
- ➢ இதனால் 'ச'வில் துவங்கும் சங்கம், சட்டி, சவம், சள்ளை முதலானவை தமிழ் சொற்கள் அல்ல என்றும் பின்னாளில் தோன்றிய சொற்கள் என்றும் கூறுவர்.
- ➢ ஆனால் சம்பு சள்ளை சட்டி சமழ்பு என்ற சொற்கள் தொல்காப்பியத்திற்கு முன்பே இருந்தன என்பது முடிபு என்பர்.

### 7.1. 2.6.2. மொழியிறுதி எழுத்துகள்

- ➢ உயிரெழுத்து 12, ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள ஆகிய 11 எழுத்துகளின்

மெய்யெழுத்துகள், ஆக 23 எழுத்துகள் சொல்லின் இறுதியில் வரும் மொழியிறுதி எழுத்துக்கள்.

## 7.1.3. பிறக்கும் நிலைகள்

- வளி என்பது உலகைச் சூழ்ந்துள்ள காற்று. நாம் பேசும்போது வளி உந்தியிலிருந்து தோன்றும்.
- உந்தி என்பது காற்றை உந்தும் diaphragm. உந்தி உறுப்பானது அடிவயிற்றுக்கும் மூச்சுப்பைக்கும் இடையில் உள்ளது
- உந்தியில் தோன்றும் வளி தலையிலும், மிடற்றிலும், நிலைகொள்ளும்.
- மிடறு என்பது தொண்டையில் உணவுக்குழாயையும், காற்றுக்குழாயையும் மிடைந்துவைக்கும், அதாவது மடைமாற்றும் pharynx.
- அங்கிருந்து பாய்ந்து பல், இதழ், நாக்கு, மூக்கு, அண்ணம் ஆகியவற்றில் ஒலியைத் தோற்றுவிக்கும்.
- ஆக நிலைகொண்டு பாயும் ஒலியுறுப்புகள் 8.
- இந்த எழுத்துச்செல்வத்தைத் திறப்படக் காணின் அவற்றின் வெவ்வேறு தன்மை புலப்படும்.

### 7.1.3.1. உயிரெழுத்துகள்

TCA

- 12 உயிரெழுத்துகளும் மிடற்று வளியில் இசைக்கும்.
- அ, ஆ வாய் அங்காந்து பிறக்கும். **(PG TRB 2002- 2003)**
- இ, ஈ, எ, ஏ, ஐ ஆகியவை அங்காப்புடன் அண்பல் முதலை நாவிளிம்பு தொடப் பிறக்கும்.
- உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகியவை அங்காப்புடன் இதழ் குவியப் பிறக்கும்.
- இவற்றில் திரிபில் சிறு மாறுதலும் நிகழும்.

### 7.1.3.2. மெய்யெழுத்துகள்

- வாய் அங்காப்போடு கீழ்க்கண்ட செயல்பாடுகள் நடக்கும் போது மெய் எழுத்துக்கள் தோன்றுகிறது.
- க, ங - முதல்நா அண்ணத்தைத் தொடப் பிறக்கும்.
- ச, ஞ - இடைநா அண்ணத்தைத் தொடப் பிறக்கும். **(PG TRB 20011- 20012)**
- ட, ண - நுனிநா அண்ணத்தைத் தொடப் பிறக்கும்.
- இவை ஆறும் ஒருவகைப் பிறப்பு.
- த, ந - நாநுனி அண்ணமும் பல்லும் பொருந்துமிடத்தில் விரிந்து ஒற்றப் பிறக்கும்.
- ற, ன - நுனிநா மேலெழுந்து அண்ணத்தை ஒற்றப் பிறக்கும்.
- ர, ழ - நுனிநா மேலெழுந்து அண்ணத்தை வருடப் பிறக்கும்.

- ல - நாவிளிம்பு வீங்கி அண்பல் அடியை நா நுனி தொடுகையில் அண்ணத்தை ஒற்றப் பிறக்கும்.
- ள - நாவிளிம்பு வீங்கி அண்பல் அடியை நா நுனி தொடுகையில் அண்ணத்தை வருடப் பிறக்கும்.
- ப, ம - இதழோடு இதழ் பொருந்தப் பிறக்கும். **(PG TRB 2003- 2004) (PG TRB 2005-2006)**
- வ - மேல் பல்லும் கீழ் இதழும் இயையப் பிறக்கும்.
- ய - மிடற்றில் எழுந்த ஒலி அண்ணத்தில் அடைபடும்போது பிறக்கும்.
- மெல்லின எழுத்து ஆறும் மூக்கில் இசைக்கும்.

**சார்பெழுத்துகள்**

- குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் ஆகிய மூன்றும் சார்பெழுத்துகள். இவற்றிற்கு என்று தனி ஒலி இல்லை. எந்த எழுத்தோடு சார்ந்து வருகிறதோ அந்த எழுத்தின் ஒலியைப் பெறும்.

### 7.1.3.3. அந்தணர் மறை

- எழுத்து பிறக்கும் பள்ளிகள் தலை, மிடறு, நெஞ்சு என்று கூறிய தொல்காப்பியர் எந்தெந்த எழுத்துகள் அவற்றில் பிறக்கும் என்று காட்டவில்லை.
- "பள்ளிகளில் வளி எழும். சொல்லிய 5 இடங்களில் எழுத்தாகப் பிறந்து வளி விடுபடும்.
- எழுத்தானது பிறந்து, எழுந்து, விடுபடும் அளபு அந்தணர் மறையில் உள்ளது.
- அகத்தே தோன்றும் அதனை இங்குச் சொல்லாமல், புறத்தே வெளிப்படும் பாங்கை மட்டும் கூறியுள்ளேன்" என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.
- வல்லின எழுத்துகள் நெஞ்சிலும், ஆய்த எழுத்து தலையிலும், ஏனையவை மிடற்றிலும் பிறப்பதை அறிஞர்கள் உணர்ந்து கூறியுள்ளனர்.

## <u>7.1.4. புணரியல்</u>

**எழுத்து நோக்கில் புணரும் விதம்**

- உயிர் முன் உயிர்
- உயிர் முன் மெய்
- மெய் முன் உயிர்
- மெய் முன் மெய்

95665 35080

**மொழி நோக்கில் புணரும் விதம்**

- பெயரொடு பெயர்
- பெயரொடு தொழில்
- தொழிலொடு பெயர்
- தொழிலொடு தொழில்

**திணை நோக்கில் புணரும் விதம்**

- நிலைமொழி உயர்திணை
- நிலைமொழி அஃறிணை

**TEACHER'S CARE PUBLICATION**
38/23, Vaigundaperumal Koil Street,Kancheepuram- 631502
Mobile : 95665 35080, 9786269980 Land Line : 044-2723 5080

**2025-2026**

# PG TRB

**G.O No. 219** **New Syllabus**

# தமிழ்



அலகு-7 (Volume-2)
இலக்கணம்

*Your Success is Our Goal...*

- ஐந்திலக்கணம்- எழுத்து. சொல்,
- பொருள் , யாப்பு, அணி
- பாட்டியல், புலமை இலக்கணம்
- தொல்காப்பியம், நன்னூல்
- யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை
- நம்பியகப் பொருள்
- புறப்பொருள் வெண்பாமாலை
- தண்டியலங்காரம்.

tcaexamguide
Teacher's Care Academy
www.tcaexamguide.com
tcaexamguide@gmail.com

# தமிழ்

# இலக்கணம்

# PG TRB (2025-2026)

## அலகு – 7 (தொகுதி - 2)

## FIRST EDITION

**TEACHER'S CARE PUBLICATION**

38/23, Vaigundaperumal Koil Street,Kancheepuram- 631502

Mobile : 95665 35080, 9786269980 Land Line : 044-2723 5080

Branch Office : 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy (76399 67359)

Branch Office: Advaitha Ashram Road, New Bus Stand, Salem (93602 68118)

| உள்ளடக்கம் | ப.எ. |
|---|---|
| **7. 6. யாப்பருங்கலக்காரிகை** | **1** |
| 7.6.1. யாப்பிலக்கணம் | 2 |
| 7.6.1.1. யாப்பிலக்கணப் பழமை | |
| 7.6.1.2. முதல் யாப்பிலக்கண நூல் | |
| 7.6.1.3. தொல்காப்பியச் செய்யுளியல் செய்திகள் | |
| 7.6.1.4. தொல்காப்பியச் செய்யுளியல் உரைகள் | |
| 7.6.1.5. முழுமையாகக் கிடைக்காத யாப்பு நூல்கள் | |
| 7.6.1.5. இலக்கண நூல்கள் பிறவற்றில் யாப்பு | |
| 7.6.1.6. ஐந்திலக்கண நூல்களில் யாப்பு | |
| 7.6.1.7. யாப்பருங்கலக்காரிகை | |
| 7.6.1.7. யாப்பருங்கலக்காரிகை | |
| 7.6.1.8. ஆசிரியர் | |
| 7.6.1.9. நூல் யாப்பும், அமைப்பும் | |
| 7.6.1.10. மகடூஉ முன்னிலை | |
| 7.6.1.11. கட்டளைக் கலித்துறை | |
| 7.6.1.12. காரிகை நூலின் அமைப்பு | |
| 7.6.1.13. ஒழிபுச் செய்திகள் | |
| 7.6.1.14. எழுத்து | |
| 7.6.1.15. அசைக்கு உறுப்பாகும் எழுத்துகள் | |
| 7.6.1.16. மாத்திரை | |
| 7.6.1.17. தமக்குரிய மாத்திரையில் குறைந்து ஒலிப்பன | |
| 7.6.1.18. குற்றியலுகரம் | |
| 7.6.1.19. குற்றியலிகரம் | |
| 7.6.1.20. ஐகாரக்குறுக்கம் | |
| 7.6.1.21. தமக்குரிய மாத்திரையில் நீண்டொலிப்பன | |
| 7.6.1.22. உயிரளபெடை | |
| 7.6.1.23. ஒற்றளபெடை | |
| 7.6.1.24. மறுவறு மூவினம் | |
| 7.6.1.25. அசை | |

| | |
|---|---|
| 7.6.1.26. தளை | |
| 7.6.1.27. சீர்களும் அவை தோற்றுவிக்கும் தளைகளும் | |
| 7.6.1.28. அடி | |
| 7.6.1.29. நால்வகைப்பாவும் அடிவரையறையும் | |
| 7.6.1.30. பாவினங்களில் சிற்றெல்லை: | |
| 7.6.1.31. தொடை | |
| 7.6.1.32. தொடை விகற்பங்கள் | |
| 7.6.1.33. பாவிற்கான ஓசை | |
| 7.6.1.34. வெண்பாவின் பொது இலக்கணம் | |
| 7.6.1.35. செப்பலோசை மூன்று வகைப்படும் | |
| 7.6.1.36. வெண்பாவின் வகைகள் | |
| 7.6.1.37. வெளி விருத்தம் | |
| 7.6.1.38. ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் | |
| 7.6.1.39. ஆசிரியப்பாவின் வகைகள் | |
| 7.6.1.40. கலிப்பாவின் பொது இலக்கணம் | |
| 7.6.1.41. கொச்சகக் கலி | |
| 7.6.1.42. வஞ்சிப்பாவின் பொது இலக்கணம் | |
| 7.6.1.43. மருட்பாவின் பொது இலக்கணம் | |
| 7.6.1.44. கூன் | |
| 7.6.1.45. வனப்பு | |
| 7.6.1.46. பொருள்கோள் | |
| 7.6.1.47. குறிப்பிசை | |
| 7.6.1.48. குற்றங்கள் | |
| மாதிரி வினாக்கள் - 1 | 78 |
| **7.7. நம்பியகப்பொருள்** | **79** |
| 7.7.1.ஆசிரியர் | 79 |
| 7.7.2. நூலின் அமைப்பு | 80 |
| 7.7.3. அகத்திணை ஒழுக்கம் - பொதுப்பார்வை | 80 |
| 7.7.4. முப்பொருள் | 81 |
| 7.7.5. அகத்திணையியல் | 82 |
| 7.7.5.1. அகப்பொருள் வகை | |

| | |
|---|---|
| 7.7.5.2. அகப்பொருள் சொல்லப்படும் முறை | |
| 7.7.5.3. கைக்கிளை | |
| 7.7.5.4. பெருந்திணை | |
| 7.7.5.5. ஐந்திணை | |
| 7.7.5.6. ஐந்திணைக்கும் உரிய பொருள்கள் | |
| 7.7.5.7. முதற்பொருள் | |
| 7.7.5.8. கருப்பொருள் | |
| 7.7.5.9. உரிப்பொருள் | |
| 7.7.5.10. நிமித்தம் | |
| 7.7.5.11. கைகோள் வகை | |
| 7.7.5.12. களவும் - கற்பும் | |
| 7.7.5.13. களவுப் புணர்ச்சி வகை | |
| 7.7.5.14. களவுப் புணர்ச்சியின் இருபெரும் திறம் | |
| 7.7.5.15. களவுப் புணர்ச்சிக்குரிய இடம் | |
| 7.7.5.16. வரைவு பற்றிய இலக்கணம் | |
| 7.7.5.17. வரைவின் வகைகள் | |
| 7.7.5.18. அறத்தொடு நிற்றல் | |
| 7.7.5.19. கற்பு என்னும் கைகோள் | |
| 7.7.5.20. கற்பில் புணர்ச்சி - சில வகைப்பாடுகள் | |
| 7.7.5.21. பிரிவும் அதன் வகைகளும் | |
| 7.7.5.22. களவில் நிகழும் பிரிவுகள் | |
| 7.7.5.23. கற்பில் நிகழும் பிரிவுகள் | |
| 7.7.5.24. பிரிவு பற்றிய சில சிறப்பு விதிகள் | |
| 7.7.5.25. ஊடல் தீர்க்கும் வாயில்கள் | |
| 7.7.6. களவியல் | 96 |
| 7.7.6.1. களவின் இலக்கணம் | |
| 7.7.6.2. எண்வகை மணங்கள் | |
| 7.7.6.3. கைக்கிளையின் பாகுபாடு | |
| 7.7.6.4. களவிற்கு உரிய கிளவித்தொகை | |
| 7.7.6.5. தலைவியால் அடையும் இயற்கைப் புணர்ச்சியின் விரிவு | |
| 7.7.6.6. வன்புறை வகை | |

| | |
|---|---|
| 7.7.6.7. பிரிவுழி மகிழ்ச்சியும் பிரிவுழிக் கலங்கலும் | |
| 7.7.6.8. இடந்தலைப்பாடு | |
| 7.7.6.9. பாங்கன் கூட்டம் | |
| 7.7.6.10. பாங்கன் கூட்டத்தின் வகை | |
| 7.7.6.11. பாங்கிற் கூட்டல் | |
| 7.7.6.12. இருவரும் உள்வழி அவன்வர உணர்தல் | |
| 7.7.6.13. பாங்கியிற் கூட்டத்தின் வகை | |
| 7.7.6.14. பகற்குறி | |
| 7.7.6.15. இரவுக் குறி | |
| 7.7.6.16. வரும்தொழிற்கு அருமை | |
| 7.7.6.17. வரைதல் வேட்கை | |
| 7.7.6.18. வரைதல் வேட்கையின் காரணங்கள் | |
| 7.7.6.19. வரைவு கடாதலின் வகை | |
| 7.7.6.20. ஒருவழித்தணத்தலின் வகை | |
| 7.7.6.21. வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிதல் | |
| 7.7.6.22. வன்பொறைக்கு உரியது | |
| 7.7.7. வரைவியல் | 126 |
| 7.7.7.1. இலக்கணம் | |
| 7.7.7.2. வரைவிற்குரிய கிளவிகள் | |
| 7.7.7.3. வரைவு மலிதலின் வகை | |
| 7.7.7.4. அறத்தொடு நிற்றல் | |
| மாதிரி வினாக்கள் - 2 | 128 |
| **7.8. புறப்பொருள் வெண்பாமாலை** | **129** |
| 7.8.1. பெயர்க்காரணம் | 129 |
| 7.8.2. நூலின் சிறப்பு | 130 |
| 7.8.3. நூலின் ஆசிரியர் | 130 |
| 7.8.4. ஆசிரியரின் சமயம் | 131 |
| 7.8.5. ஆசிரியரின் காலம் | 131 |
| 7.8.6. வெட்சிப்படலம் | 132 |
| 7.8.7. கரந்தைப் படலம் | 133 |
| 7.8.8. வஞ்சிப் படலம் | 134 |

| | |
|---|---|
| 7.8.9. வஞ்சித் திணை | 135 |
| 7.8.10. காஞ்சிப் படலம் | 137 |
| 7.8.11. நொச்சிப் படலம் | 139 |
| 7.8.12. உழிஞைப் படலம் | 140 |
| 7.8.13. தும்பைப் படலம் | 148 |
| 7.8.14. வாகைப் படலம் | 153 |
| 7.8.15. பாடாண் படலம் | 159 |
| 7.8.16. கைக்கிளை | 167 |
| 7.8.17. பெருந்திணை | 167 |
| 7.8.18. பொதுவியல் திணை | 168 |
| 7.8.19. சிறப்புப் பொதுவியல் | 170 |
| 7.8.20. காஞ்சிப் பொதுவியல் | 172 |
| 7.8.21. முல்லைப் பொதுவியல் | 173 |
| 7.8.22. கைக்கிளைத் திணை | 174 |
| 7.8.23. பெருந்திணை | 177 |
| 7.8.24. இருபால் பெருந்திணை - II | 181 |
| மாதிரி வினாக்கள் - 3 | 183 |
| **7.9. தண்டியலங்காரம்** | **184** |
| 7.9.1. தண்டியலங்காரம் – நூலமைப்பு | 184 |
| 7.9.2. தண்டியலங்காரமும் அணியியலும் | 184 |
| 7.9.3. தண்டியலங்கார நூலாசிரியர் | 185 |
| 7.9.4. தண்டியலங்காரத் தனிச்சிறப்புகள் | 185 |
| 7.9.5. தண்டியலங்கார உரையும் பதிப்பும் | 186 |
| 7.9.6. பொதுவணியியல் | 186 |
| 7.9.6.1.செய்யுள் வகைகள் 4 | |
| 7.9.6.1.1 பெருங்காப்பியம் - இலக்கணம் | |
| 7.9.6.1.2. காப்பிய இலக்கணம் | |
| 7.9.6.1.3. செய்யுள் நெறிகள் - 2 | |
| 7.9.7. பொருளணியியல் – 35 (PG TRB 2012- 2013) | 189 |
| 7.9.7.1. தன்மை அணி | |
| 7.9.7.2. உவமை அணி | |

| | |
|---|---|
| 7.9.7.3. ஒட்டணி | |
| 7.9.7.4. உருவக அணி | |
| 7.9.7.4. தீவக அணி | |
| 7.9.7.6. பின்வருநிலை அணி | |
| 7.9.7.7. முன்னவிலக்கு அணி | |
| 7.9.7.8. வேற்றுப்பொருள் வைப்பு அணி | |
| 7.9.7.9. வேற்றுமை அணி | |
| 7.9.7.10. விபாவனை அணி | |
| 7.9.7.11. ஒட்டு அணி | |
| 7.9.7.12. அதிசய அணி | |
| 7.9.7.13. தற்குறிப்பேற்ற அணி | |
| 7.9.7.14. ஏது அணி | |
| 7.9.7.15. நுட்ப அணி | |
| 7.9.7.16. இலேச அணி | |
| 7.9.7.17. நிரல் நிறை அணி | |
| 7.9.7.18. ஆர்வமொழி அணி | |
| 7.9.7.19. சுவை அணி | |
| 7.9.7.20. தன்மேம்பாட்டு உரை அணி | |
| 7.9.7.21. பரியாய அணி | |
| 7.9.7.22. சமாயித அணி | |
| 7.9.7.23. உதாத்த அணி | |
| 7.9.7.24. அவநுதி அணி | |
| 7.9.7.25. சிலேடை அணி | |
| 7.9.7.26. விசேட அணி | |
| 7.9.7.27. ஒப்புமைக்கூட்ட அணி | |
| 7.9.7.28. விரோத அணி | |
| 7.9.7.29. மாறுபடு புகழ்நிலை அணி | |
| 7.9.7.30. புகழாப் புகழ்ச்சி அணி | |
| 7.9.7.31. நிதரிசன அணி | |
| 7.9.7.32. புணர்நிலை அணி | |
| 7.9.7.33. பரிவருத்தனை அணி | |

| | |
|---|---|
| 7.9.7.34. வாழ்த்து அணி | |
| 7.9.7.35. சங்கீரண அணி | |
| 7.9.7.36. பாவிக அணி | |
| 7.9.8. சொல்லணியியல் | 213 |
| 7.9.8.1. சித்திரகவி | |
| 7.9.8.2. மடக்கு | |
| 7.9.8.3. சித்திரக்கவி | |
| 7.9.8.4. நிரோட்டகம் | |
| **7.10. மெய்ப்பாட்டியல்** | **214** |
| 7.10.1. மெய்ப்பாடு | 214 |
| 7.10.1.1.நகைச்சுவை தோன்றுமிடங்கள் | |
| 7.10.1.2. அழுகைச்சுவை தோன்றுமிடங்கள் | |
| 7.10.1.3. இளிவரல் சுவை தோன்றுமிடங்கள் | |
| 7.10.1.4. மருட்கை சுவை தோன்றுமிடங்கள் | |
| 7.10.1.5. அச்சச் சுவை தோன்றுமிடங்கள் | |
| 7.10.1.6. பெருமிதச்சுவை தோன்றுமிடங்கள் | |
| 7.10.1.7. வெகுளிச்சுவை தோன்றுமிடங்கள் | |
| 7.10.1.8. உவகைச்சுவை தோன்றுமிடங்கள் | |
| 7.10.1.9. மெய்ப்பாட்டிற்குரிய பிற நிலைகளன்கள் | |
| 7.10.1.10. புணர்ச்சிக்குப்பின் நிகழும் மெய்ப்பாடுகள் | |
| 7.10.1.11. களவு காலத்தில் பிரிவின்போது நிகழும் மெய்ப்பாடுகள் – 20 | |
| 7.10.1.12. தலைவனைத் திருமணத்திற்குத் தூண்டும் மெய்ப்பாடுகள் | |
| 7.10.1.13. திருமணத்திற்குப் பின் நிகழும் மெய்ப்பாடுகள் | |
| 7.10.1.14. தலைவன் தலைவியரின் பத்துவகைப் பொருத்தங்கள் | |
| 7.10.1.15. தலைவன் தலைவியரிடம் அமையக் கூடாத குணங்கள் – 12 | |
| 7.10.1.16. பொருள்கோள் | |
| **7.11. உள்ளுறை, இறைச்சி** | **225** |
| 7.11.1. உள்ளுறை உவம வகைகள் (PG TRB 29.09.2019 FN) | 226 |
| 7.11.2. இறைச்சி | 231 |
| 7.11.3. உள்ளுறை - இறைச்சி : ஒற்றுமையும் வேற்றுமையும் | 232 |

| | |
|---|---|
| மாதிரி வினாக்கள் - 4 | 233 |
| மாதிரி வினாக்கள் - 5 | 234 |
| முக்கிய வினாக்களின் பெட்டகம் | 235 |



TCA APP DOWNLOAD - செய்து விடைகளை காணவும்

TCA


## பார்வை நூல்கள்

1) **தொல்காப்பியம் (எழுத்ததிகாரம்)**, நச்சினார்க்கினியர் உரை.
2) **தொல்காப்பியம் (சொல்லதிகாரம்)**, நச்சினார்க்கினியர் உரை.
3) **தொல்காப்பியம் (பொருளதிகாரம்)**, நச்சினார்க்கினியர் உரை.
4) **நன்னூல் (எழுத்ததிகாரம்)** , உரை மாதவச் சிவஞான அடிகள்.
5) **நன்னூல் (எழுத்ததிகாரம்)** , உரை மாதவச் சிவஞான அடிகள்.
6) **புறப்பொருள் வெண்பாமாலை**, உரை ச.திருஞானசம்பந்தம்.
7) **நம்பியகப்பொருள்**, உரை வ. த. இராமசுப்ரமணியம்.
8) **தண்டியலங்காரம்**, உரை டாக்டர் கு.சுந்தரமூர்த்தி.

## பாடத்திட்டம் (Syllabus)

### இலக்கணம்

ஐந்திலக்கணம் – எழுத்து, சொல், பொருள் (அகப்பொருள், புறப்பொருள்), யாப்பு, அணி; பாட்டியல் – புலமை இலக்கணம் – தொல்காப்பியம், நன்னூல், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, நம்பியகப் பொருள், புறப்பொருள் வெண்பாமாலை, தண்டியலங்காரம்.

**TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM**

**TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER**

**HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080**

**B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018**

**B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem**

**Trichy: 76399 67359 Salem: 93602 68118**

# PG TRB – TAMIL

## அலகு - 7 (தொகுதி – 2)

**பாடத்திட்டம்**

**ஐந்திலக்கணம் – எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி – பாட்டியல் – புலமை இலக்கணம் – தொல்காப்பியம், நன்னூல், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, நம்பியகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை, தண்டியலங்காரம்.**

## 7. 6. யாப்பருங்கலக்காரிகை

- தமிழிலக்கணம் ஐந்து வகைப்படும் என்று சொல்வது ஒரு மரபுச் செய்தி.
- எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்கிற இவையே ஐந்து வகை இலக்கணங்கள் ஆகும்.
- இவை ஐந்தையும் ஒன்றாகவோ, சிலவற்றைப் பற்றியோ அல்லது இவற்றுள் ஒரு வகையைக் குறித்தோ தமிழ் இலக்கண நூல்கள் இயற்றப் பெற்றுள்ளன.
- புலமை இலக்கணம் என்னும் ஆறாம் வகையும் சேர்ந்துள்ளது. (PG TRB 29.09.2019 FN)

**யாப்பு இலக்கணம்**

- பாடல்கள் எழுதுவதைப் பாட்டுக்கட்டுதல் என்று இன்றும் கிராமப்புறங்களில் கூறுகின்றனர்.
- யாத்தல் என்னும் சொல்லுக்குக் கட்டுதல், பிணைத்தல், தளைத்தல் என்று பொருள்.
- செய்யுளுக்குரிய உறுப்புகள் ஓர் ஒழுங்கமைதியோடு கட்டப்பெறுகின்றன.
- எனவே இது யாப்பு என்னும் சொல்லால் குறிக்கப்பட்டது.
- யா என்னும் வினையடிச் சொல்லிலிருந்து இச்சொல் வந்தது. செய்யுள் குறிப்பிட்ட ஓர் ஓசையைப் பெறும் வகையில் செய்யுள் உறுப்புகள் சேர்த்து அமைக்கப் பெறுகின்றன.
- பாடப்படுவதற்குப் பாட்டு அல்லது பாடல் என்று பெயர். தமிழில் செய்யுள் என்பதற்குப் பல பெயர்கள் உள்ளன. யாப்பு, தூக்கு, தொடர், பாட்டு என்பன அவற்றுள் சில.

## 7.6.1. யாப்பிலக்கணம்

- குறிப்பிட்ட ஓர் ஓசை அமையும் வகையில், எழுத்து, அசை, சீர் முதலான யாப்பு உறுப்புகளைச் சேர்த்து அமைப்பதற்கு யாப்பிலக்கணம் என்று பெயர்.
- இவ்வுறுப்புகள் தகுந்த முறையில் பிணைக்கப்படுவதால் இவ்விலக்கணத்தை யாப்பு எனும் பெயரால் குறித்தனர்.

### 7.6.1.1. யாப்பிலக்கணப் பழமை

- வாய்மொழிப் பாடல்கள் வளர்ச்சி பெற்று மொழியின் அடிப்படை அலகுகளாகிய எழுத்து, சொல் முதலியவை உருப்பெற்ற காலத்தில் யாப்பிலக்கணம் தோன்றியிருக்க வாய்ப்பில்லை.
- மக்கள் வாழ்வியலைச் சார்ந்து பொருளிலக்கணம் தோன்றி அதனை வெளிப்படுத்துவதற்கு உரிய வடிவம் தேவைப்பட்ட போது, யாப்பு உருப்பெற்றிருக்கக் கூடும். வாய்மொழிப் பாடல்களே, கால வளர்ச்சியில், புலவர்களால் செப்பம் செய்யப் பெற்றதால் பாவகைகள் தோன்றியிருக்கக் கூடும். எவ்வாறாயினும், ஓசைகளின் அடிப்படையிலேயே செய்யுள் செய்வதற்குரிய யாப்பு இலக்கணம் தோன்றி வளர்ந்திருக்க வேண்டும்.

### 7.6.1.2. முதல் யாப்பிலக்கண நூல்

- கிடைத்துள்ள தமிழ் நூல்களுள் தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலே காலத்தால் முந்தியது. அந்நூலின் மூன்றாவது அதிகாரமாகிய பொருளதிகாரத்தில் செய்யுளியல் என்பது எட்டாவது இயலாக அமைந்துள்ளது.
- இதில்தான் யாப்பிலக்கணச் செய்திகள் இடம் பெற்றுள்ளன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட அந்நூலில் தொல்காப்பியர் தம் காலத்திற்கு முந்திய யாப்பியல் சிந்தனையாளர்களைப் பலவாறு குறிப்பிட்டுள்ளார்.
- யாப்பறி புலவர், நல்லிசைப் புலவர், நூல் நவில் புலவர் என்பன போன்ற தொடர்களால் சுட்டியுள்ளார். எனவே, அவர் காலத்திற்கு முன்பிருந்தே யாப்பியற் சிந்தனை இருந்துள்ளது என அறியலாம். எனினும், தனிப்பட்ட ஒரு நூற் பெயரையோ, புலவர் பெயரையோ தொல்காப்பியர் குறிப்பிடவில்லை.
- இலக்கியத்தைக் கண்டு இலக்கணம் படைப்பது உண்டு. ஆகவே தொல்காப்பிய காலத்திற்கு முன்பே பல இலக்கியங்கள் இருந்திருக்கக் கூடும்.
- அவற்றிலிருந்தே இலக்கணங்களை உருவாக்கியிருப்பர். இவ்வாறு சிந்தித்தால் தமிழில் பலநூறு ஆண்டுகட்கு முன்பிருந்தே செய்யுள் இலக்கியமும், அது சார்ந்த யாப்புப் பற்றிய சிந்தனையும் வளர்ந்து வந்துள்ளன என்பது தெளிவாகப் புலப்படும்.

### 7.6.1.3. தொல்காப்பியச் செய்யுளியல் செய்திகள்

TCA

- தொல்காப்பியர் தம் நூலில் அக்காலத்தில் பயன்படுத்திய யாப்பு முறையை ஒட்டி ஏழு பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார்.

| | |
|---|---|
| 1) பாட்டு | 5) பிசி (விடுகதை) **(PG TRB 2003- 2004) (UGC – NET- JUN 2008)** |
| 2) உரை | 6) அங்கதம் |
| 3) நூல் | 7) முதுசொல் |
| 4) வாய்மொழி | |

TEACHER'S CARE ACADEMY KANCHIPURAM 95665 35080

- என்பன அவை. மேலும், செய்யுள் இயற்றுவதற்குத் தேவைப்படும் உறுப்புகளைத் தொல்காப்பியர் இரு தொகுதிகளாகக் கூறியுள்ளார்.
- முதல் பிரிவில் காணப்படும் 26 உறுப்புகள் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1) மாத்திரை | 8) தூக்கு | 15) கூற்றுவகை | 22) முன்னம் |
| 2) எழுத்து | 9) தொடை | 16) கேட்போர் | 23) பொருள் வகை |
| 3) அசை | 10) நோக்கு | 17) களன் | 24) துறை |
| 4) சீர் | 11) பா | 18) காலம் | 25) மாட்டு |
| 5) அடி | 12) அளவு | 19) பயன் | 26) வண்ணம் |
| 6) யாப்பு | 13) திணை | 20) மெய்ப்பாடு | |
| 7) மரபு | 14) கைகோள் | 21) எச்சம் | |

- செய்யுளுக்கு அடிப்படையான உறுப்புகளும், செய்யுளின் பொருள் புலப்பாட்டுக்கு உதவும் உறுப்புகளும் இவற்றுள் இடம் பெற்றுள்ளன.
- அதே நூற்பாவில் இரண்டாவது பிரிவில் எண்வகை வனப்புகள் செய்யுள் உறுப்புகளாகத் தனியே சுட்டப்பெற்றுள்ளன. இவ்விரு பிரிவுகளிலும் சேர்த்து மொத்தம் 34 உறுப்புகள் செய்யுளுக்கு உரியனவாகக் கூறப்பெற்றுள்ளன.
- எண்வகை வனப்புகள்

| | | | |
|---|---|---|---|
| 1) அம்மை | 3) தொன்மை | 5) விருந்து | 7) புலன் |
| 2) அழகு | 4) தோல் | 6) இயைபு | 8) இழைபு |

- வனப்பு என்பது அழகு என்று பொருள்படும். பல உறுப்புகள் ஒன்று சேர்ந்தபோது உருவாகும் செய்யுள் அழகு, அது.

### 7.6.1.4. தொல்காப்பியச் செய்யுளியல் உரைகள்

- ❖ தொல்காப்பியர் கூறிய செய்திகள் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டன. ஆதலால் இவற்றின் பொருளை விளங்கிக் கொள்வதற்கு ஏற்பப் பலர் உரை எழுதியுள்ளனர்.
- ❖ தொல்காப்பியச் செய்யுளியலுக்கு மூவர் எழுதிய உரைகள் முதன்மையானவை. இவர்களுள் இளம்பூரணர் என்பவர் காலத்தால் முற்பட்டவராவார்.
- ❖ இவர் இவ்வியலுக்கு எளிமையாகவும், சுருக்கமாகவும், தெளிவாகவும் உரை எழுதியுள்ளார். நூல் முழுவதற்கும் உரை எழுதிய இளம்பூரணர் கி.பி.11-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். நூல் முழுமைக்கும் இவர் உரை உள்ளது.

- ❖ பேராசிரியர், நச்சினார்க்கினியர் என்பாரும் இவ்வியலுக்கு உரை எழுதிய உரையாசிரியர்களாவர். பேராசிரியர் எழுதிய உரை தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் பின் நான்கியல்களுக்கு மட்டுமே கிடைத்துள்ளது.
- ❖ நச்சினார்க்கினியர் பெரிதும் பேராசிரியர் உரையைப் பின்பற்றியே செய்யுளியலுக்கு உரை எழுதியுள்ளார். இவர் உரை, நூல் முழுமைக்கும் உளது.
- ❖ இளம்பூரணர் உரை தொல்காப்பியர் கால யாப்பியல் சிந்தனையுடன், இவர்கால யாப்பியற் சிந்தனைகளையும் சேர்த்து எழுதப்பெற்ற இயல்பினதாகும். பிற உரையாசிரியர்கள் இருவரும் தொல்காப்பியர் சிந்தனைகளே யாப்பியலுக்குப் போதுமானவை எனும் கருத்துடன் உரை செய்துள்ளனர்.




TEACHER'S CARE ACADEMY
KANCHIPURAM
95665 35080

### 7.6.1.5. முழுமையாகக் கிடைக்காத யாப்பு நூல்கள்

- ❖ கி.பி. 10ஆம் நூற்றாண்டிற்கு முன் இயற்றப்பெற்ற யாப்பு இலக்கண நூல்கள் பலவற்றைப் பற்றிய குறிப்புகளை யாப்பருங்கல விருத்தி உரை, தொல்காப்பிய உரைகள், இலக்கிய உரைகள் போன்றவற்றிலிருந்து அறிகிறோம்.

**காக்கைப்பாடினியம்**

- ❖ இந்நூற் பகுதிகளை யாப்பருங்கல விருத்தி உரைகாரர் மிகுதியாக எடுத்தாண்டுள்ளார்.
- ❖ இந்நூல் ஆசிரியரை மாப்பெரும் புலவர் என்று யாப்பருங்கல விருத்தியுரைகாரர் பாராட்டியுள்ளார்.
- ❖ தொல்காப்பியருக்குப் பின்வந்த யாப்பு நூலாருள் இவர் காலத்தால் முற்பட்டவராகக் கூடும் என்பது அறிஞர் கருத்து.
- ❖ யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை ஆகியவற்றுக்கு காலத்தால் முற்பட்டது இந்நூல்.

### அவிநயம்

❖ யாப்பருங்கல உரையாசிரியர் அவிநய நூற்பாக்களைப் பல இடங்களில் தம் உரையில் எடுத்தாண்டுள்ளார்.

❖ இந்நூல், அதனை இயற்றிய அவிநயனார் பெயரில் அவிநயம் என்றே வழங்கப்பட்டுள்ளது.

❖ யாப்பிலக்கண நூலாகிய இதனை மற்றவர்கள் அவிநயனார் யாப்பு எனக் குறித்துள்ளனர். இந்நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. இந்நூலுக்கு ஒரு பழைய உரை உள்ளது.

❖ இந்நூலில் உள்ள யாப்பியல் குறித்த கருத்துகள் பல, காக்கைப்பாடினிய நூற் கருத்துகளுடன் ஒத்துள்ளன.

### மயேச்சுரர் யாப்பு

TCA

❖ மயேச்சுரர் என்பவரால் இயற்றப்பட்ட இந்நூலை மயேச்சுரர் யாப்பு எனப் பிற்காலத்தோர் குறிப்பர்.

❖ இவருடைய இலக்கண நூல் எடுத்துக்காட்டுகளுடன் இருந்ததுபோலும். இந்நூலாசிரியரை வீரசோழியம் என்னும் இலக்கண நூலின் உரையாசிரியர் மயேச்சுரனார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

❖ மேற்கண்ட நூல்கள் தவிர, சிறுகாக்கைப் பாடினியார், நக்கீரர், பல்காயனார், நற்றத்தனார், கையனார், வாய்ப்பியனார் என்னும் பெயர்களுடன் புலவர்கள் பலர் யாப்புத் துறை நூல்களை இயற்றியுள்ளனர். எனினும், இவர்கள் பற்றிய விரிவான தகவல்கள் நமக்குக் கிடைக்கவில்லை.

## 7.6.1.5. இலக்கண நூல்கள் பிறவற்றில் யாப்பு

❖ கிடைக்கும் இலக்கண நூல்களில் சில ஐந்து இலக்கணங்களையும் பேசுகின்றன. எழுத்து, சொல் முதலிய சில பிரிவுகளை மட்டும் பேசும் இலக்கணங்களும் உள்ளன.

❖ யாப்பு என்பது இலக்கண நூல்களில் இடம் பெற்றுள்ளது. அல்லது இது குறித்து மட்டுமே தனி இலக்கண நூல்கள் இயற்றப்பட்டுள்ளன.

## 7.6.1.6. ஐந்திலக்கண நூல்களில் யாப்பு

❖ கிடைக்கும் ஐந்திலக்கண நூல்களில் வீரசோழியம், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் முதலியன குறிப்பிடத்தக்கன.

❖ இவற்றுள் யாப்பு ஒரு பிரிவாகப் பேசப்பட்டிருப்பதால் இவற்றைப் பற்றிய அறிமுகம் பயில்வோர்க்குப் பயன்படும்.

### வீரசோழியம்

❖ கி.பி.11ஆம் நூற்றாண்டில் புத்தமித்திரனார் என்பவரால் இந்நூல் இயற்றப்பட்டது.

❖ இது, ஐந்து அதிகாரங்களைக் கொண்டது.

- ❖ இதுவே தமிழில் கிடைக்கும் ஐந்து இலக்கணம் பேசும் நூல்களில் காலத்தால் முந்தியது எனலாம்.
- ❖ இந்நூலின் நான்காவது அதிகாரம் யாப்பதிகாரம் ஆகும்.
- ❖ நூலில் 105 முதல் 140 வரையிலான பகுதியில் யாப்பியல் செய்திகள் பேசப் பெற்றுள்ளன.

**இலக்கண விளக்கம்**

- ❖ இந்நூல் திருவாரூர் வைத்தியநாத தேசிகரால் கி.பி.17ஆம் நூற்றாண்டில் செய்யப்பெற்றது.
- ❖ இஃது ஓர் ஐந்திலக்கண நூல். இதற்கு நூலாசிரியரே உரையும் எழுதியுள்ளார்.
- ❖ இந்நூலில், மூன்றாவது அதிகாரமாகப் பொருளதிகாரம் உள்ளது.
- ❖ இதன்கண் நான்காம் இயலாக யாப்பியல் அமைந்துள்ளது.
- ❖ இதைத் தொடர்ந்து பாட்டியல் என்னும் ஐந்தாவது இயலும் அமைந்துள்ளது.

**சுவாமி நாதம்**

- ❖ இந்நூலின் ஆசிரியர் சுவாமிநாத கவிராயர் என்பவராவார்.
- ❖ இவர் காலம் கி.பி.19ஆம் நூற்றாண்டு.
- ❖ இவர் நெல்லை மாவட்டம் கல்லிடைக்குறிச்சியில் பிறந்தவர்.
- ❖ இந்நூல் ஆறு அதிகாரங்களை உடையது. கிடைத்துள்ளவை 202 செய்யுள்கள்.
- ❖ அந்தாதித்தொடையில் இவற்றை ஆசிரியர் இயற்றியுள்ளார்.

**முத்துவீரியம்**

- ❖ முத்துவீர உபாத்தியாயர் என்பவரால் இந்நூல் இயற்றப்பட்டது.
- ❖ திருச்சி உறையூரைச் சார்ந்த இவர் கி.பி.19ஆம் நூற்றாண்டினர். நூலாசிரியர் பெயராலேயே இந்நூல் வழங்கப் பெறுகிறது.
- ❖ இது ஐந்து இலக்கணங்களையும் பேசுகிறது. பொருளதிகாரத்தில் இவர் புறப்பொருள் பற்றிப் பேசவில்லை. அகப்பொருளை மட்டுமே பேசியுள்ளார்.
- ❖ யாப்பு அதிகாரம் என்பது மூன்று இயல்களுடன் 267 நூற்பாக்களைக் கொண்டுள்ளது.

**தொன்னூல் விளக்கம்**

- ❖ வீரமாமுனிவர் இந்நூலின் ஆசிரியராவார்.
- ❖ இத்தாலி நாட்டைச் சார்ந்த இவர் சமயம் பரப்பத் தமிழகத்திற்கு வந்தார்.
- ❖ தமிழைக் கற்று, இம்மொழியில் பல நூல்களைச் செய்துள்ளார்.
- ❖ இவர் காலம் கி.பி. 18ஆம் நூற்றாண்டு.
- ❖ தொன்னூல் விளக்கம் செய்த இவர், தாமே இந்நூலுக்கு ஓர் உரையும் செய்துள்ளார். இந்நூல் நூற்பா யாப்பினால் ஆனது.

❖ இதன்கண் 201 முதல் 250 வரை உள்ள நூற்பாக்களில் யாப்புப் பற்றிப் பேசியுள்ளார்.

**முழுமையாகக் கிடைத்த தனி யாப்பு நூல்கள்**

❖ ஐந்திலக்கண மரபில் யாப்பு என்னும் ஒரு பிரிவு பற்றியே தனி நூல்கள் சில தோன்றியுள்ளன.

❖ கி.பி.10ஆம் நூற்றாண்டில் தோன்றிய அமிதசாகரர் என்பார் இரண்டு நூல்களை இவ்வகையில் இயற்றியுள்ளார். அவை,

TCA

1) யாப்பருங்கலம்

2) யாப்பருங்கலக் காரிகை

❖ இவ்விரண்டில் முந்தியது நூற்பா யாப்பால் 95 செய்யுள்களைக் கொண்டதாகும்.

❖ பிந்தியது கட்டளைக் கலித்துறை யாப்பால் 44 செய்யுள்களைக் கொண்டது. இவை இரண்டிற்கும் குணசாகரர் என்பார் உரையாசிரியராவார்.

❖ இவற்றுக்குப் பின், 19ஆம் நூற்றாண்டில் தனி யாப்பு நூல்கள் சில தோன்றின. இடைப்பட்ட காலத்தில் சிற்றிலக்கியங்கள் பல்கிப் பெருகின.

❖ 19ஆம் நூற்றாண்டில் யாப்பிலக்கணத்திற்கென விருத்தப்பாவியல் எனும் நூல் தி.வீரபத்திர முதலியார் என்பவரால் இயற்றப்பட்டது.

❖ 20ஆம் நூற்றாண்டில் யாப்பதிகாரம், தொடையதிகாரம் என இரு நூல்கள் தோன்றின. புலவர் குழந்தை என்பார் இந்நூல்களின் ஆசிரியராவார்.

❖ யாப்பு நூல் என்னும் நூலை, த.சரவணத்தமிழன் என்பார் செய்து அளித்தார்.

❖ யாப்பொளி என்று ஒரு நூல் சீனிவாசராகவாசாரி என்பவரால் இயற்றப்பட்டது.

### 7.6.1.7. யாப்பருங்கலக்காரிகை

❖ ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக, தமிழ் யாப்புப் பயில்வோரால் பெரிதும் போற்றப்படும் ஒரு நூல் யாப்பருங்கலக்காரிகை.

❖ தொல்காப்பியத்திற்குப் பின் தோன்றிய யாப்பியல் நூல்களுள் இதுவே சிறப்புப் பெற்றது. காரிகை என்றே இந்நூல் குறிக்கப்படுகிறது.

❖ இலக்கண நூல்களில் வீரசோழியம் என்ற நூலும் யாப்பருங்கலக் காரிகையும் நவநீதப் பாட்டியலும் வரையறுத்த பாட்டியலும் அவற்றோடு அளவை விளக்கமும் கட்டளைக் கலித்துறையில் அமைந்த நூல்கள். **(PG TRB 2012- 2013)**

### 7.6.1.8. ஆசிரியர்

❖ யாப்பு பற்றித் தமிழில் தோன்றிய யாப்பருங்கலக்காரிகை நூலின் ஆசிரியர் அமிதசாகரர் என்பவராவார்.

❖ இவர் பெயர் அமுதசாகரர், அமிர்த சாகரர் என்பனவாகவும் வழங்கப் பெற்றுள்ளது.

❖ இப்பெயர் கீழ்வரும் சொற்களால் உருவானது.

- அமித = அளவு கடந்த
- சாகரர் = கடல் என்னும் பெயரர்

❖ இதனை, ‘அளப்பரும் கடற்பெயர் அருந்தவத்தோனே’ என்னும் காரிகை நூலின் பாயிர அடியும் உறுதிப்படுத்தும். இவர் வரலாறு பற்றி ஏதும் சான்று கிடைக்கவில்லை.

❖ அருகக்கடவுளை இவர் வழிபட்டுள்ளார் என்பதை, பாயிர முதல் செய்யுளால் அறியலாம். இதனால் இவர் சமணர் என்று அறிகிறோம்.

❖ அமிதசாகரர் காலம் கி.பி. 10ஆம் நூற்றாண்டு.

❖ கி.பி. 11ஆம் நூற்றாண்டில் வீரசோழியம் எனும் நூலை இயற்றிய புத்தமித்திரனார் என்பவருக்குக் காலத்தால் முற்பட்டவர்.

❖ யாப்பியலில் புலமை பெற்ற குணசாகரர் என்பவர் இந்நூலுக்கு உரை எழுதியுள்ளார். இவர் வரலாறு பற்றியும் ஏதும் சான்றுகள் கிடைக்கவில்லை.

### 7.6.1.9. நூல் யாப்பும், அமைப்பும்

❖ யாப்பருங்கலக்காரிகை என்னும் நூல் கட்டளைக் கலித்துறை என்னும் யாப்பில் இயற்றப்பட்டுள்ளது.

❖ காரிகை என்னும் சொல்லுக்கே கட்டளைக் கலித்துறை என்று ஒரு பொருள் உள்ளது. இந்நூல் செய்யுள்கள் மகடூஉ முன்னிலையாக எழுதப்பட்டுள்ளன.

### 7.6.1.10. மகடூஉ முன்னிலை

❖ எதிரில் ஒரு பெண் இருப்பது போலவும், அவளை விளித்து அவளிடம் பேசுவது போலவும் எழுதும் முறைக்கு மகடூஉ முன்னிலை என்று பெயர்.

❖ மகடூஉ என்பதற்குப் பெண் என்று பொருள். முன்னிலை என்பதற்கு முன்னிலையாக்கிப் பேசுவது என்று பொருள்.

❖ காரிகை என்பது பெண் என்னும் பொருள்தரும் ஒரு சொல். எனவே, காரிகையை முன்னிலைப்படுத்திப் பேசுவதாக இந்நூல் செய்யுள்கள் அமைந்திருப்பதால் இந்நூலுக்குக் காரிகை என்றும் ஒரு பெயர் வழங்குகிறது. இந்நூல் செய்யுள்களையும் காரிகை என வழங்குவதுண்டு.

### 7.6.1.11. கட்டளைக் கலித்துறை

❖ இந்நூல் செய்யுள்கள் எல்லாம் கட்டளைக் கலித்துறை என்னும் யாப்பினால் ஆனவையே.

❖ கட்டளைக் கலி என்பதற்கு எழுத்தெண்ணிப் பாடப்படும் கலி யாப்பு என்று பொருள். துறை என்பது பா இனத்தின் ஒரு வகைக்குரிய பெயர்.

❖ எழுத்தெண்ணிப் பாடுகிறபொழுது ஒற்றெழுத்துகள் அனைத்தையும் விட்டுவிட்டு, உயிர் அல்லது உயிர்மெய் எழுத்துகளை மட்டும் எண்ணி எழுதுவது வழக்கம்.

❖ ஒரு (செய்யுள்) அடி நேரசையில் தொடங்கினால் ஒற்று நீக்கி 16 எழுத்துகள் இருக்குமாறும், நிரையசை கொண்டு தொடங்கினால் ஒற்று நீக்கி 17 எழுத்துகள் இருக்குமாறும் பாடுவர்.

❖ இதன்படி நான்கடிகள் உடைய ஒரு கலித்துறைச் செய்யுள் நேரசையில் தொடங்கினால் ஒரு செய்யுளில் மொத்தம் 64 எழுத்துகளும், நிரையசையில் தொடங்கினால் அச்செய்யுளில் மொத்தம் 68 எழுத்துகளும் இருக்கும்.

❖ யாப்பருங்கலக்காரிகையில் நேரசை கொண்டு தொடங்கும் செய்யுள்கள் இருபத்தியொன்றும், நிரையசை கொண்டு தொடங்கும் செய்யுள்கள் இருபத்து மூன்றும் உள்ளதாக அந்நூலின் உரை கூறுகிறது.

❖ ஆயினும், இன்று கிடைக்கும் அச்சு நூல்களில் அறுபது காரிகைகள் உள்ளன. மிகுதியாக உள்ள 16 செய்யுள்கள் உரையாசிரியரால் எழுதப்பட்ட உரைக்காரிகைகளாம்

### 7.6.1.12. காரிகை நூலின் அமைப்பு

- முதல் இயலாகிய உறுப்பியலில் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய செய்யுள் உறுப்புகள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. **(UGC – NET- jun 2012) (UGC – NET- JUN 2007)**

❖ இரண்டாம் இயலாகிய செய்யுளியலில் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய பாக்களுக்குரிய இலக்கணம் பேசப் பெற்றுள்ளது. இறுதியில் மருட்பா பற்றியும் கூறப்பட்டுள்ளது. நான்கு வகைப் பாக்களின் இனங்களும் கூறப்பட்டுள்ளன.

❖ ஒழிபியலில் முன் இரு இயல்களில் இடம்பெற்ற செய்திகளுக்கான ஒழிபுச் செய்திகள் தரப் பெற்றுள்ளன.




### 7.6.1.13. ஒழிபுச் செய்திகள்

❖ ஒழிபுச் செய்திகள் என்பன முன்னர்க் கூறப்பட்ட செய்திகளுக்கு வேறுபட்டு வருவனவும், அங்குக் கூறப்படாதனவும், அங்குக் கூறப்பட்டவற்றிற்கு மேலும் விளக்கம் தருவனவும் ஆன செய்திகள் எனலாம்.

### 7.6.1.14. எழுத்து

➢ எழுப்பப்படும் காரணம் பற்றியும், எழுதப்படும் காரணம் பற்றியும் வைத்த பெயர் ‘எழுத்து’ என்பதாகும். இதனை,

*எழுப்பப் படுதலின் எழுத்தே*

*எழுதப் படுதலின் எழுத்தா கும்மே*

எனவரும் அடிகள் அறிவிக்கின்றன.

TEACHER'S CARE ACADEMY
TCA
KANCHIPURAM
95665 35080

- எழுத்தின் வேறு பெயர்கள் இரேகை, வரி, பொறி என்பனவாம். எழுத்து என்பது இயற்பெயராய் நின்று எழுத்துகளைக் (ஒலி வடிவ, வரி வடிவ எழுத்துகள்) குறிக்கும்.
- சுருங்கச் சொன்னால், எழுத்து என்பது நாதத்தின் - ஓசையின் - காரியமாக இருப்பது; சொல்லுக்குக் காரணமாக இருப்பது எனலாம்.

**எழுத்து - வகை**

- தமிழில் உள்ள எழுத்துகளின் மொத்த எண்ணிக்கை முப்பத்து மூன்று என்பார் தொல்காப்பியர்.
- மூன்றுதலை யிட்ட முப்பதிற்று எழுத்து (தொல்.எழுத். புணரி. 1) என்பது அவருடைய வாக்கு.
- இம்முப்பத்து மூன்றெழுத்துகளை அவர் முதல் என்றும் சார்பு என்றும் இருவகையாக்குகின்றார்.
- இவரது கணக்குப்படி முதலெழுத்தின் எண்ணிக்கை முப்பதாகும்; சார்பெழுத்தின் எண்ணிக்கை மூன்று ஆகும்.
- வீரசோழியம் இயற்றிய புத்தமித்திரரும், நேமிநாதம் இயற்றிய குணவீரரும் முதலெழுத்து முப்பத்தொன்று என்கின்றனர்.
- இவர்கள் ஆய்த எழுத்து ஒன்றனையும் சேர்த்துக்கொண்டனர்.
- இவர்களுக்குப்பின் வந்தவர் நன்னூல் ஆசிரியர் பவணந்தியார். இவர், தொல்காப்பியரொடு ஒத்து முப்பதே கொண்டார்.
- சார்பெழுத்துகளைக் கொள்வதிலும் இலக்கண ஆசிரியர்கள் தம்முள் வேறுபடுகின்றனர். தொல்காப்பியர் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்னும் மூன்றனையே சார்பெழுத்துகளாகக் கொண்டார்.
- ஆய்தம் என்பதைத் தனி ஒலியெண்ணாகத் தொல்காப்பியர் கருதுகிறார். **(PG TRB 2002-2003)**
- முதலெழுத்து முப்பது என்பது உயிரும் மெய்யுமாக வகைப்படும்.
- உயிர், மெய் ஆகியவை சேரும்போது பிறப்பது உயிர்மெய் எனப்படும்.
- மொழியிலக்கணத்தார் புணர்ச்சியைப் பற்றிச் சொல்லவரும்போது எழுத்துகளை உயிர்க்கணம், வன்கணம், மென்கணம், இடைக்கணம் என நான்கு கணங்களாகப் பகுத்துக் கொள்வர்.
- மொத்தத்தில், தமிழில் உள்ள எழுத்துகள் எல்லாமும் உயிர், மெய், ஆய்தம், உயிர்மெய் என்னும் நான்கு வகைக்குள் அடங்குவனவேயாம்.

### எழுத்து - ஆய்தம்

- தொல்காப்பியர் ஆய்த எழுத்தைச் சார்பெழுத்துகள் மூன்றனுள் ஒன்றாகக் கொண்டார்.
- ஆய்த எழுத்து, ஒரு சமயம் 'மெய்'; ஒரு சமயம் உயிர். எனவே, இதனைத் 'தனிநிலை' என்ற பெயராலும் சுட்டினர்.
- 'தனிநிலை' என்ற பெயர் பெற்றமைக்கு வேறு ஒரு காரணமும் சொல்வதுண்டு. அதனையும் காண்போம்.
- க் - மெய்யெழுத்து; இது, தன்மேல் உயிர் ஏற இடங்கொடுக்கும். உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்பது விதி. இதன்படி, க்+அ-க;
- ஃ - இதனை மெய்யென்று கொள்வோம். இது, உயிர் ஏற இடங்கொடுக்குமா? ஃ+அ- மெய்யாயின் உயிரேற இடங்கொடுத்து உயிர்மெய் எழுத்தை உண்டாக்க வேண்டுமல்லவா? எனவே, ஆய்தம், 'மெய்' அன்று;
- ஃ - உயிராயின் மெய்யெழுத்துகளை ஊர்ந்து வரல் வேண்டும், க்+ஃ (உயிர்) - ?; எனவே உயிரும் அன்று. ஆதலினால் தான், நம் இலக்கணப் புலவர்கள் நெடுங்கணக்கில் பன்னிரண்டு உயிர்க்கும் பதினெட்டு மெய்க்கும் இடையில் வைத்தனர் போலும்.
- ஆய்தத்தின் வேறு பெயர்கள், அஃகேனம், புள்ளி, தனிநிலை, அலி எழுத்து என்பனவாம்.

### 7.6.1.15. அசைக்கு உறுப்பாகும் எழுத்துகள்

- தமிழ் எழுத்துகள் எல்லாமும் உயிர் - மெய் - ஆய்தம்- உயிர்மெய் என்னும் நான்கு வகைக்குள் அடங்கும்.
- யாப்பு இலக்கணப்படி ஓசையூட்டி அசை காண்பதற்குக் குறில், நெடில், ஒற்று (மெய்) என்ற பகுப்புத் தேவைப்படுகின்றது.
- காசு, பிறப்பு என்ற வாய்பாட்டில் வரும் வெண்பாவின் இறுதிச்சீர், குற்றியலுகர எழுத்தைக் கொண்டிருக்க வேண்டும்.
- குற்றியலிகரம் குற்றியலுகரம் முதலியன இவ்விடத்து அலகு பெறும்; இவ்விடத்து அலகு பெறா; என்று எடுத்தோதுவதற்குச் 'சிறிய இ உ அளபு' (ஒழிபு - 1) (அதாவது, குற்றியலுகரம், குற்றியலிகரம்) என்னும் பகுப்புத் தேவை.
- இவ்வாறே, வல்லினம், மெல்லினம், இடையினம் என்ற மூன்றனோடும் தூங்கிசை முதலிய ஐந்தும் உறழ்ந்து பல வண்ணங்கள் உருவாகும் என்று சொல்லும்போது, மெய் என்று கூறுவது மட்டும் போதாது.
- இவையும் இவைபோன்ற காரணங்கள் பிறவும் மனத்தில் கொண்டு, 'அசை' என்னும் செய்யுள் உறுப்புக்குரிய எழுத்துகளை யாப்பிலக்கண நூலார் பதினாறு வகை, பதினைந்து வகை, பதின்மூன்று வகையென வேண்டியவாறு கொண்டுள்ளனர்.
- தொல்காப்பியர் பதினைந்து வகைகளைக் கொண்டார்.
- இலக்கண விளக்கம் வைத்தியநாத தேசிகர் பதினாறு வகைகளைக் கொண்டார்.

❖ அமிதசாகரர் தாமியற்றிய 'யாப்பருங்கலம்' என்ற நூலில் பதினைந்து வகைகளைக் கொண்டார்.

❖ இவரே, தமது 'யாப்பருங்கலக் காரிகையில் பதின்மூன்று வகையெனக் கொண்டுள்ளார். அவை,

- குறில்
- நெடில்
- உயிர்
- குற்றியலுகரம்
- குற்றியலிகரம்
- ஐகாரக்குறுக்கம்
- ஆய்தம்
- மெய்
- வல்லினமெய்
- மெல்லினமெய்
- இடையினமெய்
- உயிர்மெய்
- அளபெடை

என்பனவாம்.

➢ தமக்குரிய இயல்பான மாத்திரையில் ஒலிப்பன (இயல்பு வகை)

➢ மெய்யும் உயிருமாகிய கூட்டில் ஒலிப்பது (கூட்டவகை)

➢ தமக்குரிய மாத்திரையில் குறைந்து ஒலிப்பன (குறுக்கம்)

➢ தமக்குரிய மாத்திரையின் நீண்டொலிப்பன (அளபெடை)

TEACHER'S CARE ACADEMY KANCHIPURAM 95665 35080

### 7.6.1.16. மாத்திரை

➢ மாத்திரை என்பது ஓர் எழுத்தை எவ்வளவு நேரம் ஒலிக்கிறோம் என்று கூறுவதாகும். ஒவ்வோர் எழுத்தையும் குறிப்பிட்ட நேரம் மட்டுமே ஒலிக்க வேண்டும் என்று வரையறை செய்து வைக்கப்பட்டுள்ளது.

➢ மாத்திரை என்பது கால அளவைக் குறிப்பதாகும். மாத்திரை இரண்டு விதமான அளவுகளில் விளக்கப்படுகிறது.

கண் இமை நொடி என அவ்வே மாத்திரை

நுண்ணிதி னுணர்ந்தோர் கண்ட வாறே. (தொல் . 07) **(PG TRB 2004- 2005)**

இயல்பு எழும் மாந்தர் இமை, நொடி, மாத்திரை (நன்னூல் 100)

**தமக்குரிய இயல்பான மாத்திரையில் ஒலிப்பன**

- செய்யுள் அடியில் தமக்குரிய மாத்திரையில் ஒலிக்கப் பெறும் எழுத்துகள் ஏழு ஆகும்.

1. குறில்
2. நெடில்
3. உயிர்
4. மெய்
5. வல்லினம்
6. மெல்லினம்
7. இடையினம்

**குறில்**

❖ இங்குக் 'குறில்' என்றது உயிர்க்குறிலை ஆகும்.

❖ அவையாவன: அ, இ, உ, எ, ஒ, என்னும் ஐந்தாம்.

❖ இவற்றுக்குத் தனித்தனி மாத்திரை ஒன்று ஆகும். இப்பாடத்தின் இறுதியில் எந்த எந்த எழுத்திற்கு எவ்வளவு எவ்வளவு மாத்திரை என்று படிக்க இருக்கின்றோம்.

TEACHER'S CARE PUBLICATION
38/23, Vaigundaperumal Koil Street,Kancheepuram- 631502
Mobile : 95665 35080, 9786269980 Land Line : 044-2723 5080

# 2025-2026

# PG TRB

## G.O No. 219 New Syllabus

# தமிழ்



## அலகு-8
## திறனாய்வு

*Your Success is Our Goal...*

- திறனாய்வு:
- விளக்கம், வரையறை, பயன்கள், புதிய போக்குகள்.
- வகைகள்:
- பகுப்பு முறை,விளக்க முறை, மதிப்பீட்டு முறை,
- ஒப்பீட்டு முறை. பாராட்டு முறை.
- அணுகுமுறைகள்:
- அறவியல், சமூகவியல், வரலாற்றியல்,
- உளவியல், மானிடவியல், தலித்தியம்,
- பெண்ணியம், அமைப்பியல்.

tcaexamguide
Teacher's Care Academy
www.tcaexamguide.com
tcaexamguide@gmail.com

# தமிழ்

## திறனாய்வு

# PG TRB (2025-2026)

## அலகு - 8

## FIRST EDITION

**TEACHER'S CARE PUBLICATION**

**38/23, Vaigundaperumal Koil Street,Kancheepuram- 631502**

**Mobile : 95665 35080, 9786269980 Land Line : 044-2723 5080**

**Branch Office : 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy (76399 67359)**

**Branch Office: Advaitha Ashram Road, New Bus Stand, Salem (93602 68118)**

| உள்ளடக்கம் | ப.எ. |
|---|---|
| **8.1. திறனாய்வு – விளக்கம்** | **1** |
| 8.1.1. திறனாய்வாளனும் வாசகனும் | 4 |
| 8.1.2. திறனாய்வாளனும் படைப்பாளியும் | 5 |
| 8.1.3. இலக்கியமும் வாழ்க்கையும் | 6 |
| 8.1.4. திறனாய்வாளனும் வாழ்க்கையும் | 6 |
| 8.1.5. படைப்பாளியும் வாழ்க்கையும் | 7 |
| 8.1.6. இலக்கியத்தின் பாடுபொருளும் வாழ்க்கையும் | 7 |
| 8.1.7. இலக்கியமும் வாழ்க்கையின் பரிமாணங்களும் | 8 |
| 8.1.8. விளக்கமும் விமரிசனமும் | 8 |
| 8.1.9. இலக்கிய வகைகளும் வேறுபாடுகளும் | 10 |
| 8.1.10. கலை கலைக்காகவே என்ற வாதம் | 14 |
| 1. மாதிரி வினாக்கள் | 18 |
| **8.2 கலைகள்** | **19** |
| 8.2.1. இலக்கியமும் ஓவியமும் | 19 |
| 8.2.2. திறனாய்வும் அறிவியலும் | 20 |
| 8.2.3. திறனாய்வும் சமூகவியலும் | 22 |
| 8.2.4. திறனாய்வும் வரலாற்றியலும் | 23 |
| 8.2.5. திறனாய்வும் தத்துவ நெறியும் | 24 |
| 8.2.6. தொன்மங்களும் தத்துவமும் | 25 |
| 8.2.7. திறனாய்வாளனின் இயல்புகள் | 28 |
| 2. மாதிரி வினாக்கள் | 34 |
| **8.3. திறனாய்வு வகைகைள்** | **35** |
| 8.3.1. விளக்கமுறை திறனாய்வு (Interpretation Critisism) | 36 |
| 8.3.2. ஒப்பிட்டுத் திறனாய்வு முறை (Comparitive Criticism) | 37 |
| 8.3.3. ஒப்பீட்டுத் திறனாய்வின் கருதுகோள் | 38 |
| 8.3.4. மதிப்பீட்டுமுறைத் திறனாய்வு | 40 |
| 8.3.5. ரசனை முறை அல்லது அழகியல் திறனாய்வு | 41 |
| 8.3.6. பாராட்டுமுறைத் திறனாய்வு (Appreciative zCriticism): | 43 |
| 8.3.7. முடிபுமுறைத் திறனாய்வு (Judical Criticism) | 44 |

| | |
|---|---|
| 8.3.8. விதிமுறைத் திறனாய்வு (Prescriptive Criticism) | 44 |
| 8.3.9. செலுத்துநிலை அல்லது படைப்புவழித் திறனாய்வு (Inductive Criticism) | 45 |
| 8.3.10. பகுப்புமுறைத் திறனாய்வு (Analytical Criticism) | 46 |
| 8.3.11. தமிழில் திறனாய்வு இலக்கியத்தின் நிலை | 47 |
| 3. மாதிரி வினாக்கள் | 50 |
| **8.4. இலக்கியம் பொருள் விளக்கம்** | **52** |
| 8.4.1. இலக்கிய வகைப்பாடு | 53 |
| 8.4.2. இலக்கிய பண்பும் பயனும் | 55 |
| 8.4.3. இலக்கிய வகைகள் | 56 |
| 8.4.3.1. வாய்மொழி இலக்கியம் | 56 |
| 8.4.4. கதை இலக்கியம் | 64 |
| 8.4.5. உரைநடை | 68 |
| 8.4.6. சிறுகதை இலக்கியம் | 72 |
| 8.4.7. புதின இலக்கியம் | 75 |
| 8.4.8. நாடக இலக்கியம் | 81 |
| 8.4.9. கட்டுரை இலக்கியம் | 85 |
| 8.4.10. இலக்கிய உறுப்புகள் | 88 |
| 8.4.11 உணர்ச்சி | 89 |
| 4. மாதிரி வினாக்கள் | 96 |
| **8.5. கற்பனை** | **97** |
| 8.5.1. மனப்படைப்பு | 99 |
| 8.5.2. கற்பனை வகைகள் | 100 |
| 8.5.3. வடிவம் | 104 |
| 8.5.4. இலக்கியப் பொருள் | 106 |
| 8.5.5. நடப்பியல் | 108 |
| 8.5.6. இலக்கிய உத்தி | 109 |
| 8.5.7. உத்தி | 116 |
| 5. மாதிரி வினாக்கள் | 119 |
| **8.6. திறனாய்வு அணுகுமுறைகள்** | **120** |
| 8.6.1. இலக்கியமும் சமூகவியலும் | 121 |

| | |
|---|---|
| 8.6.2 இலக்கியமும் உளவியலும் | 123 |
| 8.6.3. இலக்கியமும் சமயவியலும் | 127 |
| 8.6.4. அறிவியல் அணுகுமுறை | 131 |
| 8.6.5. சமுதாயவியல் அணுகுமுறை | 132 |
| 8.6.6. வரலாற்றில் அணுகுமுறை | 134 |
| 8.6.7. உளவியல் அணுகுமுறை | 136 |
| 8.6.8. அறநெறி அணுகுமுறை | 140 |
| 8.6.9. தொல் படிமவியல் அணுகுமுறை | 141 |
| 8.6.10. உருவவியல் திறனாய்வு அணுகுமுறை | 142 |
| 8.6.11. மொழியியல் அணுகுமுறை | 143 |
| 8.6.12 அமைப்பியல் அணுகுமுறை | 144 |
| 8.6.13. பின்னை அமைப்பியல் அணுகுமுறை | 146 |
| 8.6.14. மார்க்சிய அணுகுமுறை | 147 |
| **8.7. திறனாய்வு அணுகுமுறைகளும் இலக்கிய வகைகளும்** | **149** |
| 8.7.1. அறிவியல் வழி அணுகுமுறையும் இலக்கியமும் | 149 |
| 8.7.2. வரலாற்று அணுகுமுறையும் இலக்கியமும்: | 153 |
| 8.7.3. உளவியல் அணுகுமுறையும் இலக்கியமும் | 156 |
| 8.7.4. உருவவியல் அணுகுமுறையும் இலக்கியமும் | 159 |
| 8.7.5. அமைப்பியல் அணுகுமுறையும் இலக்கியமும் | 161 |
| 8.7.6. பின்னை அமைப்பியல் அணுகுமுறையும் இலக்கியமும் | 165 |
| 8.7.7. அறநெறி அல்லது நீதிக் கோட்பாடு அணுகுமுறை | 168 |
| 8.7.8. மார்க்சிய திறனாய்வு அணுகுமுறையும் இலக்கியமும் | 171 |
| 8.7.9. தொல்படிமவியல் அணுகுமுறை | 175 |
| 8.7.10. பெண்ணியத் திறானாய்வு அணுகுமுறை | 178 |
| 8.7.11. தலித்திய திறனாய்வு அணுகுமுறை | 184 |
| 8.7.12. புலம்பெயர்வுத் திறனாய்வு | 192 |
| 8.7.13. மரபும் நவீனத்துவமும் | 204 |
| 6. மாதிரி வினாக்கள் | 208 |
| **8.8. முக்கிய வினாக்களின் பெட்டகம்** | **209** |

## பாடத்திட்டம் (Syllabus)

**திறனாய்வு**

- திறனாய்வு – விளக்கம், வரையறை, பயன்கள், புதிய போக்குகள்.

**வகைகள்:**

- பகுப்பு முறை, விளக்க முறை, மதிப்பீட்டு முறை, ஒப்பீட்டு முறை, பாராட்டு முறை.

**அணுகுமுறைகள்:**

- அறவியல், சமூகவியல், வரலாற்றில், உளவியல், மானிடவியல், தலத்தியம், பெண்ணியம், அமைப்பியல்.

## பார்வை நூல்கள்

1) **இலக்கியத் திறனாய்வியல்,** தா.ஏ.ஞானமூர்த்தி.
2) **இலக்கியத்திறன்** மு.வரதராசன்.
3) **இலக்கியக் கலை,** அ.ச.ஞானசம்பந்தன்.
4) **இலக்கிய விமர்சனம்,** தொ.மு.ரகுநாதன்.
5) **விமரிசனக்கலை,** க.நா.சுப்ரமண்யம்.
6) **திறனாய்வுக் கலை,** தி.சு.நடராசன்.


**TEACHER'S CARE PUBLICATION**

HEAD OFFICE : 21/46, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1.
CONTACT : 95665 35080, 97862 69980

**BRANCH OFFICES**

Branch Office 1 : 14, 1st Floor, 63 KPRS Tower, Thennur High Road, Trichy-620017.

Branch Office 2 : 266-C, Advaitha Ashram Road, (Opp. To New Bus Stand), Salem-636004

Branch Office 3 : 23, North Veliveethi, Pooja Complex, Simmakkal, Madurai- 625001

TRICHY : 76399 67359, SALEM : 9360268118, MADURAI : 96555 37380

Website : www.tcaexamguide.com Mobile App : tcaexamguide

**TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM**

**TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER**

**HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080**

**B.Off 2: B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018.**

**B.Off 3:266-C, Advaitha Ashram Road,(Opp to New Bus Stand), Salem-636 004.**

**Trichy: 76399 67359 Salem: 93602 68118**

# PG -TRB TAMIL

## அலகு – 8

## திறனாய்வு

### 8.1. திறனாய்வு – விளக்கம்

- இலக்கியம் என்பது ஒரு கலை வடிவம், படைப்பு அல்லது ஆக்கம் என்ற பண்பை உடையது.
- திறனாய்வு அத்தகைய கலை வடிவத்தின் மீதான ஒரு அறிவியல் விசாரணை ஆகும்.
- இலக்கியம், ஆக்கப் படுகிறபோதே திறனாய்வும் தோன்றிவிடுகிறது. இதனை எப்படி எழுத வேண்டும்? பிறர் எப்படி எழுதியிருக்கிறார்கள்? நாம் ஏன் இதனை, இப்படி எழுதியிருக்கிறோம்? என்று இலக்கியத்தை ஆக்குகிற படைப்பாளி நினைக்கின்ற போதே திறனாய்வுக்குரிய மனப்பான்மையும் தோன்றிவிடுகிறது.
- இலக்கியத்தின் பல்வேறு பகுதிகளையும் பண்புகளையும் பற்றித் தெரியாமல், இலக்கியம் எழுதுபவன் இல்லை; அதுபோல அவற்றைத் தெரிந்து கொள்ளாமல் திறனாய்வு செய்பவனும் இல்லை.
- எனவே, இலக்கியமும் திறனாய்வும் ஒன்றையொன்று சார்ந்தும் இணைந்தும் இருக்கின்றன.
- இலக்கியத் திறனாய்வு என்ற சொல் இலக்கியத்தின் திறனை ஆராய்வது என்று விரிவு படுகிறது.
- இலக்கியத்திற்குத் 'திறன்' இருக்கிறது. அதனைக் கண்டறிய வேண்டும் என்று சொல்லுகிறது. இலக்கியத்தின் திறன் என்பது, அதன் வடிவழகில், மொழி வளத்தில், உத்திகளின் உயர்வில், சொல்லுகிற செய்திகளின் மேன்மையில், அதன் நோக்கத்தில் இருக்கிறது என்று பொருள். அதனைக் கண்டறிந்து சொல்வது, இலக்கியத் திறனாய்வு என்பதற்குப் பொருள் ஆகும். இலக்கியத்தின் திறனை மேலோட்டமாகச்

சொல்லக்கூடாது. ஆழமாகப் பார்த்திட ('ஆய்வு') வேண்டும் என்றும் இச்சொல் நமக்கு உணர்த்துகிறது.

- திறனாய்வுக்கு இணையான ஆங்கிலச் சொல், 'criticism'. இதனை ஒரு கலைச் சொல்லாக முதலில் பயன் படுத்தியவர்18 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த **ஜான் டிரைடன்** (John Dryden) (18 ஆம் நூற்றாண்டு) எனும் ஆங்கிலக் கவிஞர் ஆவார்.
- அதற்கு முன்னால் 605-இல் Critic என்ற சொல்லைப் பயன்படுத்தியவர், சிந்தனையாளர் **பிரான்சிஸ் பேக்கன்** (Francis Bacon) ஆவார்.
- தமிழில் criticism என்ற சொல்லுக்கு இணையாக விமர்சனம் என்ற சொல்லை முதலில் பயன்படுத்தியவர், (1944) பேராசிரியர் **ஆ.முத்து சிவன்** ஆவார். 'விமரிசை' என்ற வடமொழி வழக்கிலிருந்து வந்த இச்சொல்லுக்குப், பாராட்டிச் சொல்லுதல், விளக்கமாகவும் விரிவாகவும் சொல்லுதல் என்று பொருள்.
- தமிழில், இச்சொல்லுக்கு இணையாகத் 'திறனாய்வு' என்ற சொல்லை வழக்கத்தில் விட்டவர், பேராசிரியர் **அ.ச.ஞானசம்பந்தன்** ஆவார் (1953).
- இன்று, கல்வியியலாளர்கள் இடையில் திறனாய்வு என்ற சொல் பெருவழக்காகவும், எழுத்தாளர்கள், பத்திரிக்கையாளர்கள் இடையில் விமர்சனம் என்ற சொல் பெருவழக்காகவும் பயன்பட்டு வருகிறது.
- திறனாய்வு (Skills Analysis) என்பது தனிப்பட்ட நபர் அல்லது குழுவின் திறன்கள் மற்றும் திறமைகளை ஆராயும் ஒரு செயல்முறை ஆகும். இதில் முக்கிய அம்சங்கள் பலவாக இருக்கின்றன. அவை:

TCA

## 1. திறன்கள் மற்றும் திறமைகள்

- அறிவு: ஒரு நபர் தமது துறையில் அல்லது பொது அறிவில் உள்ள திறன்.
- தொழில்நுட்ப திறன்கள்: கணினி அறிவு, மென்பொருள் பயன்பாடு, மின்னணு சாதனங்கள் அல்லது தொழில்முறை திறன்கள்.
- தொடர்பாடல் திறன்கள்: பேசுதல், எழுதல், விளக்கம் மற்றும் கேள்வி எடுப்பது போன்ற திறன்கள்.
- நிறுவன திறன்கள்: பணியிடத்தில் குழு வேலை, நேரம் மேலாண்மை, திட்ட மேலாண்மை மற்றும் ஆவணங்கள்.

## 2. பழக்கங்களின் மதிப்பீடு:

- ஒரு நபர் அல்லது குழுவின் செயல்திறன் மற்றும் நடவடிக்கைகளை கண்காணித்து, தேவையான திறன்கள் மற்றும் பணிகள் மதிப்பிடப்படுகின்றன.
- எவ்வாறு ஒருவரின் திறன்கள் பல செயல்களில் விளங்குகின்றன என்பதையும், அவை எவ்வாறு மேம்படுத்தப்பட வேண்டும் என்பதை மதிப்பிடுவது.

### 3. படிப்படியான திறன்கள் (Competencies):

- பணியிடத்தில் அல்லது வாழ்க்கையில் தேவையான திறன்களை அடையாளம் காண்பது.
- இந்த திறன்கள் ஒரு நபரின் சிறந்த செயல்பாட்டை அளிக்க உதவுகின்றன.

### 4. சார்ந்த திறன்கள் மற்றும் பயன்பாடுகள்:

- வேறு வேறு துறைகளில் பயன்படும் திறன்களை ஆராய்ந்து, அவற்றின் தொடர்பை பகுப்பாய்வு செய்வது.
- உதாரணமாக, ஒரு நபரின் பிரச்சினைகளை தீர்க்கும் திறன், தொழில்நுட்பப் பணிகளில் அச்சுறுத்தல் இல்லாமல் செயல்படுதல்.

### 5. நோக்குகளின் அடையாளம்:

- தனிப்பட்ட அல்லது குழுவின் திறன்கள் எங்கு அதிகமாக தேவைப்படுகின்றன என்பதைக் கண்டறிதல்.
- குறிப்பிட்ட திறன்கள் வளர்ப்பதற்கான வழிமுறைகளை உருவாக்குதல்.

TEACHER'S CARE ACADEMY
KANCHIPURAM
95665 35080

### 6. சந்தா மற்றும் தேவைகள்:

- நிறுவனங்கள் அல்லது வேலை வாய்ப்புகள், குறிப்பிட்ட திறன்களை தேவைப்படுத்தும் போது, அவற்றைப் பூர்த்தி செய்யும் திறன்.
- கல்வி அல்லது தொழில்நுட்ப தேவைகளையும் திறனாய்வு மூலம் அறிந்துகொள்வது.

### 7. பல்வேறு திறன்கள் மற்றும் திட்டமிடல்:

- கையேடு திறன்கள், குறைந்த திறன்கள், மற்றும் அவர்களின் மேம்பாட்டிற்கு தேவையான திட்டங்களை வகுக்குவது.
- குழு அல்லது தனி நபரின் வேலைப் பணிகள் மற்றும் வளர்ச்சி திட்டங்களை நிலைத்திருக்க உதவுகிறது.
- திறனாய்வு என்பது ஒருவரின் திறன்களை முறையாகப் புரிந்துகொண்டு, அதனுடன் தொடர்புடைய சவால்களை எதிர்கொள்ள மற்றும் வளர்ச்சி வழிகாட்டுதலுக்கு உதவுகிறது.
- இலக்கியத்தின் மீது அல்லது இலக்கியம் பற்றி எழுவது திறனாய்வு.
- அந்த இலக்கியத்தை, இலக்கியத்தின் பல்வேறு பண்புகளைத் திறனாய்வு விளக்குகிறது. விளக்குகின்ற அதே நேரத்தில் அந்த இலக்கியத்தைப் பற்றி மதிப்பீடு செய்கிறது.
- என்ன இருக்கிறது, எப்படி இருக்கிறது என்று சொல்லுவதோடு, அதனுடைய திறன், அந்த இலக்கியத்தில் மொத்தமாக எவ்வாறு வெளிப்படுகிறது என்றும் சொல்லுகிறது. அதன் மூலமாக அந்த இலக்கியத்தை மதிப்பீடு செய்கிறது.
- இலக்கியம் வாழ்க்கையைப் பேசுகிறது என்றால், அத்தகைய வாழ்க்கையை இலக்கியம் எவ்வாறு பேசுகிறது என்று திறனாய்வு சொல்லுகிறது.

- இலக்கியத் திறனாய்வு பற்றிய அடிப்படையான வரையறை என்ன? இலக்கியத்தின் உற்ற தோழனாக இருந்து அதனை உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்த வேண்டும் என்று டி.எஸ். எலியட், ரெனே வெல்லக் முதலிய மேலைநாட்டுத் திறனாய்வாளர்கள் வற்புறுத்துகிறார்கள்.
- குறிப்பிட்ட இலக்கியத்திற்கும் சரி, பொதுவானதொரு இலக்கியச்சூழலுக்கும் சரி, திறனாய்வு உண்மையாக நடந்து கொள்ள வேண்டும்; அதனை மேலும் வளர்ப்பதாக அமைய வேண்டும்.
- இலக்கியத்தை மேலும் படிப்பதற்கும் விளங்கிக் கொள்வதற்கும் திறனாய்வு ஒரு “கிரியா ஊக்கியாக” (catalyst) இருக்க வேண்டும். இதுவே திறனாய்வின் அடிப்படை நோக்கமாகும்.

95665 35080

- திறனாய்வுக்கு, இலக்கியம்தான் ‘களம்’ ஆகலின், அந்த இலக்கியம் பற்றி நீங்கள் என்ன - எப்படிப் - புரிந்து கொள்கிறீர்களோ, அதனடிப்படையில்தான் உங்கள் திறனாய்வும் அமைகிறது.
- குறிப்பிட்ட இலக்கியத்தின் குறிப்பிட்ட விளக்கம், அந்த இலக்கியம் மீதான திறனாய்வுக்கு அடிப்படையான கருதுகோளாக அல்லது நோக்கமாக அமைகிறது. உதாரணமாக ‘இலக்கியம், காலத்தின் குரல்’ என்ற விளக்கத்தை முன்வைப்போமானால், பாரதியாரைப் பற்றிய திறனாய்வில், பாரதியாரின் காலத்தைப் பற்றி நாம் பேசவேண்டிவரும்.
- பாரதியாரின் காலத்துக்குச் சற்று முன்னால் இருந்த இலக்கியத்தின் தன்மைகளையும் சமூகச் சூழ்நிலைகளையும் சொல்லிவிட்டுப் பாரதியாரின் சமகாலத்திலிருந்த அரசியல் விடுதலை இயக்கம், அன்றைய சமூகத்தின் பொதுவான நிலைப்பாடுகள் முதலியவற்றைப் பேச வேண்டும்.
- அவற்றின் பின்னணியில், பாரதியார் அந்தக் காலத்தை எவ்வாறு வெளிப்படுத்துகின்றார் என்று எழுத வேண்டும்.
- எனவே இலக்கியத்தைப் பற்றிய குறிப்பிட்ட மதிப்பீடு, அதனுடைய திறனாய்வுக்கு வாயிலாக அமைகின்றது.

## 8.1.1. திறனாய்வாளனும் வாசகனும்

- திறனாய்வாளன், முதலில் ஒரு வாசகன். வாசகன், குறிப்பிட்ட ஒரு இலக்கியத்தைப் - பனுவலை - வாசிக்கிறான். தன்னளவில், அந்தப் பனுவலைப் புரிந்து கொள்கிறான்; ரசிக்கிறான்; அனுபவிக்கவும், அந்தப் பனுவலோடு பழகிக் கொள்ளவும் செய்கிறான். ஒரு ஈடுபாடும், தொடர்ந்து வாசிக்க வேண்டும் என்ற மனநிலையும் கொண்டவனாக ஆகிறான். இது, முதல்நிலை.
- பயிற்சி பெற்ற வாசகன், அடுத்த நிலையில் உள்ளவன் தேர்ந்தெடுத்துப் படிக்கிற பயிற்சியும் தேடிப்போகிற மனநிலையும் இருக்கிறது. அதற்குரிய சரியான அளவுகோல்

அவனுக்குத் தெரியாது; ஆனால், தொடர்ந்து படிக்கும் பயிற்சி இருப்பதால், ஒரு மேலோட்டமான அளவுகோல் இருக்கிறது.

❖ நல்லது - வல்லது என்ற அபிப்பிராயங்கள் - கருத்தோட்டங்கள் - அவனுக்கு ஏற்படுகின்றன. இது இரண்டாம் நிலை.

❖ அடுத்து, அதற்கும் மேல் நிலையில் உள்ள வாசகன், தான் வாசித்தவற்றைப் பற்றித் தருக்க நீதியான ஏன், என்ன, எப்படி என்ற கேள்விகளுக்கு வரத் தெரிந்தவன். மதிப்பிடுவது, விளக்குவது, ஒப்பிடுவது முதலிய மனநிலைகள் வாய்க்கப் பெற்றவன். குறிப்பிட்ட படைப்பின் தரம், குறிப்பிட்ட படைப்பாளியின் நிலை முதலியவற்றை அனுமானிக்கத் தெரிந்த இவனைக் குறிக்கோள் வாசகன் என்று சொல்ல முடியும். மூன்றாவது நிலை இது.

❖ வாசிப்பு அனுபவமும், அதனைத் திரும்பத் திரும்ப உள்வாங்கிக் கொண்டு அதுபற்றிய கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளும் மனநிலையும், அதனை வெளிப்படுத்துகிற ஆற்றலும் உடையவன், திறனாய்வாளன்.

❖ வாசகன், குறிப்பிட்ட சில அளவுகோளாடு நின்றுவிடுகிறபோது, பிற நூல்கள் பற்றிய அறிவையும், இலக்கியம் மற்றும் அதுசார்ந்த பொதுவான கோட்பாடுகளைப் பற்றிய அறிவையும் கொண்டு, தன்னுடைய வாசிப்பு அனுபவங்களை ஒரு முறைமைக்கும் ஒரு தேவைக்கும் ஏற்ப வெளிப்படுத்துகிறவன், திறனாய்வாளன்.

❖ ஈடுபாடு, வாசிப்பு, தொடர்ந்த வாசிப்பு - நின்றுவிடுமானால் மற்றும் கருத்துருக்களும் வெளிப்படுத்தியுரைக்கின்ற திறனும் இல்லாமல் போய் விடுமானால் - திறனாய்வாளன் முடிந்துவிடுகிறான்.

❖ தொடர்ந்த ஈடுபாட்டோடு, வாசிப்பு ஒரு பயிற்சியாகவும் அனுபவமாகவும் அமைகிறபோது, அதுபற்றிய விளக்கம், கருத்துருக்களோடு வெளிப்படுகிற நிலையேற்படுமானால், வாசகன், திறனாய்வாளனாக உருவாகிவிடுகிறான்.

## 8.1.2. திறனாய்வாளனும் படைப்பாளியும்

❖ படைப்புமனம் என்பது, ஒரு நிகழ்ச்சியை அல்லது ஒரு பொருளை அல்லது ஓர் எண்ணத்தை உளங்கொண்டு உணர்ந்து, உந்துணர்வோடு, அதுபோன்ற ஒன்றாகவோ அதிலிருந்து விலகிச் செல்லும் இன்னொன்றாகவோ, புதியது போன்ற தோற்றமுடையதாகவோ வெளிப்படுத்த ஏதுவாக இருக்கிற ஒரு மனநிலையாகும். இது, ஒரு படைப்பாளிக்கு இருக்கிற மிகமுக்கியமான ஒருதேவை.

❖ அதுபோல், திறனாய்வாளனுக்கும் அடிப்படையில் இத்தகையதொரு மனநிலை இருக்கிறது. படைப்புமனம் இருந்தாலொழியப் படைப்பினைப் புரிந்துகொள்வது என்பது முடியாது.

TCA

❖ படைப்பாளி, அத்தகைய படைப்பு மனத்தைக் கலை வடிவோடு ஆக்குகிறான் ; படைப்புத் திறன் அவனிடம் முந்தி நிற்கிறது. அடிப்படையான படைப்பு மனத்தோடு அறிவியல் உளப்பாங்கும் விசாரணை உளப்பாங்கும் கூடிவருகிறபோது திறனாய்வாளன்

உருவாகிறான். ஒருவன் கலைஞன்; அடுத்தவன் அறிஞன்.

❖ ஒருவன் உணர்வால் எழுதுகிறான்; அடுத்தவன் அறிவால் எழுதுகிறான். ஆனால் இந்த இரண்டும் முரண்பாடு கொண்டவையல்ல என்பதும் எது முதன்மையாக இருக்கிறது என்பதுமே முக்கியம்.

TEACHER'S CARE ACADEMY
TCA
KANCHIPURAM
95665 35080

❖ 'படைப்பாளியாக ஆக முடியாமல் தோல்வியுற்றவன், திறனாய்வாளனாகிறான்' என்று மேலை நாட்டுத் திறனாய்வாளர்கள் கூறுவதுண்டு. இது, மிகையான கூற்று; எனினும், திறனாய்வாளனின் இலக்கிய உள்ளத்தை இந்தக்கூற்று வெளிப்படுத்துகிறது.

❖ படைப்பாளி, ஒரு அழகை அல்லது ஒரு பொருளை அல்லது அதன் சாரத்தைத் தனது படைப்பில் பொதிந்து / ஒளித்து வைக்கிறான்.

❖ திறனாய்வாளன் அதனைத் தேடி எடுத்துத்தருகிறான். படைப்பாளி, விடுகதை போடுகிறான்; திறனாய்வாளன் அதனை விடுவிக்கிறான். படைப்பாளி, பல சமயங்களில் மவுனமாகி நிற்கிறான்; திறனாய்வாளன் அந்த மவுனங்களை உடைக்கிறான்; அந்த மவுனங்களுக்கு விளக்கம் தருகிறான்.

❖ ஒரு படைப்பாளி, ஒரு திறனாய்வாளனுக்குள் மட்டும் முடிந்து விடுவதில்லை. பலர் வருகிறார்கள்; பல விளக்கங்கள் தந்துபோகிறார்கள். அது போலவே, திறனாய்வு, ஒரு படைப்புக்குள் மட்டும் நின்றுவிடுவதில்லை. ஒரு நேரத்தில் ஒரு படைப்புப்பற்றிப் பேசுவதாக இருந்தாலும், திறனாய்வாளன் சுதந்திரமாக 'வெளியே' சென்று வருகிறான்; பல செய்திகளைக் கொண்டு வருகிறான்.

## 8.1.3. இலக்கியமும் வாழ்க்கையும்

❖ திறனாய்வு, இலக்கியத்தின் மேல் அக்கறை கொள்கிறது என்றால், முக்கியக் காரணம் இலக்கியம் என்ன சொல்கிறது; அதனை எப்படிச் சொல்கிறது என்று அறிய வேண்டும்; அவ்வாறு அறிந்ததைச் சொல்ல வேண்டும் என்பது தான்.

❖ நாம் அறிந்த வாழ்க்கையோடு அது தொடர்பு கொண்டிருக்கிறது. நாம் அறிந்த வாழ்க்கையை அது பேசுகிறது. நம்மை அதுபற்றிச் சிந்திக்க வைக்கிறது. அவ்வாறிருக்கும் போது, அது செவ்வையாக இருக்க வேண்டும் என்று திறனாய்வு விரும்புகிறது.

❖ செவ்வையாக இருக்கிறதா என்று பார்த்து அதுபற்றி விளக்க வேண்டியிருக்கிறது. திறனாய்வின் கடமை இதுவாதலால், இலக்கியம் வாழ்க்கையோடு எவ்வாறு ஒன்றிணைந்து அதுபற்றிப் பேசுகிறது என்று ஆராய்வதில் திறனாய்வு விருப்பம் கொண்டிருக்கிறது.

## 8.1.4. திறனாய்வாளனும் வாழ்க்கையும்

❖ திறனாய்வு, நேரடியாக வாழ்க்கையைப் பற்றிப் பேசுவதில்லை. ஆனால் இலக்கியத்தின் வழியாக அதனை ஆய்வு செய்து மதிப்பிடுவதன் வழியாக வாழ்க்கையைப் பற்றியும் அதன் சாரங்கள் மற்றும் அறநெறிகள் பற்றியும் திறனாய்வு பேசுகின்றது.

- ❖ இலக்கியம் என்பது வாழ்க்கையைத் தட்டையாக, ஒரு நேர்முக வர்ணனையாகச் சொல்வதல்ல. அதற்கென ஒரு பார்வை, ஒரு நோக்கு, ஒரு வரையறை, உத்தி முதலிய எல்லாம் இருக்கின்றன. இவற்றை வெளிக்கொணர வேண்டும். இவற்றின் வன்மை, மென்மைகளைப் புலப்படுத்த வேண்டும்.
- ❖ வாழ்க்கை பற்றி இலக்கியப் படைப்பாளிக்கு எவ்வாறு பட்டறிவும் (அனுபவமும்), நோக்கமும், சார்பு நிலையும், விருப்பமும் இருக்கின்றனவோ, அதுபோல் திறனாய்வாளனுக்கும் உண்டு. மேலும், வாசகனுக்கு அத்தகைய வாழ்க்கை எவ்வாறு போய்ச் சேரவேண்டும் என்ற ஒரு பார்வையும் இலட்சியமும் உண்டு.
- ❖ எனவே திறனாய்வாளன், இலக்கியத்தைப் பார்க்கிறான். அது சொல்லும் வாழ்க்கையைப் பார்க்கிறான்; ஏன், எப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறான். வாசகனுக்கு இவை பற்றி விளக்குகிறான். திறனாய்வுக்கும் வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பு இந்த முனையில் அல்லது இந்தக் கோணத்தில் இருக்கிறது.

## 8.1.5. படைப்பாளியும் வாழ்க்கையும்

- ❖ இலக்கியம் படைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ள படைப்பாளிக்கு அதற்குரிய உந்துதல்களாகச் சில ஆர்வநிலைகள் இருக்கின்றன. அவை,

(அ) தன்னுடைய வாழ்க்கையனுபவம், வித்தியாசமானது, விசேடமானது, என்று அவன்(ள்) கருதுகிறான்(ள்).

(ஆ) பிறருடைய வாழ்க்கைப் பற்றி, அனுபவங்கள் பற்றி அறிந்து கொள்ள முயலுகிறான், கேட்டறிதல், உற்றறிதல், உய்த்தறிதல் என்பவற்றின் மூலமாக.

(இ) தன்னுடைய வாழ்க்கை பற்றியும் பிறருடைய வாழ்க்கை பற்றியும் அபிப்பிராயங்களையும் கருத்துகளையும் உருவாக்கிக் கொள்ள ஆர்வம் கொள்கிறான்.

(ஈ) இவற்றை வெளிப்படுத்திச் சொல்ல ஆர்வம் கொள்கிறான்; அல்லது இவற்றிற்கு உள் அர்த்தங்கள் கண்டு அவற்றைச் சொல்ல ஆர்வம் கொள்கிறான்; அல்லது மறைத்து, வேறு 'பதிலி'களை முன்னிறுத்த ஆர்வம் கொள்கிறான்.

(உ) எவ்வாறாயினும், இவற்றைக் கலையழகுடன் பிறர் மனங்கொள்ளுமாறு சொல்ல ஆர்வம் கொண்டிருக்கிறான்.

95665 35080

## 8.1.6. இலக்கியத்தின் பாடுபொருளும் வாழ்க்கையும்

- ❖ இலக்கியம், வாழ்க்கை பற்றியதாகத்தான் அமைய வேண்டும்; அதன் பாடுபொருள் (Theme) வாழ்க்கையே என்று பொதுவாகப் பலரும் கூறினாலும், தமிழ் மரபு இதனை வலியுறுத்தச் சொல்கிறது.
- ❖ தொல்காப்பியம், எழுத்து, சொல், தொடர் எனும் இவை பற்றி மட்டுமல்லாமல், இலக்கியம் பற்றியும் பேசுகிறது என்பதை நாம் அறிவோம். பொருள் அதிகாரம் என்ற மூன்றாவது அதிகாரம் கவிதைக் கொள்கை (Poetics) பற்றியது.

- ❖ இதில், அந்நூல் முதல்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பன பற்றிப் பேசுகிறது. இந்த மூன்றும் கவிதையில் இடம் பெறுவன. இவற்றுள் முதலும் கருவும் இயற்கையையும் இயற்கையோடு ஒட்டியவற்றையும் பேசுகின்றன.
- ❖ உரிப் பொருள் என்பது காதல் அல்லது அகவாழ்க்கை பற்றியது. இதுவே இன்றியமையாதது. முதலும் கருவும் இல்லாவிடினும் உரிப்பொருள் அமைந்திருக்க வேண்டும்.
- ❖ தொல்காப்பியம் கூறும் அகம், புறம் எனும் இரண்டும் இலக்கியத்தின் பாடுபொருள்களாகும்.
- ❖ இவ்றைப் பற்றியே அந்நூல் விளக்கமாகப் பேசுகிறது. அகம், புறம் எனும் இந்த இரண்டினை மையமாகக் கொண்டதுதான், அன்றைய இலக்கியக் கொள்கை.
- ❖ எனவே, இலக்கியம் வாழ்க்கையைச் சித்தரிப்பதையே நோக்கமாகவும் வழிமுறையாகவும் கொண்டது என்பது அறியப் பெறுகின்றது.

## 8.1.7. இலக்கியமும் வாழ்க்கையின் பரிமாணங்களும்

- ❖ வாழ்க்கை, ஒற்றைப் புள்ளியில் அமைந்ததல்ல. ஒற்றைக் கோடாக அமைந்ததல்ல. ஒரே பாதையில் செல்வதல்ல; ஒரே சீராகவும் போவதல்ல. பல கோலங்கள், பல போக்குகள், பல பரிமாணங்கள் (Dimension) உண்டு. வாழ்க்கை விரிவானது; ஆழமானது தொடர்ச்சியுடையது. வாழ்க்கை இவ்வாறு பன்முக மாகவும் பல தோற்றங்கள் கொண்டதாகவும் விளங்குவதால், இலக்கியம் அத்தகைய வாழ்க்கையைச் சொல்லுவது எளிதாகவும் இருக்கிறது; ஏற்புடையதாகவும் இருக்கிறது.
- ❖ வாழ்க்கை என்பது நிகழ்ச்சிகளாலும் நினைவுகளாலும் உணர்வுகளாலும் ஆனது. இலக்கியம், வாழ்க்கையை ‘அப்படியே’ சித்தரிப்பதில்லை. வாழ்க்கையை அனுபவமாக்கித் தன்வயப்படுத்திக் கொள்வது, இலக்கியத்தின் வழிமுறை.
- ❖ தன்னுடைய வாழ்க்கை அனுபவம் மட்டுமல்லாமல் பிறருடைய வாழ்க்கையிலிருந்து பெறப்படுபவற்றைத் தன்வயப்படுத்தித் தன் அனுபவமாக ஆக்கிக் கொள்வதும், இலக்கியத்திற்குரிய வாழ்க்கையனுபவமாகும்.
- ❖ எல்லோரும் எல்லா அனுபவங்களையும் பெறமுடியும் என்பதோ தன்னுடைய அனுபவங்களையெல்லாம் அல்லது அவற்றை மட்டுமே எழுத முடியும் என்பதோ சாத்தியமல்ல.

TCA

- ❖ எனவே, பிறருடையவற்றைத் தன்னுடையதாக ஆக்கிக் கொள்ள வேண்டும். கூடுவிட்டுக் கூடு பாய்வது படைப்பாளியின் பண்பு.

## 8.1.8. விளக்கமும் விமரிசனமும்

- ❖ ஆங்கில நாட்டின் புகழ்பெற்ற இலக்கியவாதி **மாத்யூ ஆர்னால்ட்**, ‘இலக்கியம் என்பது வாழ்க்கை விமரிசனமே’ (Literature is the criticism of life) என்று கூறிச் சென்றார்.

- ❖ சிலர், இலக்கியம் என்பது வாழ்க்கையைப் புலப்படுத்துவது (Expression of life) என்றனர்; இன்னும் சிலர் இலக்கியம் வாழ்க்கையை விளக்குவது (Interpretation of life) என்றனர்.
- ❖ வாழ்க்கையை அப்படியே சித்தரிப்பது இலக்கியமல்ல; அதன் அனுபவங்களையும் அர்த்தங்களையும் சொல்லுவதுதான் இலக்கியம். எனவே வாழ்க்கையை வெறுமனே, வருணிக்காமல் அதன் பல்வேறு கோணங்களையும் உள்மடிப்புகளையும், காரண காரியங்கேளாடு உணர்ந்து விளக்க வேண்டும்.
- ❖ உதாரணமாகத் தி.ஞானசேகரனின் குருதிமலை என்ற புதினம். இது, இலங்கைத் தேயிலைத் தோட்ட (இந்தியவமிசா வழி) தொழிலாளர்களின் வாழ்க்கை அவலங்களை நடப்பியலாக விளக்குகிறது. அவர்கள் படுகிற பாடுகளின் பல தன்மைகளையும் அவற்றிற்குக் காரணமான சமுதாய பொருளாதாரப் பின்புலங்களையும் முரண்பாடுகளையும் விளக்கிச் செல்கிறது.
- ❖ ஆ.வேலுப்பிள்ளையின் இனிப் படமாட்டேன் என்ற புதினம் - இது இலங்கையிலுள்ள இந்திய வமிசா வழித் தமிழர்களின் வாழ்க்கையையும், இந்தியாவுக்குத் திரும்பிவிட வேண்டும் என்ற ஊசலாட்ட எண்ணங்களையும், இந்தியாவுக்கு வந்து மீண்டும் குடியேறுவதில் ஏற்படும் அவலங்களையும் விமரிசனம் செய்கிறது. வாழ்க்கை பற்றிய இந்த விமரிசனப் பார்வைதான் ‘இனிப் படமாட்டேன்’ என்ற ஒரு முடிவுக்கு வரச் செய்கிறது.

**வாழ்க்கையும் பண்பாடும்**

95665 35080

- ❖ பொருளாதாரம், அரசியல், சமூகம், பண்பாடு எனும் இவற்றைப் பொருளாகக் கொண்டது வாழ்க்கை. இலக்கியத்தின் உள்ளடக்கமாக இருக்கும் வாழ்க்கையில் இவை உள்ளார்த்தமாக இருக்கின்றன.
- ❖ இலக்கியத்தை ஆராய்ந்து வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களைப் பகுத்து விளக்கும் பிரெஞ்சு நாட்டு அறிஞர் **தெயின் (H.A.Taine),** அத்தகைய இலக்கியத்தில் மூன்று பரிமாணங்கள் (Dimensions) இருப்பதாக விவரிக்கிறார்.

(அ) இனம் (Race): மக்களின், பாரம்பரியமாக வரும் / வெளிப்படும் தொகுப்பு.

(ஆ) பண்பாட்டுச் சூழல் (Milieu): மனிதன் வாழ்நிலையில், இயற்கை முதற்கொண்டு, சமூக நிலைகள், அரசியல் நிறுவனங்கள் வரை பல சூழல்களின் ஓர் ஒட்டுமொத்தநிலை.

(இ) காலத்தின் மனம் (moment): குறிப்பிட்ட இலக்கியம் தோன்றிய, மற்றும் அது சொல்லும் வாழ்க்குப் பின்புலமான காலத்தின், தேசத்தின் பொதுவான மனமும் உணர்வும்.

- ❖ எல்லாருடைய வாழ்க்கையிலும், வாழ்க்கையின் சிறு சிறு கூறுகளிலும், இந்த மூன்று பரிமாணங்களும் இருக்கின்றன என்று கூறுகிறார் தெயின். இலக்கியத்தில் காணக்கூடிய இந்த நிலைகளை திறனாய்வாளன் பகுத்து ஆராய்ந்து கூறுகிறான்.

❖ இலக்கியம் கூறும் பல்வேறுபட்ட வாழ்க்கையின் மூலம், அவ்வக்கால சமூக பண்பாடுகளை இனம் கண்டறிந்து, வகுத்தும் தொகுத்தும் திறனாய்வாளன் கூறலாம். இந்த முயற்சிகளில் பல தமிழ் அறிஞர்கள் ஈடுபட்டுத் தமிழ்ப்பண்பாடு பற்றி நிறைய எழுதியிருக்கிறார்கள்.

**மொழிசார் கலை**

❖ 'இலக்கியம், மொழிசார் கலை' (Verbal art). புகழ்பெற்ற மொழியாராய்ச்சியாளர் **ரோமன் யகோப்சன்** (Roman Jakobson) இந்த வரையறையைத் தருகிறார்.

❖ 'மொழிதான் ஒரு படைப்பின் அடிப்படை அம்சமாக எப்போதும் இருக்கும்' என்று வலியுறுத்திக் கூறுகிற **கான்ஸ்டாண்ட் ஃபெடின்** என்ற உருசிய இலக்கிய ஆசிரியர், "எழுத்தாளனுடைய படைப்புத் திறன் அல்லது செய்ந்நேர்த்தி பற்றிய பேச்சு, எப்போதும் மொழியிலிருந்தே தொடங்கப் பட வேண்டும்" என்று கூறினார்.

❖ படைப்பாளிக்கும் திறனாய்வாளனுக்கும் தரப்படுகின்ற ஒரு பொதுவான விதிமுறை இது.

❖ இலக்கியத்திற்கு உருவம் தருவது, மொழி. மொழியை முறையாகவும் திறன்படவும் கையாளுகிறபோதுதான், சொல்லுகிற செய்தி முறையாகவும் சிறப்பாகவும் வெளிப்படுகிறது. மொழியே சிந்தனையின் கருவி.

❖ தெளிவின்றிச் சிந்திக்கப்படுவது, எதுவும் தெளிவின்றியே வெளிப்படுகிறது. மொழியை முறையற்று கையாளுவது, முறையற்றுச் சிந்திப்பதாகவே முடியும். இவ்வாறு மொழித் திறன் இவ்வாறு முக்கியமானதாக உள்ளது.

**மொழித் தளம்**

இலக்கியத்தின் மொழி என்ன என்ன தளங்களிலிருந்து செய்யப்படுகிறது?

(அ) குறிப்பிட்ட காலம்

(ஆ) இடம்

(இ) இலக்கியத்தின் வகை (Genre and type)

(ஈ) படைப்பாளியின் தற்கூற்றுநிலை

(உ) கதைமாந்தர் பின்புலம் கூற்று

(ஊ) வாசகர் / படைப்பு வெளியாகும் இதழ்.

TEACHER'S CARE ACADEMY KANCHIPURAM 95665 35080

❖ காலம், இடம் என்பன குறிப்பிட்ட இலக்கியம் தோன்றிய அல்லது அவ்விலக்கியம் கூறுகிற சமூகச் சூழலும் செய்தியும் சார்ந்திருக்கின்ற தளங்களைக் குறிப்பிடுகின்றன. இவற்றின் விளக்கத்தை இந்தப் பாடத்தின் பிற்பகுதியில் பார்ப்போம்.

## 8.1.9. இலக்கிய வகைகளும் வேறுபாடுகளும்

❖ தனிநிலைக் கவிதை, வருணனைக் கவிதை, சிறுகதை, புதினம் முதலிய இலக்கிய வகைகள், மொழிநடையின் வேறுபாடுகளுக்குக் காரணமாக அமைகின்றன.

- ❖ தனிநிலைக் கவிதையின் முக்கியத் தேவை, உணர்வுகளை முன்னிறுத்துவதும் இசையைத் தழுவுவதும் ஆகலின் மொழியின் தளம் அதற்கேற்ப இருக்கும்.
- ❖ வருணனைக் கவிதை அல்லது காப்பிய வகைப்பட்ட கவிதையின் நோக்கம், நிகழ்ச்சிகளைச் சித்தரிப்பதும் கதை மாந்தர்களையும் அவர்தம் செயல்களையும் சித்தரிப்பதும் ஆதலின், அந்தக் கவிதைமொழி, அதற்கேற்ப அமைந்திருக்கும்.

### கூற்று நிலை

- ❖ புனை கதைகளில் கதைமாந்தர் கூற்றுக்கள் இடம் பெறுகின்றன. இம்மாந்தர்களின் சமூகப் பின்புலங்கள் வேறுபடலாம்; ஆண் பெண் வயது வேறுபாடுகள் இருக்கலாம். அப்போது, மொழியின் தளமும் வேறுபடும். பெரும்பாலான சூழல்களில் படைப்பாளியின் (நேரடியான) கூற்றுநிலைகள் வெளிப்படுகின்றன.
- ❖ கதை மாந்தர்கள் கூற்றுக்களினிடையேயும் இவை இடம் பெறுகின்றன. கதைமாந்தர் கூற்றுநிலையிலிருந்து, இத்தகைய கூற்று நிலை, மொழிநடையில் வேறுபட்டு அமைந்திருக்கும்.

TCA

### மொழி நடையும் வாசகரும்

- ❖ இறுதியாக, குறிப்பிட்ட இலக்கியம் யாருக்காக எழுதப்படுகிறதோ, அத்தகைய வாசகர்களை மனதில் கொண்டு மொழிநடை மாறுபடும்.
- ❖ காட்டாகக் குழந்தை இலக்கியத்தின் மொழிக்கும் கற்றோர் மொழிக்கும் உள்ள வேறுபாடு, வாசகர் தளத்தையொட்டியதே. சில படைப்பாளிகள் பத்திரிகையின் தேவைக்கேற்பத் தம் மொழியை அமைப்பர். ஒரே ஆசிரியர், வணிகப்பத்திரிகையில் எழுதுவதற்கும் இலக்கிய சஞ்சிகையில் எழுதுவதற்கும் வேறுபாடு உண்டு. நடைமுறையில் இது கண்கூடு.

### சொல்வளம்

- ❖ இலக்கியத்தின் மொழிதல் திறனுக்கு அடி இழையாக இருப்பது, சொல். மரபின் ஆளுகைக்கு உட்பட்ட சொல், உயிர்த்தன்மையுடையது. காலம், இடம் முதலிய சூழல்களுக்கேற்ப மாறுதலும் வளர்ச்சியும் அடைவது சொல்லின் சிறப்பு.
- ❖ சொல்வளம் என்பது நிறையச் சொற்களைப் பயன்படுத்துவது என்பது அல்ல; இலக்கியத்தின் பொருளுக்கும் அழகுக்கும் நோக்கத்திற்கும் ஏற்ற பொருள் உடைய - பொருள் ஆழமுடைய சொற்களைப் பயன்படுத்துவது என்பதாகும். இலக்கிய ஆசிரியன், அகராதிகளைத் தேடிப் போகிறவன் அல்ல. அகராதிகள், இலக்கியத்தைத் தேடிப் போக வேண்டாம்.

### இரண்டு பண்புகள்

- ❖ பொருள் தரும் நிலையில், சொல்லுக்கு, அல்லது மொழிக்கு இரண்டு பண்புகள் அல்லது செயல்பாடுகள் உண்டு. முதலில் நேரடிப் பொருள் தருவது (denotative / referential) இது உணர்வாய் அல்லாமல், அறிவால் ஊட்டப்படுவது.

- ❖ அறிவியல், சட்டம், அறிவிக்கை முதலியவற்றிற்குக் இது உகந்தது. இரண்டாவது குறிப்பு நிலையில் (Suggestrue / connotative) பொருள் தருவது. இது பெரிதும் உணர்வால் ஊட்டப்படுகிறது. இது, இலக்கியத்திற்கு உகந்தது.
- ❖ இலக்கியத்தில் அழகு தருகிற பொருள் அடுக்குகளுக்கு உதவுவது, இது. இந்த இருவகைச் செயல்பாடுகளையும், புகழ்பெற்ற ஆங்கிலத் திறனாய்வாளர் **ஐ.ஏ.ரிச்சர்ட்ஸ் (I.A. Richards)** அறிவியல் சார்ந்தது என்றும் உணர் அறிவை (Emotive) சார்ந்தது என்றும் வகைப்படுத்துகிறார்.(UGC SEP 2020)
- ❖ ஐ.ஏ.ரிச்சர்ட்ஸ், சொல்லுக்கு நான்கு வகையான பொருட்பண்பு உண்டு என்கிறார்.(UGC SEP 2020)

  (அ) அறிவு புலப்படுதல் (Sense)

  (ஆ) உணர்வு புலப்படுதல் (Feeling)

  (இ) தொனி அல்லது குறிப்புப் பொருள் (Tone)

  (ஈ) விருப்பம் அல்லது நோக்கம் (Intention)

95665 35080

- ❖ இலக்கியத்தின் சொல் பொருளுக்கு அகராதிகளைப் பார்ப்பது, பொருத்தமன்று; போதியதன்று; சூழமைவுப் பொருள் (contextual meaning), குறிப்புப் பொருள் (suggestive meaning), சார்புடைப் பொருள் (shades of meaning) என்று பல நிலைகள், இலக்கியத்தில் உண்டு. முக்கியத்தை ஆராய்கிறவர்கள், பொருட்களை, இலக்கியத்தின் சூழமைவுகளிலேயே ஆராய வேண்டும்.
- ❖ இலக்கியத்தின் மொழி, ஒரு பொதுவான தரம் கொண்ட (standard and common language) மொழியையே, பெரும்பாலும் தனது தளமாகக் கொண்டிருந்தாலும், உண்மைத் தோற்றம் (appearance of reality) மற்றும் நடைத்திறன் காரணமாக வட்டார மொழியையும் பிரதிபலிக்கின்றது.
- ❖ வட்டார மொழி (dialect) என்பது, முக்கியமாக இடம் சார்ந்தது. குறிப்பிட்ட இலக்கியம் சித்தரிக்கின்ற சமுதாயம், எந்தப் பகுதியைச் சார்ந்ததோ, அந்தப் பகுதியில் வழங்குகின்ற அல்லது அந்தப் பகுதியை இன்னதென அடையாளங் காட்டுகின்ற மொழியையே அது தனது தளமாகக் கொண்டிருக்கிறது.
- ❖ அந்த மொழியை வட்டாரமொழி என்கிறோம். இது மண்ணின் வாசனையோடு (regional colour) சேர்ந்தது, மேலும் தற்காலத்தில் சில வட்டாரங்கள், வட்டாரமொழிச் சித்தரிப்புக்கு உரியனவாகக் கருதப்படுகின்றன.
- ❖ குறிப்பாகச் சென்னை (முக்கியமாகச் சேரிகள் அல்லது அடித்தள சென்னை வாசிகள்), கொங்கு மண்டிலம், தஞ்சை, மதுரை, திருநெல்வேலிப் பகுதி, செட்டிநாட்டுப் பகுதி, மேற்குக் குமரி மாவட்டப் பகுதி முதலியவை.
- ❖ வட்டாரச் சித்தரிப்புக்கு உரியனவாகக் கருதப் படுகின்றன. கொங்குமண்டிலத்தின் ஆர்.ஷண்முகசுந்தரம், தஞ்சைத் தரணியின் தி.ஜானகிராமன், நெல்லைச்சீமையின்

***இன்றைய TRB பயிற்சியாளரே நாளைய அரசு பள்ளி ஆசிரியரே!***

*Teacher's Care Academy* கடந்த *14* ஆண்டுகளாக *TRB* தேர்வுகளுக்கான சிறப்பு பயிற்சியை வழங்கி வருகிறது. இதுவரை *10,000*-க்கும் மேற்பட்ட ஆசிரியர்களை அரசு வேலைகளில் வெற்றிகரமாக நியமிக்க உதவியதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். எங்கள் நிறுவனத்தில் அனைத்து *TRB* தேர்வுகளுக்கும் விரிவான பயிற்சிகள் உள்ளன, அவை:

- *PGTRB*
- *UGTRB*
- *SGT*
- *POLYTECHNIC TRB*
- *BEO*
- *TET Paper I & II*
- *College TRB*
- *Special Teachers*

95665 35080

கூடுதலாக, தமிழ்நாடு அரசு இப்போது அனைத்து அரசு பணிக்கான தேர்வாணையங்களுக்கு (*TRB, TNPSC, MRB, TNUSRB*) தமிழ் மொழி கட்டாய தகுதி தேர்வு (*Tamil Compulsory Exam*) முதற்கட்ட தேர்வாக அறிவித்துள்ளது இதற்காக தமிழ் மொழி கட்டாய தகுதி தேர்வு என்ற புத்தகத்தை பிரத்தியேகமாக உங்கள் *Teacher's Care Academy* வெளியிட்டுள்ளது. இந்த புத்தகம் அமேசானிலும் கிடைக்கிறது ஆனால் எங்களை நேரடியாக தொடர்பு கொண்டு வாங்கும் போது உங்களுக்கு கூடுதல் தள்ளுபடி கிடைக்கும்



## *PGTRB*

***PGTRB* தேர்விற்கு நாங்கள் அனைத்து மொழி பாடத்திற்கும் பயிற்சிகளை வழங்கி வருகிறோம் அதாவது**

- *Tamil*
- *English*
- *Mathematics*
- *Physics*
- *Chemistry*
- *Botany*
- *Zoology*
- *Economics*
- *Commerce*
- *Computer Science*
- *History*

**மேற்கண்ட அனைத்து படப்பிரிவுகளுக்கான *Study Material*-களுடன் *Psychology, Tamil Eligibility Book, Question Bank* மற்றும் *General Knowldge Material*-களும் வழங்கப்படும்**

## *TET (Teachers Eligibility Test)*

***TET* தேர்விற்கு நம் *Teachers Care Academy*-யில் *Paper I* மற்றும் *Paper II* என இரண்டு தாள்களுக்கும் பிரத்தியேகமாக பயிற்சிகளை வழங்குகிறோம்**

**இதற்கு தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டுள்ள பள்ளி பாட புத்தகத்தில் இருந்து குறிப்புகளை எடுத்து *Study Material*-களாக வழங்குகிறோம்**

**மேலும் *Psychology*-க்கு *TRB*-ஆல் வழங்கப்பட்டுள்ள பாடத்திட்டத்தை பின்பற்றி பல்வேறு *Reference Book*-லிருந்து குறிப்புகளை எடுத்து *Study Material*-களாக வழங்குகிறோம்**

## *UGTRB*

***TET* தேர்வில் வெற்றி பெற்ற ஆசிரியர்களுக்கு நடத்தப்படும் *UGTRB* போட்டி தேர்வுக்காக_அனைத்து மொழி பாடத்திற்கும் பயிற்சிகளை வழங்கி வருகிறோம் அதாவது**

- *Tamil*
- *English*
- *Mathematics*
- *Physics*
- *Chemistry*
- *Botany*
- *Zoology*
- *History*
- *Geography*

## ***SGTRB***

***TET* தேர்வில் வெற்றி பெற்ற ஆசிரியர்களுக்கு நடத்தப்படும் *SGTRB* போட்டி தேர்வுக்காக தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டுள்ள பள்ளி பாட புத்தகத்தில் இருந்து குறிப்புகளை எடுத்து *Study Material*-களாக வழங்குகிறோம்**

## ***BEO***

***BEO* தேர்வுக்காக *TRB*-ஆல் பாடத்திட்டம் வெளியிடப்பட்டுள்ளது அந்த பாடத்திட்டத்தின் அடிப்படையில் அனைத்து பாடத்திற்கும் உங்கள் *Teachers Care Academy* அலகு *(Unit-Wise)* வாரியாக *Study Material*-களை வழங்குகிறது.**

## ***POLYTECHNIC TRB***

***Polytechnic* தேர்விற்காக உங்கள் *Teachers Care Academy* பின்வரும் மொழி பாடத்திற்கு பயிற்சிகளை வழங்கி வருகிறது. அதாவது,**

- *Civil*
- *EEE*
- *ECE*
- *CSE*
- *Mechanical*
- *English*
- *Mathematics*
- *Physics*
- *Chemistry*

## ***College TRB***

**தமிழ்நாட்டில் அரசு கல்லூரிகளில் காலியாக உள்ள உதவி பேராசிரியர் பணிக்கு *TRB* வெகு விரைவில் போட்டித் தேர்வை நடத்த இருக்கிறது**

**அந்த தேர்வுக்காக நம் *Teachers Care Academy*-யில் பின்வரும் மொழி பாடத் திட்டத்திற்கும் பயிற்சிகளை வழங்கி வருகிறது**

- *Tamil*
- *English*
- *Mathematics*
- *Physics*
- *Chemistry*
- *Botany*
- *Zoology*
- *Economics*
- *Commerce*
- *Computer Science*
- *History*
- *Geography*

***Special Teachers***

***TRB*-ஆல் நடத்தப்படும் சிறப்பாசிரியர் தேர்வுக்காக நம் *Teachers Care Academy*-யில் பின்வரும் பாடத்திட்டத்திற்கு பிரத்தியேகமாக பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. அதாவது,**

- ***Sewing***
- ***Drawing***
- ***Music***
- ***PET***

**மேற்கண்ட அனைத்து தேர்வுகளுக்கும் உங்கள் *Teachers Care Academy* பலவிதமான பயிற்சிகளை வழங்குகிறது, அவை**




**இந்த ஆண்டு *(2024) TNPSC Batch*-யும் அறிமுகம் செய்திருப்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். எங்கள் வழிகாட்டுதல் வரவிருக்கும் தேர்வுகளில் நீங்கள் வெற்றி பெற உதவும் என நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.**

**உங்கள் அரசு ஆசிரியர் பணி கனவு நிறைவேற வாழ்த்துக்கள்*!***

**அன்புடன்,**

***Teacher's Care Academy***




Teachers care Academy is the foremost coaching Institution for various competitive examinations such as P.G.TRB, TET Papers I &II TNPSC including special Teachers Eligibility Test. The Academy was established on 5th April 2013 by learned energetic and multifaceted chairperson Mrs. RAVIMAGESHWARI in the holy temple town of Kanchipuram.

# Our Other Competitive Exam. Guides

- PG-TRB (Tamil, English, Mathematics, History, Physics, Chemistry, Commerce, Economics, Botany, Zoology)
- Polytechnic-TRB (English, Mathematics, Physics, Chemistry, CSE, ECE, Civil, EEE, Mech)
- Computer Instructor Grade-1
- Block Educational Officer
- Teachers Eligibility Test (TET Paper-1 & Paper-2) & UG-TRB
- TNEB – Assessor
- Tamil Nadu – Forest Guard
- TNPSC ( Group-1, Group-2, Group-3, Group-4)
- NEET

*Your Success is Our Goal....*

Teachers Care Academy

tcaexamguide

tcaexamguide@gmail.com

www.tcaexamguide.com

**Teachers Care Publication**

38/23, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1

Mobile : 95665 35080, 97862 69980

Help Line Numbers : 9360268118 7639967359

1st Edition